கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

226


மாசி

01.02.2024

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



குமுதினி கலையரசன்

மாயன்

சி.சிறீறங்கன்

இ.இராஜேஸ்கண்ணன்

திக்குவல்லைக்கமால்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

சித்தாந்தன்

கி.நடராசா

த.கலாமணி

கோகிலா மகேந்திரன்

தாட்சாயணி

அ.பௌநந்தி

சா.கோகுலன்

கெக்கிறாவ ஸுலைஹா

கலை இலக்கிய மாத சஞ்சிகை
2024 - மாசி (01.02.2024)

# பொருளடக்கம்

சிறுகதைகள்

குமுதினி கலையரசன் - 08
மாயன் - 13
சி.சிறீறங்கன் - 18



கவிதைகள்

அ.பௌநந்தி - 07
சா.கோகுலன் - 10
த.கலாமணி - 15
கெகிறாவ ஸுலைஹா - 18



நூல் விமர்சனம்

தாட்சாயணி - 40

தொடர் நாவல்

வ.ந.கிரிதரன் - 25
தமிழ்க்கவி - 38

கட்டுரைகள்

**மொழிசார் மானிடவியல் ஆய்வு மூலமாக வழக்கு அகராதிகள்: பேராசிரியர் ஆ. சதாசிவத்தின் "ஈழத்துத் தமிழ் வகைக்கு அகராதி:யை முன் வைத்த ஒரு கருத்துப் பகிர்வு**
இ.இராஜேஸ்கண்ணன் - 03

**அ.ந.கந்தசாமி வாழ்வும் எழுத்தும்**
திக்குவல்லைக்கமால் - 11



**அவுஸ்திரேலியாவின் "களவாடப்பட்ட தலைமுறை: அபரோஜின பழங்குடியின மக்கள் மீதான படுகொலை"**
ஐங்கரன் விக்கினேஸ்வரா - 16

**வெயிலை அமர்த்த ஒரு மரநிழலைத் தர மறந்துபோனேன் லலிதகோபன் கவிதைகள்**
சித்தாந்தன் - 20

**பழந்தமிழ் இலக்கியங்களில் அறிவியல் கருத்துக்கள் மருத்துவம் தொடர்பான கருத்துக்கள்**
கி.நடராசா-29

**சொல்ல நினைத்தவை - 02**
த.கலாமணி - 36

**முடிவைத்தொடுவாய் முயன்று - 02**
கோகிலா மகேந்திரன் - 38

# ஜீவநதி

**2024 மாசி இதழ் - 226**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.



**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்



**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/=
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY


# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## கால வேகம்

காலம் மிக விரைவாகக் கடந்து கொண்டிருக்கின்றது. நேற்று இருக்கின்ற மனிதன் இன்று இல்லை... எண்ணுகின்ற பணிகள் பல, செயற்படுத்தப்படுகின்ற பணிகள் சில. மனித வாழ்க்கை, இன்றைய நிலையில் பொருளாதாரத்தின் தேடலாகவே அமைந்து விடுகின்றது. அவசர யுகத்தில் எல்லோருமே அவசரமாக செயற்பட்டுக் கொண்டிருக்க வேண்டியுள்ளது. நின்று நிதானித்து எதையும் செய்யும் அளவிற்கு மனிதனுக்கு நேரம் கிடைப்பதும் அரிதாகவே உள்ளது. இந்த துரித உலகில் புத்தகங்களை வாசி வாசி எனச் சொல்வது கூட பொருத்தமற்றதாக சிலவேளை தோன்றும், இருந்தாலும் புத்தகங்களே பலருக்கு மன ஆறுதலாக அமைவதை யாரும் மறுக்க முடியாது.


ஈழத்தில் இருந்து சாதியம் பற்றிப் பேசப்பட்டு வருகின்ற போதிலும் அது தொடர்பான முறையான பதிவொன்று சரியாக மேற் கொள்ளப்பட்டு வராமையை உணர்ந்து ஜீவநதி தனது 200 ஆவது இதழை சாதியச் சிறப்பிதழாக வெளியிட்டு ஓரளவான விடயங்களை ஆவணப்படுத்தியுள்ளது. பலருக்கு அந்த இதழின் வருகை தெரியாது. கால வேகத்தில் அது வெளிவந்ததே தெரியாது போகலாம். குறித்த இதழை பெற்றவர்கள் தங்கள் நண்பர்களுக்கும் வாசகர்களுக்கும் அந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். இதழின் விலை 800.00.(240 பக்கம்). சாதியம் பற்றி கொக்கரித்துக் கொண்டு இருக்கும் பலர் கூட இந்த இதழை பெற்றதாக தெரியவில்லை. இவ்வாறு தான் கால வேகத்தில் எமது இலக்கியம் மறையாது பாதுகாக்கப்பட வேண்டும் என்னும் நோக்குக்கு அமைய ஜீவநதி நாவல் சிறப்பிதழ், சிற்றிதழ் சிறப்பிதழ் என்பவற்றை வெளிக்கொண்டு வந்தது. அந்த இதழ்கள் கூட ஜீவநதிக்கு பெரும் நஷ்டத்தை தந்த போதும் ஜீவநதி 200 ஆவது இதழையும் பெரும் சிறப்பிதழாக வெளியிட்டுள்ளது. ஜீவநதி தொடர்ந்து தன்னாலான ஆவணப்படுத்தல் பணிகளை மேற் கொள்ளும். வாசகர்கள் பயன் பெறுங்கள்.

- க.பரணீதரன்


**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை,
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்

இ.இராஜேஸ்கண்ணன்



# மொழிசார் மானிடவியல் ஆய்வு மூலமாக வழக்கு அகராதிகள்: பேராசிரியர் ஆ. சதாசிவத்தின் "ஈழத்துத் தமிழ் வழக்கு அகாராதி"யை முன்வைத்த ஒரு கருத்துப் பகிர்வு

தமிழ் மரபில் அகராதிகள் பல வகைப்பட்டவை. தமிழ் நிகண்டுகள், சொற்களஞ்சியங்கள், அகராதிகள் என்பவற்றுக்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன. எனினும் பொதுவான நோக்கில் அவை சமதைகளாகவே பேசப்பட்டு வருகின்றன. அகராதி எனும் வகைப்பாட்டினுள் கலைக்களஞ்சியங்கள், மொழி அகராதிகள், சிறப்பு அகராதிகள் உள்ளடங்குகின்றன. கலைக்களஞ்சியங்கள் பொதுக் கலைக்களஞ்சியங்கள், சிறப்புக் கலைக்களஞ்சியங்கள் என்று வரையறுக்கப்படு கின்றன. மொழி அகராதிகள் ஒருமொழி, இருமொழி, பன் மொழி அகராதிகளாக அமைகின்றன. மொழி அகராதி களிலே காலவிளக்க அகராதிகளும் உள்ளடங்குகின்றன. மொழி அகராதிகளே பொதுநிலையில் அகராதிகள் என்று கருதப்படுகின்றன. சிறப்பு அகராதி களில் சொல் முறை பற்றிய அகராதிகள், குறித்தவொரு வழக்குப் பற்றிய அகராதிகள், விதிப்பு முறைகள் பற்றிய அகராதிகள், மரபுச் சொல்வகை அகராதிகள் எனும் வகைமைகள் வகுத் துரைக்கப்படுகின்றன. இந்தச் சிறப்பு அகராதிகள் எனும் வகைமையில் பழமொழிகள், மரபுத் தொடர்கள், வழக் காறுகள் தொகுக்கப்படுகின்றன. "வழக்குகள்" தொகுக்கப்படுவதில் கரிசனை கொண்ட பல ஆய்வாளர் கள் நம் மத்தியில் இருந்தே வந்துள்ளனர். பல்கலைக் கழகங்களினுள்ளும் அவற்றுக்கு வெளியிலும் பல ஆய்வறிஞர்கள் குறிப்பிடத்தக்க பணிகளை ஆற்றி வந்துள்ளனர்.

வழக்கு அகராதிகள் தொகுக்கப்படும் முயற்சிகள் தமிழ்ச் சூழலில் மிக நீண்டகாலமாகவே நடைபெற்று வந்துள்ளன. "வழக்கு" என்பது "பயில்வு" என்றும் கருதப்படலாம். பயில்விலுள்ளவற்றை அகராதி யாக்கும் முயற்சிகள் பிராந்திய மற்றும் மக்கள் குழுக் களின் தனித்துவ அம்சங்களின் பின்புலத்தில் வைத்துப் பார்க்கப்பட வேண்டியவை. பொதுவாகவே மொழியை பயன்படுத்துவதில் இலக்கிய வழக்கு, பேச்சு வழக்கு என்று இருவகை வழக்குகள் உள்ளன என்பர். இந்த இரு வழக்குகளிலும் பேச்சு வழக்கிலுள்ளவற்றை தொகுத் தல் என்பது மிகுந்த உழைப்பை வேண்டுவது. அது வெறுமனே "மேசை ஆய்வாக" அமைவதில்லை. விரி வான களஆய்வுகளால் சாத்தியமாவது. அத்தகைய தொரு உழைப்பை 1960, 1970களில் பேராசிரியர் ஆறுமுகம் சதாசிவம் அவர்கள் முன்னெடுத்திருந்தார். முடிவுறா நிலையிலிருந்த அவர் விட்டுச்சென்ற தொகுப்பொன்றை "ஈழத்துத் தமிழ் வழக்கு அகராதி"யாக நவரட்ணம் குகபரன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு திருஞானேஸ்வரி சதாசிவம் அவர்களால் 2022ஆம் ஆண்டு பதிப்பித்து வெளியிடப்பட்டிருந்தது. ஈழத்துத் தமிழ் பிரதேசங்களில் சேகரிக்கப்பட்ட வழக்குச் சொற்களின் அகராதியாக விளங்கும் அந்த ஆவணம் இலக்கிய வழக்கு மற்றும் பேச்சு வழக்கிலுள்ள சொற் களின் தொகுப்பாக அமைந்துள்ளது. இத்தகைய அகராதிகள் மொழி அகராதிகள் எனும் நிலையைக் கடந்து மொழியியல், சமூகவியல், மானிடவியல், பண் பாட்டியல் மற்றும் நாட்டாரியல் முதலான துறையிடை யிட்ட ஆய்வுநோக்கினை வேண்டிநிற்கின்றன.

தமிழியல் ஆய்வுத் துறைகளில் "அகராதியியல்" தனித்துவம் மிக்கதும் மிகுந்த பிரயத்தனத்துடன் செய்யப்படுவதுமான ஒரு புலமைத்துவ நெறியாக வளர்ந்துள்ளது. அகராதியியல் துறையானது வெறு மனே சொற்பொருள் விளக்கத்தின் தொகுப்பாக்கத்தின் புலமைசார் கற்கையாகவன்றி சொற்பொருள் புழக்கத் தின் "சமூகமொழியியல்"(socio-linguistics) பின் புலத்தை யும், "மொழிசார் மானிடவியல்'(linguistics anthropology) பின்புலத்தையும் தன்னமைவாக்கம் செய்துகொண்டு மிளிர்ச்சியடைந்த துறையாகும். இவை இரண்டும் மொழியியலை சமூகவியல் மற்றும் மானிடவியல் அடிப் படைகளில் புரிந்துகொள்வதற்கான துறைகளாயின. மொழியியல் ஆய்வுகளின் இணைத்துறையாக அகராதியியலை வளர்த்தெடுத்த ஆய்வாளர்கள் பலர் உளர். "வழக்கு அகராதி" என்பது சமுதாயங்களில் மக்கள் வாழ்வில் புழக்கத்திலுள்ளதும், புழக்கத்திலிருந்து மறைந்தனவுமான சொற்களைத் தொகுத்து அவற்றுக் கான பொருள்களை விளக்கும் அகராதிகளாக அமைந்தன. மக்கள் வாழ்வில் புழக்கத்திலுள்ள சொற்கள் தொடர் பான பொருள் விளக்கத் தொகுப்பாக்கம் என்பது தவிர்த்து விட முடியாது பண்பாடு தொடர்பான ஆழமானதும்

அகலமானதுமான புரிதலோடு நிகழவேண்டியது மாத்திரமன்றி, தொகுப்பாக்கத்தின் பின்னான மொழிசார் மானிடவியல், சமூகமொழியியல், நாட்டார் வழக்காற்றியல் துறையிடையிட்ட அறிவுப் பிரயோகத்தின் வழியாக ஆய்வுசெய்யப்பட வேண்டியது மாகும்.

தொன்றுதொட்டு ஈழத்து அறிஞர்கள் பலராலும் அரும்பொரும் அகராதி முயற்சிகள் செய்யப்பட்டுவந்துள்ளன. வீரமாமுனிவர் தொகுத்த "சதுர் அகராதி"யைத் தொடர்ந்து ஈழத்தில் தமிழ்மொழி அகராதி, தமிழ்ச்சொல் அகராதி, இருபதாம் நூற்றாண்டுப் பேரகராதி, மாணவர் தமிழகராதி, மதுரைத் தமிழ்ச்சங்கப் பேரகராதி, சொற்பொருள் விளக்க அகராதி முதலிய பல அகராதிகள்(பட்டியல் முழுமையானதல்ல) தோன்றின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முதல் காலாண்டிலும் தொகுக்கப்பட்ட இவைபோன்ற அகராதிகள் இலக்கிய வழக்கு அல்லது எழுத்துமொழி வழக்கில் முதன்மை பெற்றவை. இவற்றுக்கு அப்பால் தமிழ்ப் பழமொழிகள் தொகுப்பாக பேர்சிவல் பாதிரியாரால் வெளியிடப்பட்டது. 2018ஆம் ஆண்டில் அது விருபா குமரேசன், சிவஞானசீலன் ஆகியோரால் வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மீள்-பதிப்பாக்கம் செய்யப்பட்டது. அத்துடன் 2019இல் நடராசா சிறிரஞ்சன் என்பவரால் "யாழ்ப்பாணத்துத் தமிழ் அகராதி" வெளியிடப்பட்டது. பேராசிரியர் சு.சுசீந்திரராஜா அவர்களால் ஆக்கப்பட்ட "இலங்கை-இந்திய தமிழ் வழக்குகளில் சொற்களின் பயன்பாடு" எனும் நூல் 2015ஆம் ஆண்டில் க.இரகுபரனால் பதிப்பிக்கப்பட்டது. சுபதினி ரமேஷின் "ஈழத்துத் தமிழ் சிறப்புச் சொற்கள்" 2005ஆம் ஆண்டு வெளிவந்தது. 2015இல் பண்டிதர் வீ.பரந்தாமனின் "தமிழ் உறவு முறைச் சொல்வழக்கு அகராதி" வெளியிடப்பட்டிருந்தது. 2023ஆம் ஆண்டில் பிரமஸ்ரீ ச.சுப்பிரமணிய சாஸ்திரிகளின் "சொற்பொருள் விளக்கம்" எனும் தமிழகராதி வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையுடன் தி.செல்வ மனோகரன், சி.ரமணராஜா ஆகியோரால் பதிப்பாக்கம் செய்யப்பட்டது. இத்தகைய முயற்சிகள் இன்றுவரை அகராதி உருவாக்கத்தில் ஆய்வறிஞர்கள் கொண்ட கரிசனையைப் புலப்படுத்துகின்றது.

பேராசிரியர் ஆறுமுகம் சதாசிவம் அவர்களின் "ஈழத்துத் தமிழ் வழக்கு அகராதி" மேற்குறித்த அகாராதிகளி லிருந்து வேறுபட்டது. இலக்கிய மொழி வழக்கிலுள்ள சொற்களையும் சாதாரண மக்கள் வாழ்வில் புழக்கத்திலுள்ள சொற்களையும் தொகுத்து, அவற்றுக்கு தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழி விளக்கங்கள் தரப்பட்டுள்ளதுடன் சில விசேடமான சொற்கள் நிலவுகின்ற பிரதேசங்கள் எவையெவை என்று குறித்தும் காட்டப்பட்டுள்ளன. நாட்டார் வழக்காற்றில், சாதாரண மக்கள் வாழ்வில் பயில்வியுள்ள ஏராளமான சொற்கள் அவற்றுக்கான தெளிவான விளக்கங்களுடன் பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்தொகுப்புக்கான




பதிப்பாசிரியர் உரையில் ந.குகபரன் "பேராசிரியரது பெரும்பிரிவால் முற்றுப் பெற்றிருக்கா விடினும் முக்கியமானதொன்றாகும்" என்று குறிப்பிடுவது கவனத்தில் கொள்ளத்தக்கது. முற்றுப் பெறாமைக்கான ஆதாரங்கள் ஆங்காங்கே காணப்பட்டாலும் கூட, இந்த வழக்கு அகராதி முக்கியத் துவம் வாய்ந்ததே. இத்தகைய சிறப்பு அகராதி வகை களை ஆய்வு செய்வதற்கான முறையியல்சார் அடிப் படைகளை பல மொழிசார் மானிடவியல் ஆய்வாளர் களின் ஆய்வுகளின் வழியே கண்டடையலாம். 1960 களில் Dell Hymes எனும் அறிஞர் தான் எழுதிய பல்வேறு கட்டுரைகளில் "மொழிசார் மானிடவியல்" பற்றி குறிப் பிட்டிருந்தார். அவர் மாத்திரமன்றி பண்பாடு-சமூகம்-மொழி எனும் மூன்று துறைகளையும் ஒன்றுக்கொன்று அவசியமான சார்புநிலைக்குரியவை என்று கருதி ஆய்வு செய்த வெளி நாட்டு அறிஞர்கள் பலர் குறிப்பிடத்தக்க வர்கள். அவர் களில் Bronislaw Malinowski, Boas, Edward Sapir, Erving Goffman, Silversetein, Carl Voegelin, Benjamin Lee Whorf, Morris Swadesh, Elinor Ochs, Bambi B. Schieffelin, Mikhael Bakhtin, Stephen Levinson, Penelope Brown முதலானவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். மொழிசார் மானிடவியல் என்பது மானிடவியல் துறைசார் அனுபவத் தினுள் நின்றவாறு பேச்சு மற்றும் மொழி தொடர்பாக ஆய்வுசெய்யும் துறையாகும். மொழியானது சிந்திப்ப தற்கு மாத்திரமன்றி, அதனிலும் மேலாக "பண்பாட்டு பயில்வாக"(cultural practice) அமைகின்றது. அதாவது மொழியை ஒரு சமூக கருவியாகவும், பேச்சை ஒரு பண் பாட்டுப் பயில்வாகவும் கருதி, பண்பாட்டுக்கும் மொழிக்கும் இடையிலான உறவினை மொழிசார் மானிடவியல் ஆராய்கின்றது. மானிடவியலாளர்கள் செய்கின்ற மொழி பற்றிய ஆய்வுகள் மொழிசார் மானிடவியலாகாது. மாறாக, மானிடவியல் நோக்கில் மொழியை ஒரு பண்பாட்டுப் பயில்வாக கற்றுக்கொள்வதே மொழிசார் மானிடவிய லின் நோக்காகின்றது. இதனை "பேச்சின் இன வரைவியல்" (ethnography of speaking) என்று Hymes குறிப்பிடுகின்றார். மொழியின் வழியாக சமூக அர்த்தங் களும் பண்பாட்டு அர்த்தங்களும் எவ்வாறு கடத்தப் படுகின்றன என்பதை பேச்சின் இனவரைவியல் விளக்கும்.

நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள் தொடர்பில் ஆறு. இராமநாதன் பதிப்பித்த நூலொன்றுக்கு "தமிழ் நாட்டார் வழக்காற்றுத் தொகுப்பு – ஒரு மதிப்பீடு" எனும் தலைப்பில் முனைவர் தே. லூர்து எழுதிய குறிப்பில் "பழமொழிகள் வழங்கும் சூழல் முதலிய வற்றைத் தொகுக்காது வெறும் பாடத்தை மட்டும் தொகுப்பதன் பயன் மிகமிகக் குறைவே. வெறும் பாடத்தை(text) மட்டும் வைத்துக்கொண்டு எவ்வித ஆய்வும் செய்ய இயலாது. நாட்டார் வழக்காற்றியல் ஆய்வின் முதன்மை இடம் வழக்காறு களைச் சேகரிப்பவனுக்கே உரியது" என்று குறிப்பிடுகின்றார். இங்கு பழமொழிகள் தொடர்பில் மாத்திரம் சொல்லப்பட்ட கருத்து, மக்கள் வாழ்வுடன் தொடர்புடைய எந்தவொரு வழக்கின் தொகுப்பாக அமைந்துவிட்ட "பனுவலுக் கும்" (text) பொருந்தக் கூடியதே இது எல்லாவிதமான

வாய்மொழி வழக்குக்கும் பொருந்துவதே. பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்கள் மொழியியலின் அடித்தளத்தில் இருந்தபடி சமூகவியல், மானிடவியல், நாட்டாரியல் துறைகளின் அறிவின் பின்புலத்துடன் இந்த அகராதிக்கான சொற் தொகுப்பைச் சேகரித்துள்ளார். அந்தச் சொற்தொகுப்பு வழக்காறுகளின் சேகரமாக அமைந்துவிடுகின்றது. வழக்காறுகளின் சேகரமாக அகராதிகள் அமைந்து விடுவது அவற்றின் "பனுவல் பகுப்பாய்வை"(textual analysis) பயன்மிக்கதாக ஆக்கும்.

"பேராசிரியர் ஆ.சதாசிவம் அவர்கள் பேச்சு வழக்கு அகராதி, இலக்கிய வழக்கு அகராதி என இரண்டு தொகுதிகளாக ஈழத்துத் தமிழ் அகராதியை வெளியிடத் திட்டமிட்டிருந்தார்" என்று பதிப்பாசிரியர் குகபரன் குறிப்பிடுகின்றார். உண்மையில் பதிப்பிக்கப் பட்ட இந்த அகராதியின் சொற்பொருள் சேகரம் "ஈழத்துத் தமிழ்ப் பேச்சு வழக்கு அகராதி" ஒன்றின் வரவுக்கான பேராசிரியரின் முயற்சியை சற்று அதிகப் படியாகவே தெரியப்படுத்தி நிற்கின்றது. சேகரமாகி யுள்ள இலக்கிய வழக்குச் சொற்களைக் காட்டிலும் பேச்சு வழக்குச் சொற்களின் தொகை அதிகமாகத் தெரி கின்றது. அவ்வாறு ஒன்று தனித்து வெளி வந்திருக்கு மாயின் அதன் சமூகமொழியியல் மற்றும் மொழிசார் மானிடவியல் பெறுமானம் மேலும் வலுப் பெற்றிருக்க வாய்ப்பு இருந்திருக்கும். அந்த நிலையில் மொழி, பண்பாடு. சமூகம் ஆகியவற்றுக்கான "இடை இணைவு" பற்றிய விரிவான ஆய்வுக்கான மூலமாக அது அமைந் திருக்கும். அத்துடன் மொழிசார் மானிடவி யலுடன் தொடர்புடைய "கருத்தாடல் பகுப்பாய்வுக்கு" (discourse analysis) அது பெருவாய்ப்பாக அமைந் திருக்கும்.

இந்த அகராதியிலுள்ள இலக்கிய மொழி வழக்கு களைக் கடந்து, பேச்சு வழக்கிலுள்ள சொற்களை கருத்திலெடுத்து ஆய்வுசெய்ய விளையும் ஒருவருக்கு பல விடயங்கள் புலனாகும். அவற்றில்,

- மொழிசார் மானிடவியலாளர்கள் மற்றும் சமூக-மொழியியலாளர்களின் கருத்துப்படி, பண்பாட்டு அர்த்தங்கள் மற்றும் பயில்வுகளை சமூக வரலாற்றுப் பின்புலத்தில் கற்றுக்கொள்வது மொழிபற்றிய கல்வியில் முக்கியமானது. வழக்கு அகராதிகளில் தொகுக்கப்படும் சொற்கள் அதற்கான ஆய்வு விரிவாக்கத்துக்கான அடிப் படைகளைத் தருகின்றன. இந்த வழக்கு அகராதியில் உள்ளடங்கியுள்ள தொழில்சார் சொற்கள், சடங்குசார் குறியீட்டுச் சொற்கள், அந்நிய சொற்களாக வந்து சேர்ந்த சொற்கள் என்பவற்றின் பின்னால் சமூக வர லாற்றுத் தகவல்களை ஆராயும் தூண்டல் ஏற்படு கின்றது. எடுத்துக்காட்டாக "அலுப்பாந்தி"(ப.34) என்ற வழக்குச் சொல்குறித்த விளக்கம் alphandigo எனும் டச்சு சொல்லாக அமைகின்றது என்று விளக்கப் படுகின்றது. யாழ்ப்பாணத்தில் குருநகர் எனும் புறநகர் பகுதியில் அமைந்திருந்த அலுப்பாந்தி எனும் துறைமுகம் யாழ்ப்பாணத்து சமூக மற்றும் வணிக வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற இடமெனக் கருதி வரலாற்றா சிரியர்கள் மற்றும் தொல்லியலாளர்களின் கவனத்தை ஈர்த் துள்ளமை குறிப்பிடத்தக்கது.
- மனிதனின் "பயில்வுகளின்" மொழியியலைக் (linguistics of human praxis) கற்றுக்கொள்வது என்பது தொடர்பாடலின் இனவரைவியலைக் (ethnography of communication) கற்றுக்கொள்வதா கின்றது. வழக்கு அகராதிகள் இதற்கான பெருந் துணையா கின்றன. எடுத்துக்காட்டாக "கோர்க் காலி"(ப.187) எனும் சொல் மக்களிடம் காணப் படும் புழங்கு பொருள் பண்பாட்டில் பயன்பாட்டில் அருகிவரும் சொல்லாகும். இந்தச் சொல்லுக் கான விளக்கத்தை பெறுகின்றபோது அது மக்கள் வாழ்வின் புழங்கு பொருள் பண்பாடு தொடர்பான இனவரைவியல் சார்ந்த விளக்கங்களை ஆராயும் உந்தலை தரு கின்றது. அவ்வாறே உறவு முறைச் சொற்கள், ஆட் குறிப்புச் சொற்கள், விழிப்புச் சொற்கள் என்ப வற்றின் பின்னேயுள்ள இன வரைவியல் சார்ந்த தொடர்பாடல் விளக்கங்கள் பெறப்படுகின்றன. குறிப்பாக மக்கள் தொடர் பாடலில் "அவ", "அவக", "அவகள்", "அவங்கள்" என்பவற்றுக் கிடையிலான தொடர் பாடல் வேறு பாடுகளின் சிறப்புத்தன்மையை இந்த வழக்கு அகராதி ஒரே பக்கத்தில்(ப.35) விளக்கு கின்றது.
- பொதுவாகவே மொழிசார் மானிடவியல் மொழி யின் கட்டமைப்புத் தொடர்பாக அக்கறை கொள் கின்றது. மொழியின் கட்டமைப்பு பற்றிய ஆய்வுகள் சமூக நிலவரத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்கள் எப்படி மொழியுடன் சம்பந்தப்படு கின்றது என்பதை விளக்கும். அதாவது சமூகச் செயல்களின் அர்த்தங்கள், சமூக வாழ்வு என்ப வற்றின் சித்திரத்தை மொழி எவ்வாறு புலப் படுத்துகின்றது என்பதைக் குறித்த அக்கறையே இதுவாகும். இந்த அக்கறை மக்களின் வழக்கை அகராதியாக தொகுக்கும் ஆய்வாளர்களிடம் இருப்பது அவசியம். இதனை இந்த வழக்கு அகராதி கருத்தில் கொண்டுள்ளது. இந்த அகராதியில் ஈழத்தின் பிராந்திய வேறுபாட்டை பிரதிபலிக்கும் சொற்கள் குறித்துக்காட்டப் பட்டுள்ளன. அந்தச் சொற்கள் அந்தந்தப் பிர தேசத்து மக்களின் சமூக வாழ்க்கை நிலவரத் துடன் தொடர்புடைய அர்த்தங்களை வெளிப் படுத்துவனவாக அமைந்துள்ளன. ஈழத்துத் தமிழ்ச் சூழலில் பேச்சு வழக்கிலுள்ள சொற்கள் எந்தப் பிராந்தியத்தில் அல்லது ஊரில் பயில் நிலையில் உள்ளது என்பது குறிப்பிடப் பட்டுள்ளது. முட் பற்றைகளால் ஆக்கப்பட்ட வேலியை "அக்கில்" (ப.2) என்று யாழ்ப்பாணத்தி லும் மட்டக் களப்பிலும் குறிப்பிடுவதாக விளக்கம் தரப் பட்டுள்ளது. "அங்கிடுதத்தி"(ப.3) எனும் சொல் நெடுந்தீவு, விடத்தல்தீவு, மாதோட்டம் பகுதி களில் வழக்கிலிருப்பதாக குறிப்பிடப்பட்டுள் ளது. அழுக்குப் பிடித்தவன் என்பது மட்டக்களப் பில் "அட்டுப் பிடித்தவன்"(ப.7) என்று வழங்கி வந் துள்ளமை எடுத்துக்காட்டப்படுகின்றது. அவ்வா றான சொற் சேகரங்கள் பிராந்திய மொழி வழக்கு ஆய்வுக்கான அடிப்படைகளைத் தருகின்றன.
- பேச்சு வழக்கிலுள்ள சொற்கள் சில அதிகப்படி யான இலக்கிய மொழிப் பெறுமானம் மிக்கவை யாக சாதாரண மக்களால் கையாளப்பட்டு வந் துள்ளன. "அஞ்சாவியங்கெடுதல்"(ப.6) என்பது

மட்டக்களப்பு பிராந்தியத்தில் ஐம்பொறி களும் கலங்குதல் எனும் பொருளில் வழங்குவ தாக விளக்கமளிக்கப்படுகின்றது. அவ்வாறே எங்கள் கூட்டத்துக்கு உதவாதவன் என்பதை நெடுந் தீவில் "எங்கணங்கெட்டவன்" (போக்கணங் கெட்டவன்) (ப.108) என்று சாதாரண மக்கள் குறிப்பிடு கின்றனர். அவ்வாறே மக்கள் வாழ்வில் பயில்வி லுள்ள அளவீடு(scale) சம்பந்தப்பட்ட சொல்லாக பிரயோகமாகும் "அவணம்"(ப.36) எனும் சொல் தம்பலகாமம், கொட்டியாரம், மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களில் பயன்படும் விதம் விளக்கப்பட்டுள் ளது. இந்தப் பொருள் விளக்கங் கள் வெகு சாதாரண வழக்கிலுள்ள உயர்வழக்கு மொழியி யல்புகளாய் அடையாளங் காணப்படலாம்.

- மொழிசார் மானிடவியலாளர்கள் "சொற்களின் தோற்றப்பட்டியல் உணர்வுகள்" (phenomenological sense of the terms), "குறிகாட்டும் அர்த்தங்கள்" (indexical meaning) பற்றிய கவனக்குவிப்பை கொண்டுள்ளனர். இவை இரண்டையும் வழக்கு அகராதிகளின் தொகுப்புக்கான கள ஆய்வுகளின் வழியே புரிந்துகொள்வதற்கான வாய்ப்பு உள்ளது. சமூக அடையாளம் தொடர்பான கருத்தாடலின் ஒரு பகுதியாக சமூக அடையாளத்தைக் கட்டமைப்பதில் மொழியின் பங்கு குறித்த கருத்தாடலும் உள்ளடங்குகின்றது. பண்பாட்டு அறிவின் உருவாக்கத்திலும் அடையாளங்களை நிறுவனப்படுத்துவதிலும் மொழியின் குறியீட்டு அர்த்தங்களுக்கு பெரும்பங்கு உண்டு. இந்த வழக்கு அகராதியிலுள்ள சொற்கள் பிரந்திய அடையாளங்கள், சமயம்சார்ந்த அடையாளங் கள், தொழில் மற்றும் குலவழி அடையாளங்கள் முதலான அடையாளங்களை பிரதிபலிப்பதாக வுள்ளது. வெகுசாதாரணமான ஓர் எடுத்துக் காட்டாக பிரதேசத்துக்கான மொழி வழக்கு அவற்றின் உச்சரிப்பு பாணியால்(slangs) குறித்த பிரதேசத்துக்கான தனியான வழக்காக கருதப்படு வதுண்டு என்பதை புரிந்துகொள்ள பல சொற் களை அகராதியில் காணலாம். எடுத்துக்காட்டாக எங்கிட்டு, எங்கினைக்கை, எங்கை, எங்காலை எனும் சொற்களின் வேறுபட்ட சொல்லும் பாணியில் பிராந்திய வேறுபாடு பிரதிபலிப்பதை புரிந்து கொள்ளத்தக்கவாறு அதற்கான விளக்கங் கள் தரப்பட்டுள்ளன. இவற்றில் "எங்கிட்டு" என்பது "எங்கே" என்பதை குறிப்பதாக மலைய கத்தில் வழக்கிலுள்ளமை எடுத்துக்காட்டப் படுகின்றது.
- தொழில்சார்ந்து சாதாரணமாக மக்கள் வாழ்வில் கலந்திருக்கும் சொற்களும் அவற்றுக்கான விளக்கங்களும் தனித்துவம் மிக்கவை. விதை நெல்லை நிலத்தில் பரப்புதலை மட்டக்களப்பில் "நெல்லடுத்தல்"(ப.266) என்று குறிப்பிடுகின்றனர். சவரம் செய்தலை அனலைதீவு மற்றும் நெடுந்தீவு மக்கள் "பணிக்கை வெட்டுதல்"(ப.274) என்று குறிப்பிடுகின்றனர். அவ்வாறே, "காவற்புரி"(ப.155), "காடுகலைத்தல்"(ப.151), "களமுதறுதல்"(ப.147), "இடுக்குதல் (ப.63) முதலான தொழில்சார் வழக்குச் சொற்கள் அதிகளவில் தொகுக்கப் பட்டுள்ளன. சடங்கு சார்ந்த வழக்குச் சொற்களாக "களங்காவற் செய்தல்"(ப.146), "கன்னிக்கால்" (ப.149), "கால் மாறுதல்"(ப.154), "காடாத்து" (ப.151) முதலான ஏராளமான சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன. பொதுவாகவே மொழியியல் மற்றும் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகளில் தொழில்கள், சடங்குகள், விளையாட்டுகள், புழங்கு பொருள் கள், ஆபரணங்கள், வாழ்விட அமைப்புகள், உறவு முறைகள் போன்றன குறித்த கூடுதலான கரிசனை கொண்ட ஆய்வுகள் மேற் கொள்ளப் பட்டுள்ளன. அத்தகைய நாட்டாரியல் ஆய்வு ஆர்வம் கொண்டவர்களுக்கு இத்தகைய வழக்கு அகராதிகள் அதிக பயனுடையவை.
- தற்காலத்தில் நிகழ்போக்கிலுள்ள மொழிசார் மானிடவியல் ஆய்வுகள் மேலும் முன்னேற்றகர மாக மொழிசார் சமூகமயமாக்கல், மொழிசார் பன்மைத்துவம், அதிகாரம் மற்றும் ஆதிக்கம் தொடர்பான மொழியியல் பரிமாணங்கள் போன்ற விடயங்களில் கூடிய கவனம் செலுத்துகின்றன. அத்துடன் சமூக, பண்பாட்டு வழக்குகளை மக்கள் குழுக்களிடையே ஒப்பியல் நோக்கில் ஆய்வு செய்வதிலும் அக்கறை செலுத்துகின்றன. இவற்றுக்கான அடிப்படைகளையும் இத்தகைய வழக்கு அகராதிகள் தருகின்றன.

வழக்கு அகராதிகளுக்கு மொழியியல், சமூகவியல், மானிடவியல், நாட்டாரியல் ஆய்வுகளில் இத்தகைய முக்கியத்துவம் உள்ளபோதிலும் Boas என்பவர் "மறைவதைக் காக்கும் மானிடவியல்'(salvage anthropology) என்ற கருத்தாக்கத்துக்கு அமைவாக ஆய் வாளர்கள் தொழிற்படுவதிலான முறையியல்சார்ந்த பிரச்சினைகளை விளக்கியிருந்தார். அமெரிக்காவில் ஐரோப்பிய காலனித்துவத்தின் பின்னான காலத்தில் அழிவின் விளிம்பில் இருந்த மறைந்துபோன மொழி மற்றும் பண்பாட்டு மரபுகள் தொடர்பான விடயங்களை ஆவணமாகத் தொகுப்பதிலுள்ள பிரச்சினைகளை விளக்கியிருந்தார். அந்தப் பிரச்சினை வழக்கை தொகுப்பவர்களின் பிரதான பிரச்சினையுமாகி விடு கின்றது. காலத்தினால் மறைந்துபோகும் தறுவாயில் உள்ளவற்றை தொகுப்பதில் ஓர் ஆய்வாளர் எதிர் கொள்ளும் முதன்மையான பிரச்சினையாக இது உள்ளது. அத்துடன், மொழியியல் சார்ந்து அல்லது தமிழியல் சார்ந்து வழக்கு அகராதிகளைத் தொகுக்கும் நிலையில் "சிறப்பு அகராதி" எனும் வகைமையினுள் உள்ளடங்கும் வெவ்வேறு நோக்கங்களைக் கொண்ட அகராதிகளுக் கான வரையறை தொடர்பான முறையியல்சார்ந்த பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குறிப்பாக ஓர் ஆய்வாளர் சொல்வகை பற்றிய ஓர் அகராதியை தொகுக்கும்போது தவிர்க்க முடியாத வகையில் மரபுச்சொற்களையும் உள்ளடக்கவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகலாம். அந்நிலையில் மரபுச்சொல் அகராதிக்கும், சொல்வகை அகராதிக்குமான நிறுதிட்ட மான வேறுபாடுகளிலுள்ள முறையியல்சார்ந்த பிரச்சினைகளுக்கு முகங் கொடுப்பது தவிர்க்க முடியாததே. முகங்கொடுக்கும் பிரச்சினைகள் எது வாயினும் எந்தவொரு வழக்கு அகராதியும் மொழிசார் சமூக-பண்பாட்டு மானிடவியல் அறிவுப் பரப்பின் முக்கியமானதும் தவிர்க்க முடியாதது மான தரவு மூலமாக அமைந்துவிடுகின்றது.

## அ.பௌநந்தியின் 3 கவிதைகள்

### என்னைத் தேடி நீயும் நானும்

கரை மோதிக்
கரைந்து போகும்
அலையாக
என்னிடத்தில்
எழுந்து எழுந்து
கரைந்து போகிறது
என்னைப் பற்றிய
எனக்குள்ளான கேள்விகளும்
ஐயங்களும்...

என்னைத் தேடி அலைந்தே
நடுக்கடலில் விடப்படுகிறேன்
அல்லது
விரட்டப்படுகிறேன்
நான்...?
என்னைப் புரிதலுக்கான
எனது பிரயத்தனத்தில்
வெற்று வாயுடன் தலை நீட்டும்
நீர்க்காகம் ஒன்றின்
தவிப்பு...

ஆனாலும்...
உனது வியாக்கியானத்தையே
நீ பிரலாபிக்கிறாய்,
எனது
போர்வைகளை விலக்கி
என்னை விடுவிக்க
நீ கொள்ளும் வாஞ்சைகளின்
முடிவில்.
என்னைப் பற்றிய
உனது அளவீடுகள்
பற்றிய நியாயித்தலின் மத்தியில்
எனது நிலையியலுக்கு
முத்திரையிடுகிறாய்!

கரை மோதிக்
கரைந்து போகும்
அலையாக
என்னிடத்தில் எழும்
ஐயங்களின் ஆர்ப்பரிப்பினூடே
எனக்காக முக்குளிப்பதாய்
முனகுகிறாய்.
ஒவ்வொரு முறையும்
நீ அள்ளிவரும்
சிப்பிகளுக்குள்
எனக்கான
உனது சேகரத்தையும்
செருகிவிடுகிறாய்...?

எனினும்...
இன்னும்...
என்னைத் தேடி ஏதிலி நிலையில்
நான்...
என்னைப் பற்றிய
சேகரமாகிய குப்பைகளோடு
நீ...!

### வற்றிடு வயிறே!

எமது வாழ்க்கைக்கான
விதிகளை
உல்லாச அறைகளுக்குள்ளிருந்து
எழுதிக்கொண்டேயிருங்கள்...
வறிய வயிற்றினை
“வற்“றிட “வற்”றிட
வாக்களித்துக் கொண்டாடுங்கள்.

சலுகைகளின் சாமர்த்தியங்களை
வசியப்படுத்தியே
வசதிப்படுத்திக் கொள்ளுங்கள்...
எம்மைக்
காய்ச்சி உருக்கிய
ஊனத்தினால்
உங்களைச்
சுந்தரித்துக்கொள்ளுங்கள்.

அரங்கேற்றுங்கள்...
நாட்டினை மீட்பதற்கான
நடைபவனியில்...?
எங்கள் சமையற் பாத்திரங்களை
அடகு வையுங்கள்!
உதிரம் உறிஞ்சி அட்டைகளே!
சத்தம் சந்தடியின்றி
எம்மைச் சாப்பிட்டே
உருப்பெருத்துக் கொள்ளுங்கள்!

உங்கள் இருப்பை
இற்றைப்படுத்திக் கொள்ளலில்
எங்கள் வயிற்றை
எப்படி உணர்வீர்...?
“வற்”றிட “வற்”றிட
வற்றுவது எம் வயிறே...!

### இராச பறவைகளின் சஞ்சாரம்

இராச பட்சிகளாய்த் தம்மைப்
பிரகடனப்படுத்திக் கொண்டன
பிணந்தின்னிக் கழுகுகளும்
பருந்துகளும் வல்லூறுகளும்
காக்கைகளும் அதையே
அனுசரித்துக்கொண்டன.

அளவற்ற அவற்றின் கர்ச்சனைகள்...
தமது இறகுகளால்
தமது மார்பைத் தட்டிக்கொண்டன.
செவிப்பறைகளைச் செவிடாக்கின
அவை எழுப்பிய முரசங்கள்.
சிம்மாசனத்தை வசீகரிக்க
இத்துப்போன வன்மம்
விசிறப்பட்டது.

அவற்றின் இரைப்பைகளை நிரப்பின
சிறு குருவிகள், குஞ்சுகள்
மான், மரை அனைத்தும்...
உவியப்பட்ட நிண நாற்றம் நீங்கா
மலங்களை...
எம்மீது பீச்சித் தள்ளின அவை.
பின்னுமாக...
தமக்கான கிட்டங்கிகளை
நிரப்பத் தவறவில்லை.

புயலொன்று எழுந்து ஆடிய
தாண்டவத்தின் தகிப்பின் பின்னர்...
இறக்கைகளைச் சுருட்டி
ஏம்பலித்துக்கொண்டன.
வனாந்தரத்து மிகப்பெரும்
தாவர போசணியின்
கால்களுக்கிடையில்
சரணாகதியடைவதாய்ச்
சங்கற்பம் செய்துகொண்டன.

மீண்டுமாய்...
சுருட்டிய சிறகுகளை விரித்து...
கர்ச்சித்து...
எம்மைத் திண்டு...
உவியப்பட்ட நிண நாற்றம் நீங்கா
மலங்களை...
எம்மீது பீச்சித் தள்ளும்
எண்ணத்தில் அவை.

குமுதினி கலையரசன்

# தேவதைகள் அழுவதில்லை



அன்றும் குளிர்காலத்திற்கேயான நீண்ட மாலைப் பொழுது வழமையானதாகவே ஆரம்பித்தது. நகரத்தின் மத்தியில் அமைந்த சிறுவர்கள் வைத்தியசாலை. எங்கும் மனிதர்கள். பலவிதமான சிந்தனைகளுடன். வயது, பால், நிறங்களைத் தாண்டிப் பொதுவாய் உறைந்திருந்த கவலையும் சிந்தனையும் மனிதர்களை ஒன்றிணைத்திருப்பதாய்த் தோன்றிற்று. கண்ணீரும் துன்பமும் பேதங்களற்றது. அன்பும் கூடவே.

வைத்தியர்களின் ஓய்வு அறையை நோக்கி நடந்து கொண்டிருந்தேன். காலைப் பணிகளின் பளு கொஞ்சம் குறைந்திருந்த நேரம். அறைக் கதவை அண்மித்தபோது எனது கைபேசி அலறியது. அடுத்த பக்கத்தில் மிகவும் பரபரப்பு நிறைந்த குரலில் அவசர சிகிச்சை அறையிலிருந்து (Emergency Dept.) ஓர் அழைப்பு.

“பதின்மூன்று வயதுப் பெண். மருந்துக் குளிசைகளை அதிகமாக எடுத்திருக்கிறாள். காடியாக் அறெஸ்ற்…”குறுகிய அழைப்பில் என்னால் மீதத்தை அனுமானிக்க முடிந்தது. சுவாசத்தையும் இதயத் துடிப்பையும் செயற்கையாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் நம்பிக்கையான எந்த அறிகுறிகளையும் “மொனிற்றரில்” பெறவில்லை.

நான் அவசர சிகிச்சை அறையை நோக்கி விரைந்தவாறே எனது குழுவுக்கு என்னுடன் இணையுமாறு செய்தி அனுப்பினேன், எனக்கு சூழலும் நேரமும் பற்றிய உணர்வு மறைந்து மூளையும் உடலும் அதி வேகத்தில் தொழிற்படலாயிற்று. இதே போன்ற எத்தனையோ அவசர சிகிச்சைகளில் ஈடுபட்டிருந்தாலும் ஒவ்வொரு முறையும் ஒரே விதமான உத்வேகத்துடன் உயிர் காக்கும் போராட்டம்.

அவசர சிகிச்சை அறையை அடைந்தபோது எனது குழுவும் இணைந்து விட்டிருந்தது. மிகப் பரபரப்பான பொழுது. எல்லோரது உணர்விலும் “அவளை” மீட்கவேண்டும் என்பதாக மட்டுமே இருந்தது. அச் சிகிச்சைப் பிரிவின் தலைமை வைத்தியர் எங்களை சிறுவர்கள் சிகிச்சைப் பிரிவினர் என்பதை அடையாளம் கண்டு கொண்டார். அவர் அந் நோயாளி பற்றிய விபரங்களை கூறத் தொடங்கினார்.

“ஏஞ்சல், 13 வயதுப் பெண் தனது வீட்டு படுக்கை அறையில் மயங்கியிருக்கக் காணப்பட்டாள். பல விதமான அடையாளம் காணப்படாத குளிசைகள் அவளருகில் இருந்தன. அவளை வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட போது சுவாசமோ இதயத் துடிப்போ இருக்கவில்லை….” அத்துடன் அவர் இது வரை அளிக்கப்பட்ட சிகிச்சை விபரத்தைக் கையளித்தார். இனி எனது முறை. மீண்டும் எல்லாவற்றையும் சரிபார்த்துச் செய்யவேண்டியதை எனது குழுவுக்குச் சொல்லிக் கொண்டிருந்தேன். “அவளைச்” சுற்றியும் பரந்திருந்த குழாய் இணைப்புகளூடாக முகம் மறைந்திருந்தது.

குழுவில் ஒருவரின் கேள்விக்குப் பதில் சொல்லத் திரும்பியபோது எனது கண்களில் அவளின் வெளிர்

சிவப்புக் கரத்தில் "ANGEL" என்றிருந்த கறுப்பு Tatoo எழுத்துக்கள் விழுந்தன. அது சட்டென்று என் உணர்வு களில் ஒரு அதிர்வையும் வலியையும் ஏற்படுத்தியது.

அவளது மணிக்கட்டில் கட்டப்பட்டிருந்த பெயர்ப்பட்டியைப் பார்த்து அந்த ஏஞ்சல் தான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டேன். சந்தேக மில்லை அவளேதான். பொன் நிறத்துக்கும் மண்ணிறத் துக்கும் இடைப்பட்டதான கேசம் அலைவடிவில் அவள் சிறுநெற்றியில் விழுந்திருந்தது. மூக்கின் இடப் பக்கத்தில் சிறிய கறுப்பு மச்சம். எனது வாய் அடுத்து நடக்க வேண்டியதைக் கட்டளையிட்டுக் கொண்டிருந் தாலும் அவளை வைத்தியசாலையின் குழந்தைகள் விடுதியில் அனுமதித்த தருணத்தின் அந்த நினைவுகளை அகற்ற முடியவில்லை.

மூன்று மாதமிருக்கும். இதே அவசர சிகிச்சை அறையில் சந்தித்தபோது 13 வயதுப் பெண்ணான இவள் மிக ஆக்ரோஷமானவளாக (aggressive) இருப்பதாக எனக்கு கூறப்பட்டது. அதனால் தூக்கமருந்து கொடுக்க வேண்டியிருப்பதாகவும் என்னிடம் கூறினார்கள். சமூகப்பாதிப்புகளால் மனநலம் பாதிக்கப்பட்டவளாக அவள் அறிமுகப் படுத்தப்பட்டாள்.

முதல் முதலில் அவளைப் பார்த்தபோது அவள் கைகளிலும் கால்களிலும் கட்டப்பட்டுக் கட்டிலில் பிணைக்கப்பட்டிருந்தாள். கண்ணீரும் கோபமும் கலந்து அவள் முகத்தைச் செந்நிறமாக்கி இருந்தன. அவள் வாயிலிருந்து காட்டமான வார்த்தைகள் உக்கிரமாக கொட்டின. எழுதமுடியாதவை.

மெல்லச் சென்று அவளருகே அமர்ந்தேன். கட்டுகளினூடாகத் திமிறினாள்.

"தூரப் போ..." கத்தினாள். எச்சிலைத் துப்ப முயன்றாள். புன்னகைத்தேன். எனக்குத் தெரியும். இந்த நடத்தை அவளின் இயல்பல்ல. பாடும் சின்னக் குருவி போல், சிறு வண்ணத்துப்பூச்சி போல் இந்த உலகத்துக்கு அழகு சேர்த்திருப்பாள் அவள், அவளின் உலகம் அவளைச் சிறு பெண் குழந்தையாகப் போற்றி வளர்த்திருந்தால், இது அவள் காயப்பட்ட கணங்கள் கொடுத்த பிரதிபலிப்பு. ஒரு மென்மையும் பயமும் நிறைந்த சிறு பெண்ணைக் காலத்தின் வக்கிரம் இப்படி ஆக்கியிருக்கிறது.

தொடர்ந்து புன்னகைத்தேன். அவள் தோளில் கைபதித்து "ஏதாவது குடிக்க விரும்புகிறாயா...?" என்று கேட்டேன். அவள் மௌனமானாள். எதிர்ப்புத் தணிந்தது. முகத்தில் கேள்விக்குறி. இவள் குழந்தை. நிச்சயமாக இவளுள்ளே பெரிய காயம் இருக்கிறது. நான் மீண்டும் பேச முற்பட்டபோது "இந்தக் கட்டுகளை முதலில் அவிழ்த்து விடு. நான் குடிக்கிறேன்" என்றாள். நான் கட்டுகளை அவிழ்த்துவிடச் சொன்னேன்.

"செடேஷன் தேவையில்லையா?" குழுவி லிருந்து கேள்வி எழுந்தது. நான் தேவையில்லை என்று உறுதிப் படுத்தினேன். சிறுவர் விடுதிக்கு அவளை அனுமதிக்கச் சொன்னேன்.

அவள் எழுந்திருந்து தேனீர் அருந்தினாள். களைத்திருந்தாள். "என்னை மன்னித்துவிடு.." என்றாள்.

"அது பரவாயில்லை" என்றேன். உனது பெயர் அழகானது..." என்றேன். அவள் கரத்திலிருந்த "ANGEL" என்ற tatoo எழுத்துக்களைக் காட்டியவாறு "உனது பெயர் அழகானது" என்றேன்.

"ஆனால் அர்த்தமில்லாத பெயர்..." என்றாள். நான் மௌனமாய் இருந்தேன். அவள் கதைக்க வேண்டும். வெறுப்பும் துன்பமும் சாயலிடப் புன்னகைத்தாள். கண்கள் கீழே பார்த்திருந்தன.

"தேவதைகள் நரகத்தில் வாழ்வதாக எங்காவது கேள்விப் பட்டிருக்கிறாயா? என் முகத்தில் வினவினாள்.

"......................"

"நான் நரகத்தில் தான் வாழ்ந்து கொண்டிருக் கிறேன். இன்றைக்கு தப்பி ஓட முயன்றபோது பிடித்து இங்கே கொண்டுவந்து விட்டார்கள்...". அவள் முகத்தில் துன்பமும் ஏமாற்றமும் கவிந்திருந்தன. நான் மௌனமாக இருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். சில நேரங்களில் கேட்கும் காதுகளே பொருத்தமான மருந்தாகவும் அமைந்து விடுகிறது. முக்கியமாக ஒரு காயப்பட்ட, ஆதரவில்லாமல் உணர்கின்ற ஒரு சிறுமிக்கு இது நிச்சயம் உதவும்.

ஏஞ்சல் அவள் பெற்றோருக்கு மூத்த பெண்ணாய் இருந்தாள். அன்பு நிறைந்த தாய். அடிக்கடி கணவனின் வன்முறைக்கு ஆளாகியிருந்தாள். ஏஞ்சல் ஆறு வயதில் இருந்தபோது தகப்பனைச் சட்டம் குடும்பத்திலிருந்து பிரித்து விட்டிருந்தது.

ஏஞ்சலையும் அவளது இரண்டு சகோதரர்களை யும் பராமரிக்கத் தாய் பெரிதும் திண்டாடினாள். போதைப் பாவனை அவளின் துன்பத்தைத் தணிப்பதாக எண்ணி நாளடைவில் முழுமையாக அப்பழக்கத்துக்கு அடிமையாகி விட்டாள். காவலற்ற அந்த உலகுக்குள் ஏஞ்சல் பல்வேறு துன்பங்களை அனுபவித்தாள். உறவினர் என்ற ஒருவரால் அவள் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டு, பின் வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டதிலிருந்து சட்டம் அவளையும் சகோதரர்களையும் தாயிடமிருந்து பிரித்து விட்டது.

அன்றிலிருந்து மாறி மாறிப் பராமரிப்பாளர் களுடன் (foster care) வாழ்ந்து வந்தாலும் எந்த இடத்திலும் ஏஞ்சலின் மனம் ஒன்றவில்லை. தாய் செய்தது பிழைதான். ஆனாலும் தாய் அன்பானவள். அவள் திருந்திவிடுவாள். ஏஞ்சல் இந்த முறையும் தனது புகலிடத்திலிருந்து தாயிடம் தப்பியோட முயன்ற போதுதான் பிடிபட்டாள்.

"உனக்குத் தெரியுமா அம்மா அன்று எப்படி அழுதாள் என்று...? அன்று எங்களை அவர்கள் வாகனத்தில் ஏற்றும்போது அவள் மயங்கி விழுந்தாள். நாங்கள் மூன்று பேரும் இல்லாமல் அவள் எப்படி இருப்பாள் என்று எனக்குத் தெரியும்..."

கண்களில் துன்பம் திரையிட்டது, கண்ணீர் இல்லை. தேவதைகள் அழுவதில்லை. சொல்லி முடிக்கும் போது அவள் முகத்தில் கொஞ்சம் அமைதி இருந்தது. எனது இதயத்தில் கனமேறி இருந்தது.

எதற்கும் பஞ்சமற்ற நாடு. பச்சையும் தங்கமு மாய்ச் செழித்திருக்கிறது இயற்கை. நீண்ட அமைதியான வரலாறு. நிலையான சட்ட ஒழுங்கு. எந்தத் தவறு இந்தக் காயத்தை இவளுக்கு வாழ்வாக்கி இருக்கிறது..

அவளின் கரங்களை ஆதரவாய்ப் பற்றினேன்.

"நான் அம்மாவிடம் போக வேண்டும்..." அவளின் கண்கள், முகம், வார்த்தைகள் எல்லாமே கெஞ்சி இறைஞ்சின. குரலில் தனக்குச் சுகம் தேடும் சுயநலம்

இல்லை. தாயைக் காப்பாற்றுகின்ற தவிப்பு இருந்தது. தாயின் துன்பத்தை ஆற்ற முயற்சிக்கின்ற ஏக்கமும், வேகமும் இருந்தன. "நானும் தம்பிகளும் இல்லாமல் அம்மா இன்னும் உடைந்து விடுவாள்..". இதற்குப் பதிலளிக்கும் அதிகாரம் என்னிடம் இல்லை. சட்டத்தின் இறுக்கமான பிடி ஏற்படுத்தும் காயங்களை ஆற்றச் சில சமயங்களில் மருத்துவத்தால் முடிவதில்லை.

"நல்லது, நீ அமைதியாகச் சாப்பிட்டுத் தூங்க வேண்டும்"என்றேன். சட்டம் அவளுக்கு நல்லதைச் செய்யும் என்றும் அவளுக்கு முன்னே நீண்ட, அழகிய, அமைதியான எதிர்காலம் உண்டு என்றும் நம்பிக்கை யூட்ட முயன்றேன்.

"சட்டத்தின் வெற்றி எனது மகிழ்ச்சியல்ல... நான் அம்மாவிடம் போகவேண்டும்" அமைதியான ஆழ்ந்த குரலில் சொன்னாள். குரலில் உறுதி தொனித்தது.

"நான் உன்னை விளங்கிக் கொள்கிறேன், நீ சாப்பிட்டுத் தூங்க வேண்டும் இப்போது." ஆமோதிப்பதாய் தலை அசைத்தாள். "உனக்கு நன்றி" உணர்வுபூர்வமாய்ச் சொன்னாள். "உன்னைச் உதவியதில் எனக்கு மகிழ்ச்சி" என்றேன். கட்டிலிலிருந்து எழுந்து என்னை நோக்கி வந்தாள். கைகளை விரித்தாள். முன்னே நகர்ந்து அவளது தழுவலை ஏற்றுக் கொண்டேன். மீண்டும் நன்றி சொல்லி விடை கொடுத்தாள். அவள் முகத்தில் அமைதி நிறைந்த புன்னகை இருந்தது. கன்னக் குழிவுடன். அவளின் தேவதைத் தனம் அவளைச் சுற்றி ஒளிர்வதாகத் தோன்றிற்று எனக்கு. அவளைப் படுக்க வைத்து அறையிலிருந்து வெளியேறினேன்.

அடுத்து வந்த நாட்களில் நான் கடமையில் இருக்கவில்லை. ஏஞ்சல் புதிய கவன பராமரிப் பாளருடன் அனுப்பப்பட்டதாகவும் அவள் மிகுந்த கவலையுடன் விடுதியிலிருந்து வெளி யேறியதாயும் பின்னர் அறிந்து கொண்டேன்.

எனது பெயர் அழைக்கப்படவும் நினைவுச் சங்கிலி அறுந்தது. "எங்களுடைய நேர எல்லையைத் தாண்டி விட்டோம். உயிர் பிழைப்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை." எனக்குத் தெரியும் நாங்கள் தோற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதை அங்குள்ள அனைவரும் வலியுடன் ஏற்றுக் கொள்ளவேண்டிய தருணம். மருத்துவத்தின் எல்லையை மீறி இயற்கை தன் பலத்தைக் காட்டுவதைச் சொல்கின்ற அறிவிப்பு அது.

மீண்டும் எல்லாவற்றையும் திரும்ப உறுதி செய்தேன்.

"நாங்கள் நிறுத்துவோம்..." திடீரென ஒரு அமைதி கவிந்தது. ஒவ்வொருவரும் தனக்கு ஒதுக்கப் பட்ட பணியைக் கைவிட்டு மெல்ல விலகினார்கள். சிலர் "அவளுடன்" அவளை அடுத்த பயணத்துக்கு தயார் செய்து கொண்டிருந்தனர்.

எல்லா வயர்களும், குழாய்களும் அவளிலிருந்து நீக்கப் பட்டிருந்தன. வெளிறிய உடல் நீலமிட்டிருந்தது. அவள் கரத்தில் புதிதாக சில எழுத்துக்கள்... வலது கையில் "ANGEL" அதன் கீழே புதிதாக கூரிய பிளேட்டால் வெட்டப்பட்ட எழுத்துக்கள் "MUM". மருந்துகளை உட்கொள்ள முன்பு தான் எழுதியிருப்பாள். புதிதான சில மணித்தியாலங்களேயான கீறற் காயங்கள்.

ஆழமான வலியை நெஞ்சுள் உணர்ந்தேன். திரும்பி அவள் முகத்தை நோக்குகின்றேன். பாதி மூடிய விழிகள். கன்னக் குழிவுடன் அவள் மெலிதாய்ப் புன்னகைப்பதாய்த் தோன்றிற்று. தலைகுனிந்து கண்ணீரை மறைத்தபடி கூட்டத்துடன் சேர்ந்து வெளியே நடக்கிறேன்.

---

# காலக்கொடுமை

நிறைவேறா ஆசைகள் பல
அடைய துடிக்கும் கனவுகள் பல
என்னை நோக்கி பாயும் வசைகள் பல
என்னை வாட்டும் வறுமைகள் பல
என்னை சூழ்ந்த துரோகங்கள் பல
யாவும் மறைத்து போலிச் சிரிப்புடன்
குடும்பத்துக்காய் உழைப்பதில் ஆனந்தமே
பிச்சை எனும் வசை என் மூச்சை முட்டும்
கண்கள் கரைந்து நிற்கும்
என் மனமும் நொறுங்கி உடையும்
ஆனால்
முகமோ சிரித்து நடிக்கும்
என்றும் என் வாழ்க்கை
முடிவில்லா போராட்டமே
உறக்கம் இன்றிய இரவுகளும்
சிதறிய கனவுகளும்
வலி சுமந்த மூட்டையுடன்
குறுகி நிற்கின்றேன்
அக்கனமும் விடவில்லை
குடும்பத்தை தாங்கி நிற்பேன் ஒற்றை ஆளாய்
தவறு பல நடத்தி விட்டு
பழி சுமத்த நான் இருக்கன்
ஏனென்றால் நான் தான்
வறுமையாகிற்றே
இன்னல் பல கடந்து
குலம் தாங்கும் என் பெயர்
என்றும் பிச்சைகாரனே...
தன் தட்டில் குப்பை இருக்க
அடுத்தவன் தட்டை கேலி செய்யும்
கூட்டம் இங்கே
கேலித் தட்டை நக்க
காலம் வரும் காத்திருப்பேன்
பொறுமையின் சிகரமாய்.....
ஒரு நாள் வரும்.

சா.கோகுலன்

திக்குவல்லை கமால்

# அ.ந.கந்தசாமி வாழ்வும் எழுத்தும்



தீவிர இலக்கியவாதியும் மின்னிதழாளரும் இருபத்தைந்திற்கு மேற்பட்ட நூல்களைத் தந்தவருமான வ.ந.கிரிதரனின் அண்மைக்கால நூலான "வ.ந.கிரி தரன் கட்டுரைகள்", அழகிய அச்சமைப்போடு "ஜீவநதி" பிரசுரமாக வெளிவந்துள்ளது. இத்தொகுப்பில் பதி நான்கு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. கவனிப்புக் குரிய படைப்பாளிகள் பற்றியதாகவும் சர்ச்சைக்குரிய தலைப்புக்களைக் கொண்டதாகவும் இருப்பதனால் நிச்சயமாக இலக்கிய வாசகர்களை ஈர்க்கும்.

இதில் எனது கவனத்தை ஈர்த்த விடயம் அ.ந.க.பற்றிய கட்டுரைகளே. அவர் தொடர்பாக மூன்று கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

1) அறிஞர் அ.ந.கந்தசாமியின் பன்முக ஆளுமை.
2) அ.ந.க.வின் – மனக்கண் –
3) ஈழத்து தமிழ் கவிதை வரலாற்றில் அறிஞர் அ.ந.கந்தசாமியின்(கவீந்திரன்) பங்களிப்பு.

இம்மூன்று கட்டுரைகளும் நூலின் மூன்றில் ஒரு பகுதியை ஆக்கிரமித்திருப்பது கவனத்திற் குரியது.இன்னும் சில விடயங்களையும் உள்ளடக்கி தனியே ஒரு நூலாக வெளியிட்டிருக்கலாமே என்று எண்ணத் தோன்றியது.

அ.ந.கந்தசாமி என்ற நாவலாசிரியர் எனக்குப் படிக்கும் காலத்திலேயே அறிமுகமானார். தினகரனில் "மனக்கண்" தொடர் நாவலைப் போட்டி போட்டுக் கொண்டு வாசித்தது இன்னும் ஞாபகமுள்ளது. அந்நாட்களில் வாசித்த – சிவகாமியின் சபதம் – கடல் புறா – கரித்துண்டு – பெற்றமனம் – குறிஞ்சி மலர் – முத லான நாவல்களைப் போன்ற ஒன்றாகவே "மனக்கண்" ணும் தெரிந்தது. அ.ந.க. ஓர் இலங்கை எழுத்தாளர் என்பதைத் தெரிந்துகொள்ளச் சில ஆண்டுகள் சென்றன. இலங்கையிலும் இப்படி எழுதக்கூடியவர்கள் இருக்கிறார்கள் என்பது எனக்கு அப்போது வியப்பாக இருந்தது.

நூல் வடிவில் முதன்முதலில் வாசிக்கக் கிடைத்தது "வெற்றியின் இரகசியங்கள்" என்ற அவரது மனநல நூல்தான். அதுவும் இந்திய எழுத்தாளர் அப்துல் றகீமின் – எண்ணமே வாழ்வு – உளத்தூய்மை – மனதை வெல்லுவாய் மனிதனாகுவாய் – போன்ற நூல்களை ஞாபகமூட்டின. இருந்தும் "மனக்கண்"ணும் , "வெற்றி யின் இரகசியங்களு" ம் இரண்டுவிதமாகவே இருந்தன.

இந்தக் கட்டத்தில்தான் அ.ந.க.வையும் அவரது எழுத்துக்கள் பற்றியும் மேலும் அறிந்து கொள்ள வேண்டிய தேவை எனக்கேற்பட்டது. அதற்கு எமது பாடசாலை ஆசிரியராக இருந்த கவிஞர் ஏ.இக்பால் உதவினார்.

"இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்ற ஒரு அமைப்பு உண்டு.அதனை உருவாக்கிய ஆரம்ப கர்த்தாக்களில் அவரும் ஒருவர். அ.ந.க. நல்லதொரு அறிஞர், சிந்தனையாளர். ஆனால் அதிகம் படிக்கக்கூடிய வாய்ப்புஅவருக்குக் கிடைக்கவில்லை. சிறுகதை – நாவல் – நாடகம் – கவிதை மொழிபெயர்ப்பு சிறுவர் இலக்கியம் – இப்படிப் பலதுறைகளிலும் சாதித்துள்ளார். ஆனால் அவை எதுவும் நூலாக வில்லை. அவர் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது நான் பலதடவை அவரைப் பார்க்கச் சென்றேன். அப்போதெல்லாம் எழுத் தாளர்கள்தான் அவரைச் சுற்றியிருந்தனர். அவரது உறவினர் – மனைவி – மக்களென்று எவரையும் காணவில்லை" இவ்வாறெல்லாம் சொன்னார்.

ஒருசமயம் டொமினிக் ஜீவா "மல்லிகை"யில் "எனது ஞானாசிரியர்கள்" என்றொரு குறிப்பு எழுதி யிருந்தார். அதில் அ.ந. கந்தசாமி பற்றியும், அவரை

ஆர்.ஆர். பூபாலசிங்கமே தனக்கு அறிமுகப்படுத்திய தாகவும் பதிவுசெய்திருந்தார். பேராசிரியர் க.கைலாசபதி தனது நூலொன்றை அவருக்கு சமர்ப்பணம் செய்துள்ளதாகவும் பின்னர் அறிந்தேன்.

எழுபதுகளில் இலக்கியப் புலத்தில் சேர்ந்து இயங்கியதனால் அதிகமான விடயங்களை அறிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.அ.ந.க.பற்றிப் பலரும் பேசுவதை அவதானித்துள்ளேன். எல்லோரும் அவரைச் சிலாகித்துப் பேசுவது ஒரு பொதுப் பண்பாகத் தெரிந்தது. அவர்களுள் சில்லையூர்ச் செல்வராசன் – பிரேம்ஜி ஞானசுந்தரம் – கொழும்பு எம்.எஸ் எம் இக்பால் – பி.ராமநாதன் – போன்றோர் முக்கியமானவர்கள் எனலாம். அந்தனி ஜீவா ஒருபடி மேலேபோய் பல கட்டுரைகள் எழுதிவந்தார்.


அ.ந.க.பற்றி மனதில் எழுந்த கேள்விகளுக்கும், அரைகுறையாகத் தெரிந்தவற்றை முழுமைப் படுத்தும் விதமாகவும் "வ.ந. கிரிதரனின் கட்டுரைகள்" என்ற நூலில் இடம்பெற்றுள்ள அ.ந.க.பற்றிய கட்டுரைகள் அமைந்துள்ளன. நீண்ட காலத் தேடலின் வெளிப்பாடாகவும் தரவுகள் காணப்படுகின்றன.

அ.ந.கந்தசாமி ஆக 44 ஆண்டுகள் மாத்திரமே (1924–1968) வாழ்ந்திருக்கிறார். தந்தையார் யாழ் – வண்ணார்ப்பண்ணையில் வாழ்ந்து பல சொத்துக்களின் அதிபதியாவார். அ.ந.க. ஐந்து வயதில் தகப்பனை இழந் துள்ளார். தந்தையை இழந்து 41 நாளில் தாயை யும் இழந்துள்ளார். சட்டரீதியான பாது காவலர்களும் பொறுப்பான சட்டத்தரணியும் சொத்துக்களைத் துஷ்ப்பிரயோகம் செய்து இல்லாமல் செய்துள்ளனர். எஸ்.எஸ்.எல்.சி – வரை கல்விகற்றுவிட்டு கொழும்பு சென் றுள்ளார். கொழும்பில் திருமணம் செய்த போதும் ஆள்மாறாட்டம் காரணமாக குடும்ப வாழ்வு நீடிக்காது போயுள்ளது. இவ்வாறாக அவரது தனிப்பட்ட வாழ்க்கை பற்றிய தரவுகளை மட்டுமன்றி, அவரது இலக்கிய மேன்மையை– படைப்புக்கள் சம்பந்த மான விபரங்களை – இலக்கியச் செயற்பாடுகளை – வ.ந. கிரிதரன் மிகச் சிறப்பாகத் திரட்டித் தந்துள்ளார்.

இவற்றை ஒட்டு மொத்தமாக அவதானிக்கும் போது அ.ந.க.வின் ஆளுமையையும் முழுமையையும் தரிசிப்பதற்குப் பின்வருவன நூல்களாக வெளிவர வேண்டுமெனக் கருதலாம்.

- அ.ந.க.வின் வாழ்க்கை வரலாறு.
- அவர் எழுதியுள்ளதாகத் தெரியவந்துள்ள அறுபது கதைகளில் கிடைப்பவற்றை உள்ளடக்கிய சிறுகதைத்தொகுதி.
- "மனக்கண்" தொடர் நாவல்.
- "கவீந்திரன்" மற்றும் புனைபெயர்களில் எழுதப்பட்ட கவிதைகளின் தொகுப்பு.
- எமிலிஸோலாவின் "நானா" மொழிபெயர்ப்பு நாவல்
- அ.ந.க.கட்டுரைகள்
- சிறுவர் கதைகள் ஏற்கெனவே "வெற்றியின் இரகசியங்கள்" மற்றும் "மதமாற்றம்" என்ற நாடகநூலும்வெளியாகியுள்ளன.

அ.ந.க. ஐந்து வயதிலேயே பெற்றாரை இழந்தார். அவருக்கு அன்பு கிட்டவில்லை. உயர் கல்வி பெற முடியவில்லை. சொத்துக்கள் கிடைக்கவில்லை. வாழ்க்கைத்துணை சரியாக அமையவில்லை. இத்தனைக்கும் மத்தியில் அறியப்பட்டுள்ள இலக்கியச் சாதனைகள் பிரமிப்பூட்டுகின்றன. அவரது படைப்புக்கள் நிச்சயமாக அவரிடம் இருந்திருக்குமென நம்பலாம் .ஆனால் அவை எங்கேயென்றுதான் தெரியவில்லை. அவரது சமகால நண்பர்களும் அநேகமாக நம்மத்தியில் இல்லை. அவர்மீது அபிமானம் வைத்துள்ள அடுத்த பரம்பரையினர்தான் தேடிச் சேர்க்க வேண்டும். யுத்தமும் இயற்கையின் சீற்றமும் விட்டுவைத்திருந்தால்!




பொதுவாக படைப்பாளிகள் இயற்கை எய்தும் போது அவர்கள் நூலுருவாக்கிய எழுத்துக்கள்போக, எஞ்சிய வெளிவந்த – வெளிவராத படைப்புக்கள் வீடு களில் இருக்கும். சமகால நண்பர்களிடமும் இருக்கும். அவற்றை நூலாக்கும் பொறுப்பு குடும்பத்தினரைச் சேரும். அவர்களிடம் வசதியோ அக்கறையோ இல்லாமை வேறுவிடயம்.

அ.ந.க.வைப் பொறுத்தமட்டில் மூலப்பிரதிகள் இல்லாமலிருப்பதே அடிப்படைப் பிரச்சினை. அவற்றை வெளியிட இலக்கியவாதியும் அ.ந.க.வின் உறவினரு மான வ.ந.கிரிதரன் தயாராகவே உள்ளார். "மனக்கண்" தொடர் நாவலின் ஒரேயொரு அத்தியாயம் இல்லாத தால் வெளியிட முடியாமல் தவித்த வண்ணமுள்ளார்.

"புதுமைப்பித்தன் போன்றவர்களை மீண்டும் இனம் கண்டதுபோல் அ.ந.க.வையும் மீண்டும் விரிவாக இனம் காண்பது ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்கு முக்கியம்" – என்று கிரிதரன் தெரிவித்துள்ளமை கவனிக்கத்தக்கது.

அ.ந.க.வைத் தேடுவோம். கிடைப்பவற்றை அவர் கணக்கில் வைப்பிலிட்டு உதவுவோம்.

மாயன்

# சீதோபதேசம்



"முப்பத்தோராந்தேதி திறந்திடுவாங்கள் தானே?..." அவன் தனக்குள்ளே கேட்டுக்கொண்டான். மனம் வெப்பிசாரப்பட்டது. "ஓம் திறந்திடுவாங்கள்... உண்மையாத் திறந்திடுவாங்கள்... ஓம்...ஓம்...." அவன் தனக்குத்தானே பதிலையும் சொல்லிக் கொண்டான். பெருந்தொற்றுப் பரவிய நாட்கள் அவை. ஊரடங்கு மாதக்கணக்கில் நீண்டுகொண்டிருந்தது.

அவன் உழைப்பாளி. நாட்கூலி. செலவாளி யில்லை. ஆனாலும் பெரிதாகச் சேமிக்க முடிவதில்லை.

கிளிவெட்டியில் கதிரறுக்கப் போய் ஒரு மாதமாக நின்று உழைத்து மீண்டும் திரியாய்க்கு வந்தபோது கமலாவையும் மனைவியாய்க் கையோடு கூட்டி வந்தான். கிளிவெட்டியில் நின்ற அந்தக் கொஞ்ச நாட்களுக்குள் மனதில் விதையெறிந்து, கதிராகி, முற்றி முழுவதுமாய்ப் போனாள் கமலா. திரியாய்க்குத் திரும்பும் கடைசி நாளுக்கு முதல் நாள் அவளை வயல் வெட்டையில் சந்தித்தான்.

நீண்ட மௌனத்தை அவள் கலைத்தாள். "அப்ப போப்போறியளோ?" பதிலில்லாமல் வெட்டை வயலைப் பார்த்தான் அவன். தான் கால்வைக்கும் போது பொன்னிறமாயிருந்த அந்த வயல் கதிர் அறுத்த பின் கற்பிழந்த ஆணாய் பாளம் வெடித்துக் கிடந்தது.

அவளை விட்டுவிட்டுப் போனாள் தனது வாழ்வுக்கும் அந்த வயலுக்கும் அப்படியே பொருந்திப் போகும் என்பது அழுந்த எழுந்த பெருமூச்சு வெடித்துக் கிளம்பியது.

"இஞ்ச பார்... நான் போகத்தான் போறன், ஆனாத் தனிய இல்ல..உன்னோட..."

அவள் விக்கித்துப் போய் அவனை அண்ணாந் தாள். அப்போதுவரை அவள் கண்களுக்குட்பட்ட உயரத்திலிருந்த அவனது முகம் அன்று வானுக்கும் பூமிக்குமாய் வளர்ந்திருந்தது. ஒரு கணம் நிலைத்த அமைதியின் பின் அந்த ஏதிலிப் பெண் தன்முதலெழுத் தாக அவனை மாற்றிக்கொண்டாள்.

---

சேர்த்து வைத்த பணம் முழுவதும் கொட்டில் வீடாகவும் தேவையான பொருட்களாகவும் மாறிய பொழுதில் அவன் சேமிப்பிழந்தான். அவள் தாயானாள். காலம் இரண்டு வருடங்களைத் தின்று தீர்த்த பொழுதில் அவனும் அவளும் குழந்தையுமான அந்த அழகிய வாழ்வு சேமிக்கச் சந்தர்ப்பங்களைத் தந்ததேயில்லை. நாட்கூலி நீண்டநாட்களாகக் கிடைக்காது விட்டால் அவனுக்குக் கைகொடுப்பது வேட்டை தான். திரியாய் பிரதேசத்தின் கட்டுக்குளம் கிராமத்தையண்டிய காடு அவனுக்கு மறுவீடு.

"காதும் கண்ணும் கருத்தும் தாண்டா வேட்டைக்காரனுக்கு முக்கியம்." முல்லைத்தீவில் இடம் பெயர்ந்திருந்த காலத்தில் வேட்டைக்கான பாடங் களை அவன் கற்றுக்கொண்டான். காட்டுக்குள் அழைத்துச் சென்று கற்றுத்தந்த குள்ளக் கிழவன் வேட்டையில் ஒரு துரோணன். அக்கிழவன் சொன்னவை அவனுக்கு மனப்பாடம். கற்றுக்கொண்ட காலத்தில் கண்ணும் மூக்கும் அவனுக்கு ஒத்துழைத்ததைப் போல் காது வேட்டைக்குப் பழக்கப்பட பலகாலமாயிற்று.

"டேய். உது என்னசத்தமெண்டு விளங்குதோ"

"மயிலோ..."

இவனின் பதிலால் பொறுமையிழப்பான் குள்ளக்கிழவன்.

"மண்ணாங்கட்டி... மடையனே காட்டுக் கோழியடா"

கையிலிருக்கின்ற கட்டுத் துவக்கின் பிடியால்

கிழவனின் தலையில் ஒரு போடு போடத் துடிக்கும் விருப்பத்தை அவன் மட்டுப்படுத்திக் கொள்வான். என்னதான் இருந்தாலும் கரடியின் கையில் மாட்டுப் பட்டு சாகவிருந்த அவனைத் தன் உயிரைப் பணயம் வைத்து மீட்ட கிழவன் அல்லவா.

அன்றைக்கே அடிச்சுக் கொலைசெய்திருந்தால் கிழவனை நந்திக்கடலில் அந்தரிக்க விட்டுவிட்டு வந்திருக்கத் தேவையில்லையோ என அவன் அடிக்கடி நினைப்பதுண்டு.

“போ ராசா... போயிடு... என்ர காலம் முடிஞ்சுது.. நீ போயிரு.. என்னைத் தூக்கிக்கொண்டு போய் நீயும் சாகாத... இந்த மண்ணையும் காட்டையும் விட்டொழிஞ்சா எனக்கு வாழ்வில்ல.. நீபோ”

அந்த வார்த்தைகள் அவனைத் திடுக்கிட்டு எழச்செய்தன.

வேப்ப மரநிழலில் மகளுடன் விளையாடிக் கொண்டிருந்தவள் “என்னப்பா.. கிழவற்ற கனவே” என்றாள்.

அவன் அமைதியாக அவளை வெறித்தான். பசி தின்றுகொண்டிருக்கும் அவளின் வாடிய வதனமும் பிள்ளைக்குப் பசி போக்க ஒன்றுமில்லையே என்ற வலியும் மெலிதாய் வெளித்தெரியக் கிடந்தாள் அவள்.

“முப்பத்தோராந் திகதி திறந்திருவாங்கள் தானே?” “இல்லையாமப்பா... அடுத்த பதினாலாந்திகதி வரைக்கும் இழுபடுமாம்” அவள் அழுதே விடுவாள் போலிருந்தது. அதற்கும் மேல் அவனால் பொறுக்க முடியவில்லை. “அதுதான் கிழவர் கனவில வந்திருக் கிறார்... நான் நெருப்பெட்டி வாங்கப் போறன்”

அவள் அவனை ஏறிட்டாள். அவளின் ஏறிடலைப் பொருட்படுத்தாமல் விறுக்கென சுந்தரத் தின் கடையை நோக்கி அவன் நடையைக் கட்டினான்.

“நெருப்பெட்டி வாங்கப் போறன்” என்பது அவன் வேட்டைக்குப் போகத் தயாராகிறான் என்ப தனை அவளுக்கு உணர்த்தியது. அவன் வேட்டைக்குப் போவதை அவள் விரும்புவதில்லை. பலதடவை தடுத் திருந்தாள். காவல்துறையின் கண்காணிப்பு, யானை களின் நடமாட்டம் சிறுத்தைகளின் தாக்குதல் கதை களால் அவனை அவள் கட்டுக்குள் வைத்திருந்தால். இன்று அவனது முடிவைத் தடுப்பதற்கு வந்த வாயை வயிற்றின் பசியும் குழந்தையின் அழுகையும் தடுத்தது,

“அண்ணை அம்பது நெருப்பெட்டி தாங்கோ”

சுந்தரத்தின் முகத்தில் சங்கேத சமிக்ஞை. அவன் ஆமோதித்தான். “அப்ப எனக்கு ரெண்டு பங்கு” சுந்தரம் கடையில் அவனுக்கு கடன் இருப்பதால் அவர் கேட்கும் அளவு கொடுப்பது அங்கு எழுதாத சட்டம்.

நெருப்புக் குச்சியிலிருந்த மருந்தைப் பிரிப்பதில் அவனுக்கும் அவளுக்கும் எப்போதும் போட்டி நடக்கும். அவளின் இலாவகமும் நளினமும் அவனை வாய் பிளந்து பார்க்க வைக்கும். வாயைப்பிளந்து பார்த்துக்கொண்டிருக்கும் கணவனை கடைக்கண்ணால் பார்த்தபடி அவள் முதலாவதாக வேலையை முடிக்கும் போது இலகுவாக அவன் தோற்றுப்போயிருப்பான். தோல்வியுறும் இரவில் அவர்கள் சொர்க்கங்களைப் பிளப்பர். அன்றும் அவன் தோற்றான்.

முழு நிலவுவந்து தேயத்தொடங்கிய நாளில் அவன் காட்டுக்குள் காணாமல் போனான். கமலா ஒரு நேரம் மட்டும் கஞ்சியருந்தி தவறாமல் மூன்று வேளை யும் வனதேவதையை கைகூப்பிக் கிடந்தாள்.

மரப்பொந்துக்குள்ளிருந்து எடுத்த ஆயுதத்தை கற்பூரம் சாத்தி தொழுதுவிட்டு உராய்வு நீக்கியைத் தடவி விசைகள் இயங்குவதை உறுதிப்படுத்திக் கொண்டான். வழி தவறாமலிருக்க மரங்களில் சங்கேதக் குறிகளைப் பதிந்து பதிந்து அவன் இரண்டாவது நீர்நிலை வரை நடந்த பின்புதான் அங்கு அவைகளின் காலடித் தடங்களைக் கண்டான். பெருங்கூட்டமாக அவை வந்து நீரருந்திச் சென்றிருந்தன. அவை வந்த வழியும் சென்ற வழியும் கண்டுபிடிக்கமுடியாதபடி கால் தடங்கள் மிகக் குழப்பமாக சேற்றில் பதிந்துகிடந்தன. அவன் குள்ளக் கிழவனை நினைத்துக் கொண்டான்.

“வடிவாப் பார்ரா மோனே.. பெரிய காலடித் தடத்தக் கண்டு பிடி.. அது தான் தலைவன்.. அதைக் கண்டுபிடிச்சேன்ன இந்தக் காட்ட உத்துப்பார்.. பச்ச நிறம் மறந்து கறுப்பு கண்ணுக்குள்ள படரும்.. அப்ப மனசுல அந்த காலடித் தடத்தயுந்தலைவனயும் நின.. மெல்ல நீ தலைவனா மாறு.. பிறகு தெரியும் நீ எதாலவந்தனியெண்டும் எங்க இறங்கீனனி எண்டும் தண்ணிக் குடிச்சிட்டுக் கூட்டத்த எங்க கூட்டிக்கொண்டு போனனீ எண்டும்”

கண்களைக் காட்டுக்குள் தீர்க்கமாக எறிந்தான். காடு கறுப்பாகியது.... அவை வந்துபோன வடிவங் களை அவன் கண்டான்.

மிகவேகமாக மரப்பட்டைகளை உரித்து சுருக்குச் செய்து நிலத்தில் சுருக்கைப் புதைத்து உரு மறைத்தான். தன் சுருக்குக்கு சரியாக எதிர்த்திசை யிலிருந்த மரத்திலேறி வாகாக இருந்துகொண்டு “கெவர்” கிளையொன்றில் ஆயுதத்தைப் பொருத்திக் கொண்டான்.

மரத்தில் ஏறியவுடன் கைத்தொலைபேசியின் தொடர்பாடல் வலைப்பின்னலில் ஒரு புள்ளி வருவதும் போவதுமாக ஊசலாடித் தொங்கியது. “நான் நல்லம் டி” அவளுக்கு ஒரு குறுஞ்செய்தியனுப்பிவிட்டு அலை பேசியை அணைத்து தன் இடுப்பு வாரில் இறுக்கமாகப் பொருத்திக் கொண்டான்.

“நாளைக்குப் பின்னேரந்தான் வருவினம் போலக் கிடக்கு... பின்னேரமெண்டால் வேட்ட கனிஞ்சால் உடனே போகேலுமே தெரியேல்ல. இரவில ரெத்த வீச்சத்தோட நடந்து போறதும் அவ்வளவு நல்ல தில்ல. என்ற வாசனை முழுக்க ரெத்த வீச்சமடிக்கிறதால யானையின்ரயோ கரடியின்ரயோ மணம் மூக்குக்குத் தெரியாமல் போய் அவயோடயே முட்டுப்பட வேண்டி யிருக்கும்” அவன் தனக்குள்ளேயே கணக்குகளைப் போட்டுக்கொண்டான்.

கொரோணாத் தொற்றால் நாடு பலநாட்களுக் குப் பூட்டப்பட்ட போதே அவர்களுக்கு சாப்பாடு என்பது பெருஞ்சிரமத்தைத் தந்தது. “சுந்தர

மண்ணயிட்டயும் கடனேறிக்கிடக்கு.. அவரும் பெரிசா நல்லமில்ல... கடனேற ஏற அவற்ர கண் கழுத்துக் கீழ பதியுது" கமலா அடிக்கடி குறைப்பட்டுக்கொண்டது ஞாபகம் வந்தது. மரத்தில் மோதும் காற்று அவனை தாலாட்டத் தொடங்கிற்று.

"பசி எப்பவும் குடும்பங்கள்ள பொம்பிளை களைத்தான் பலவழில தாக்குது.. உவளுகள் தான் எங்கட பசி, குழந்தைகள்ட பசி, தங்கட பசிகளைத் தீக்க எவனுக்கோ பசியடக்க வேண்டிக்கிடக்கு. பசிக்குக் குறி வயிரில்ல பொம்பிளைகள் தான்" அந்த இரவு முழுவதும் அவனைப் பசி பற்றிய சிந்தனையே ஆட் கொண்டிருந்தது. அவனுக்குப் பரிச்சயமான ஒலிகள் காற்றில் அவனைத் தொட்டெழுப்பியபோது சூரியன் உச்சிக்குவர ஒரு மணி நேரமிருந்தது.

பெருங்கூட்டமாய் அவையாவும் அவன் கண்ணெதிரே நின்றன. துள்ளளும் தாவலுமாய், ஆண், பெண் குழந்தைகளாய்.. அவைகள்.

அவைகளின் கால்கள் பட்டுப் பட்டு சுருக்கு சுருங்கத் தொடங்கியது. அவனின் இதயம் துடித்து ஆயுதத்தின் குழாய் வழியே வெளியே தள்ளியது.. அந்தா... அந்தா... சுருக்குப் படீரென்று இறுக ஆபத்தை யுணர்ந்த பெருசொன்றும் சிறுசொன்றும் துள்ளிக் குதித்தன. குட்டி மாட்டுப்பட பெருசும் படைகளும் ஒரு கணப்பொழுதில் பச்சையாகின.

குட்டியின் இரண்டு கால்களிலும் சுருக்கு தைத்திருந்தது. அவன் ஆயுதத்தின் குழலுக்குப் பலியாக தன்னையறியாமலே அது காத்திருந்தது.

குட்டியைக் கொல்வதால் எந்தப் பயனுமில்லை என்பதை அவன் அறிவான். அது வேட்டைக்குரிய அறமுமில்லை என்பதையுந்தான்.

காலில் சுருக்கு இறுகித் தந்த வலியையும், தாயைப் பிரிந்த வலியையும் தன் குரலினால் அது பதிந்தது. அப் பெருங்காடோ அவ்வலியின் குரலுக்குச் செவிசாய்ப்பதா யில்லை...சலனமற்றிருந்தது. அவனும் தான்.

வலியின் குரல் பசியின் குரலாகப் பிரவகிக்கத் தொடங்கியபோது அவன் தயாராகினான். "பசியைப் போக்கத் தாய் வந்தே தீரும். தாயைத் தவிர எதுவும் இனி இங்கு வராது". அவனது எண்ணம் நிசமானது. மெதுவாக நடந்து வந்த அந்தத் தாய் அவன் கண்முன்னே பெரிதாகிப் பூதாகரமாய் தோன்றத் தொடங்கிய போது அது தன் குட்டிக்கு பாலூட்டத் தொடங்கியது.

பசி... அவனுக்கும்.. கமலாவிற்கும்.. அவன் பிள்ளைக்கும்... சுந்தரத்திற்கும்... அந்தக் குட்டிக்கும்... பசி...

அவன் காத்துக் கிடந்தான்... பாலூட்டித் தணிந்தபின் அந்தத் தாய் குட்டியை நாக்கால் நக்கிற்று...

குள்ளக் கிழவன் சொன்னது அவனுள் எதி ரொலித்தது. "பசி பொதுவடா மோனே.. பசியத் தாறவன்தான் படையலையும் தாறான்.. பசிக்குக் கொல்றது பாவமில்லடா.. ஆனா கூட்டத்தோட கொல்லாத... பசிக்குக் கொல்லுறவன்தான் இந்தக் காட்டுக்குரியவன் டா"

காடு திடீரென ஒரு முறை அதிர்ந்து பின் மெலிதாய் கலங்கித் தணிந்தது.

---

# காதலும் விலைபோகும்



வானத்தை
வில்லாய் வளைப்பேன்
விண் முகட்டு
நட்சத்திரப் பூக்களை
பரிசாய்த் தருவேன்

திசை எட்டும் முழங்க
காதலை
முரசறைவேன்
காற்றும் அறியாமல்
சுவாசத்தால்
ஸ்பரிசிப்பேன்...

இன்னும்
என்னவெல்லாமோ சொல்லி
களிப்பிலாழ்த்தினாய்
உன்
காதலின் வீரியம் கண்டு
மகிழ்ந்தேன்.

வானத்து வட்டநிலா
கைகளில்
தவழ்ந்தது போல்
வையத்து மலர்களெல்லாம்
எனக்காய்
மலர்ந்ததுபோல்
உவகையுற்றேன்.

இன்றோ...
வானத்தையே
வளைக்கத் தெரிந்த நீ
நட்சத்திரப் பூக்களை
பறிக்கத் தெரிந்த நீ
காதலை மறந்ததேன்?

மின்னாமல் முழங்காமல்
நீ சென்றாய்
அம்மணமாய்
இலட்சிய ஆடை களைந்து

நீ
விலை போன கதை
சற்று முன்னர் தான்
அறிந்தேன்
வருந்துவேன் என்றா
நினைக்கிறாய்?

விலை இல்லாக்
காதல் என்றே
நினைத்திருந்தேன்.
உன் நிலை கண்டு
இன்று
நாணி
நகை செய்தேன்
"காதலும் விலைபோகும்"
உலக நியதி
அறிந்து கொண்டேன்

- த.கலாமணி

# அவுஸ்திரேலியாவின் "களவாடப்பட்ட தலைமுறை: அபரோஜின பழங்குடியின மக்கள் மீதான படுகொலை"

ஐங்கரன் விக்கினேஸ்வரா



ஆஸ்திரேலியா தினம் (Australia Day) "26 ஜனவரி" என்பது இந்த நாட்டின் பாரம்பரிய விழுமியங்கள், சுதந்திரங்கள் மற்றும் பொழுது போக்குகளைக் கொண்டாடும் ஒரு நாள் என்றுதான் உலகிற்குத் தெரியும்.

**ஆஸ்திரேலியா தினம் – 26 ஜனவரி:**

ஆண்டு தோறும் ஆஸ்திரேலியா தினம், பரவலாக மக்கள் மத்தியில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாறி விட்டாலும், குறிப்பாக அபரோஜின பூர்வீக குடி மக்களுக்கு வேதனையளிக்கிறது. அதனைக் கொண்டாடுவது ஏன் அவர்களிடத்தில் துக்கத்தை ஏற்படுத்துகிறது பற்றிய வரலாற்று அலசலாக இக்கட்டுரை பிரசுரமாகிறது.

ஆயினும் பல பூர்வீக குடி மக்களுக்கு, இந்த நாள் மிகவும் வித்தியாசமான உணர்வுகளை உண்டாக்கு கிறது. பிரித்தானிய காலனித்துவ படையெடுப்பின் தொடக்கத்தைக் குறிக்கும் இந்த நாள் பலருக்கும் துக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்தப் படையெடுப்புகளின் விளைவாக போர், இனப்படுகொலை, இனவெறி மற்றும் பூர்வீக குடி மக்களுக்கு எதிரான பிற அட்டூழியங்கள், பல தலைமுறைகளாக நடந்ததை, நடப்பதை நினைவுபடுத்தும் நாளாக அமைந்துள்ளது.

ஐரோப்பியரோ சீனரோ கால் வைக்க முன்ன மிருந்தே கிட்டத்தட்ட 45000– 60000 ஆண்டுகளுக்கும் மேலாக பழங்குடியின அபரோஜின மக்கள் (aboriginal Australians) அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகிறார்கள்.

இதுவரையிலான கணிப்புகளின் படி ஆஸ்திரேலியாவில் 60000 ஆண்டுகளுக்கு முன் முதல் மனித இனம் காலடி எடுத்து வைத்தது. அதன் பிறகே ஆஸ்திரேலியாவுக்குள் 18ம் நூற்றாண்டில் தான் ஐரோப்பியர்கள் நுழைந்தனர். இடைப்பட்ட காலத்தில் ஆஸ்திரேலியா தனித்திருந்தது. எந்த இனக் கலப்பும் நடக்கவில்லை, வேறு யாருமே நுழையவில்லை என்றும் நம்பப்பட்டு வந்தது.

இந்தப் பழங்குடியினர் எல்லாருமே ஒரே மொழியைப் பேசுபவர்களல்லர். ஐரோப்பியக் குடி யேற்றத்துக்கு (1788) முன்பு இவர்கள் 700 மொழிகளை பேசி வருகின்றனர். அவற்றுள் கூறி, முர்ரி, நுங்கர், யமாட்ஜி, வங்காய், அனங்கு, யாப்பா, யொல்ங்கு, பலவ ஆகியன பேச்சு வழக்கு மொழிகளாகும்.

**அபரோஜின பழங்குடியினர் -**

அவுஸ்திரேலிய நிலப்பரப்பில் வாழ்வோர், ரொறஸ் நீரிணைத் தீவுக்காரர்(Torres Strait Islanders) என இரு வகையாகப் பிரிக்கலாம். ரொரஸ் நீரிணை தீவுகள் பப்புவா நியூகினிக்கும் அவுஸ்திரேலியப் பெருநிலப் பரப்பின் வடமுனைக்கும் இடைப்பட்ட தீவுகளாகும்.

**தென் இந்திய இனப்பரம்பல்:**

இவர்கள் எப்படி இந்த நிலத்துக்கு வந்தார்கள் என்பதில் இந்தியா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளூ டாக வந்தார்கள் என்றும் கூறப்படுகிறது. ஆயினும் ஆஸ்திரேலியாவில் வசிக்கும் சில ஆதிவாசிகளின் மரபணுக்களில் தென்இந்திய ஆதிவாசிகளின் அடையாளங்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

60000 ஆண்டுகளுக்கு முன் தென் இந்தியாவி லிருந்து ஆஸ்திரேலியாவுக்குள் இந்த மரபணுக்கள் புகுந்திருக்க (தென் இந்தியர்கள் குடியேறியிருக்க) வேண்டும் என்று தெரியவந்துள்ளது. அதிலும் குறிப்பாக இந்த மரபணுக்கள் திராவிட மொழிகளைப் பேசு வோருடையதாக இருக்கலாம் என்றும் ஆராய்ச்சி யாளர்கள் கருதுகின்றனர்.

ஆஸ்திரேலிய பழங்குடியினர் (aboriginal Australians) இடையே நடத்தப்பட்ட மரபணு ஆராய்ச்சி களில் இந்த இனத்தினரின் மரபணுக்களில் 11 சதவீதம் இந்தியாவின் ஆதிவாசி இனத்தினரின் அடையாளங்கள் உள்ளன என உறுதிப்படுத்தியுள்ளன.

**திராவிட மொழி பிணைப்பு :**

இந்த இனக்கலப்பு 60000 ஆண்டுகளுக்கு முன் நடந்திருப்பதும் தெரிகிறது. இங்கு குடியேறிய தென் இந்திய பழங்குடியினர் தான் ஆஸ்திரேலிய பழங் குடியினருக்கு கருவிகள் செய்யும் தொழில்நுட்பத்தையும் சொல்லித் தந்துள்ளனர் என்கின்றர் வரலாற்று

ஆராய்ச்சியாளர்கள்.

அத்துடன் 141 தலைமுறைக்கு முன் இந்த மரபியல் இனக்கலப்பு நடந்திருப்பதையும் ஆராய்ச்சிகள் உறுதிப்படுத்தியுள்ளன. இந்த காலகட்டத்தில் தான் ஆஸ்திரேலிய பழங்குடியினர் கற்களால் ஆன கருவி களை செய்யும் தொழில்நுட்பத்தையும் அறிந்தனர். இதனால் இந்தக் கலையும் தென் இந்திய பழங்குடி யினரால் தான் இங்கே அறிமுகமாகியிருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது.

இவர்களின் மரபணுக்களும் திராவிட மொழி களைப் பேசும் இந்தியாவின் தென் பகுதிகளில் இருந்து வந்திருக்க வேண்டும் என்றும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இதை உறுதிப்படுத்த மேலும் ஆய்வுகள் தேவை என்கிறார்கள் இன்றைய ஆங்கிலேய வழிவந்த ஆராய்ச்சியாளர்கள்.

**'களவாடப்பட்ட தலைமுறை' – stolen generation :**

ஐரோப்பியரால் ஆக்கிரமிக்கப்பட்ட அபரோஜின் பழங்குடியினரின் பூர்வீகஅவுஸ்திரேலிய நிலப்பரப்பில் பரவிய அம்மை, சின்னம்மை, காசநோய், இருமல், மற்றும் சுவாச நோய்த் தாக்குதலுக்கு அதிகள வில் இப்பூர்வீக மக்கள் பாதிக்கப்பட்டு அதிகளவில் இறந்தார்கள். அதே வேளை வெள்ளையர்களாலும் இந்த மக்கள் அழிக்கப்பட்டார்கள். குறிப்பாக "வேட்டை யாடி"யதில் ரஸ்மேனியாவிலிருந்த (Tasmania) ஒரு பழங்குடி இனமே முழுமையாக அழிக்கப்பட்டது.

1950ம் ஆண்டு வரை பெற்றோரில் ஒருவர் வெள்ளையராயும் மற்றவர் பழங்குடியினராயும் இருந்து பிறக்கும் கலப்புப் பிள்ளைகளை பலவந்தமாக இதற் கென்றே ஏற்படுத்தப்பட்ட நிலையங்களில் அரசே சேர்த்துவிடும் பழங்குடியினரில் இப்படிக் கொண்டு செல்லப் பட்ட குழந்தைகள் "களவாடப்பட்ட தலை முறை" (stolen generation) என அறியப்படுகின்றனர். இதனைப் பற்றிய அயர வைக்கும் உண்மைக்கதை சொல்லும் படம் "Rabbit Proof Fence" துயர வரலாற்றின் முக்கியமான சான்றாகும்.

**அபரோஜின மண்ணில் அத்து மீறிய ஆக்க்கிரமிப்பு:**

காலனித்துவ அந்நியர்களின் ஆக்கிரமிப்பு இல்லாமல், அமைதிப் பூங்காவாக இருந்த ஆஸ்திரேலியா கண்டத்திற்கு 1770-ல் காப்டன் குக் (Captain Cook) என்பவர்தான் ஆஸ்திரேலியா கண்டத்தை கண்டு பிடித்து உலகிற்கு அறிமுகம் செய்தார் என ஆங் கிலேயர் வரலாற்று ஏடுகளில் பறை சாற்றுகின்றனர்.

அதன் பின்னரே ஆஸ்திரேலியா கண்டத்தை பிரித்தானியர்கள் சொந்தம் கொண்டாடி முழுமையாக ஆக்கிரமித்தனர். இதனை உறுதி செய்யும் விதமாக ஆஸ்திரேலிய நிலப்பரப்பை "யாருமற்ற இடம் (Terra Nullium)" என பிரகடனப்படுத்தினார்கள்.

ஆயினும் 1770-ல், ஆஸ்திரேலியா கண்டறியப் பட்டாலும், 1829-லிருந்துதான் ஆஸ்திரேலியாவில் அந்நியர்களின் குடியேற்றம் நிகழ்ந்தது. 1829-க்கு பின்னரே அந்நியர்களின் குடியேற்றம் நிகழ்ந்தபிறகே, வன்முறையையே அறியாத ஆஸ்திரேலிய பழங்குடியினரான அபரோஜினியரை அழிக்கத் தொடங்கினர்.

**கறுப்பு யுத்தமும் இனப்படுகொலையும்:**

1834 இல் பிஞ்சாரா என்ற இடத்தில் இனப்படு கொலையின் ஆரம்பமாக 80 க்கும் மேற்பட்ட அபரோஜினியரை சுட்டுக்கொன்றனர். தாஸ்மானியா மாநிலத்தில் குடியேறிய ஆங்கிலேயர்கள் 10,000 க்கும் மேற்பட்ட அபரோஜினியரை கொன்று குவித்தனர்.

கொடூரமாக நீர் நிலைகளில் நஞ்சை கலந்து வைத்தனர். ஆங்கிலேயர்களால் மாவில் விஷம் வைத்து அபரோஜினியருக்கு விநியோகித்து அவர்களை அழித்தனர். இதனை சரித்திர ஆசிரியர்கள் "கறுப்பு யுத்தம்(Black War)" என பதிவு செய்துள்ளனர்.

**நட்டஈடு கோரிய பழங்குடி மக்களின் வழக்கு :**

பூர்வீகமான தங்களது தலைமுறை வாழ்ந்த நிலத்தை அரசு சுவீகரித்துக்கொண்டதாகவும் இதற்கு நட்டஈடு தரப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி அவுஸ்தி ரேலிய பூர்வீக குடிமக்கள்அவுஸ்திரேலியாவிலேயே அதிகூடிய நட்ட ஈட்டினை கோரும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு பூர்வீக குடிமக்களுக்கு வெற்றியாக அமையு மானால் உலகின் அதிகூடிய நட்ட ஈடு செலுத்தப்பட்ட வழக்குகளில் ஒன்றாக வரலாற்றில் பதிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு அவுஸ்திரேலியாவின் நூங்கர் பூர்வ குடிமக்கள் தங்களது பூர்வீக நிலத்தின் பெரும்பகுதியான நூங்கர் பிரதேசத்தை மேற்கு அவுஸ்திரேலிய மாநில அரசு சுவீகரித்து வைத்துக்கொண்டு தங்களது உரிமைகளை பறித்திருப்பதாக தெரிவித்திருக்கிறது.


இவ்வாறு சுவீகரித்து வைத்துள்ள – கிட்டத்தட்ட – இரண்டுகோடி ஹெக்டயர் பரப்பளவு கொண்ட நிலம் மேற்கு அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் கனியவள அகழ்வு – விவசாயம் – வர்த்தகம் – பொதுமக்கள் குடி யிருப்பு போன்ற வருவாய் ஈட்டும் காரணங்களுக்காக பயன்படுத்தப்படுவதாகவும் அதில் தமக்குரிய உரிமைகள் முற்றாக கபளீகரம் செய்யப்பட்டுள்ளதாக இந்த வழக் கினை தாக்கல் செய்துள்ள பூர்வீக குடிமக்கள் தெரிவித் துள்ளார்.

இதன் மூலம் தங்களுக்கு தமது பூர்வீக நிலத்தி லுள்ள பண்பாட்டு – கலாசார உரிமைகள் பறிக்கப் பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார். இந்த இழப்புக்கு அரசாங்கம் தங்களுக்கு நட்டஈடு வழங்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர். இந்த வழக்கின் மூலம் கோரப்பட்டுள்ள நட்ட ஈட்டுத்தொகை 29 ஆயிரம் கோடி டொலர்கள் ஆகும்.

**அரசின் மன்னிப்பு கோரல் :**

களவாடப்பட்ட தலைமுறையினர் குறித்தும், அபரோஜின பழங்குடியின மக்கள் மீதான படு கொலைக்காக அன்றைய ஆஸ்திரேலிய பிரதமர் கெவின் ரெட்டு (Kevin Rudd), 13.02.2008 அன்று கான்பெரா தலைநகர் பாராளுமன்றில் தனது உரை மூலமாக பொது மக்களிடம், பொது மன்னிப்பு கேட்டு இருபது நிமிடங்கள் உரையாற்றினார். இதுவே முதன்முறையாக பழங்குடி பொது மக்களிடம் கேட்ட பொது மன்னிப்பாகும்.

# அகோரிகள்



இந்தியாவின் சென்னை மாநகரத்திலிருந்து பல நூறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஒரு குக்கிராமம் அது. நவீன தொழில் நுட்பங்களை உலகம் கொண்டா டிக் கொண்டிருக்கும் போது இன்ன மும் மூடநம்பிக்கை, பழமையி லிருந்து விடுபடாத கிராமம் அது. நகர வாழ்க்கை அறியாத நாகரீகம் தெரியாத மக்களே அங்கு குடியிருக் கின்றார்கள். பொட்டல் வெளிகளும் புழுதி புயல்களும் கொண்ட வனாந்திர தேசம் அது. அந்த ஊருக்கு காலை மாலை என இரு அரச பேருந்து சேவைகள் மட்டுமே உண்டு. குன்றும் குழியும் நிறைந்த அந்தக் கிரவல் வீதியில் அரச பேருந்துகள் புழுதியைக் கிளப்பிய வாறு குலுங்கி குலுங்கி வந்து செல்லும். மொத்தத்தில் வைர முத்துவின் கரிசல்காட்டு பூமி போல் இருக்கும்.

கிராமத்திலிருந்து சில கிலோ மீட்டர் தொலைவில் ஒரு அரச வைத்தியசாலை. நோய் நொடி என்றால் என்ன விஷக்கடி என்றால் என்ன பிள்ளைப்பேறு என்றால் என்ன மக்கள் அங்கு தான் செல்ல வேண்டும். பிள்ளைப் பேறோ அல்லது விஷக்கடியோ ஆஸ்பத்திரிக்கு என்று போய் இடை நடுவில் திரும்பி வருவதே வழமை. தொலைத் தொடர்பு சேவை மிக மந்தகதியில் கிடைக்கின்றது. சில அரச நிறுவனங்களுக்கு மாத்திரம் மின்சாரம் வழங்கப்படுகின்றது. வாக்கு வங்கிகளுக்காக இம் மக்களைப் பயன்படுத்தும் சில அரசியல்வாதிகள் வேண்டுமென்றே திட்டமிட்டு அம்மக்களை இருண்ட யுகத்தில் வைத்திருக்கின்றார்களா என எண்ணத் தோன்றும். தேர்தல் காலங்களில் மாத்திரம் பல வர்ண கொடிகளுடன் அரசியல் கட்சிப் பிரமுகர்கள் புழுதியைக் கிளப்பியவாறு அக்கிராமத்துக்கு வந்து செல்லுவார்.

சி.சிறீறங்கன்

மாரி. இந்த ஊரின் ஒரே ஒரு அரச ஊழியன். அந்த அரச வைத்திய சாலையில் கடைநிலை ஊழியனாக வேலை செய்கின்றான். அந்த ஊரில் அவனது வீடு மட்டும் தான் கல்வீடு. அவனிடம் 2ஜி தரத்திலான கைபேசி ஒன்றும் உள்ளது. அவ் ஊரில் இன்னும் சிலரிடமே அத்தரத்திலான கைபேசிகள் உள்ளன.

“ஏய் பொன்னுத்தாயி அடி கழுதை..”

“என்னாய்யா மனிஷா உசிரு போற மாதிரி கத்திறாய்”

வீட்டின் பின் சுவற்றில் வறாட்டிக்காக சாணி அடித்துக் கொண்டிருந்த பொன்னுத்தாயி கைகளை தன் நைந்து போன சேலைத் தலைப்பில் துடைத்தவாறு வந்தாள்.

“ஆமாடி உசிரு போற அலுவல் தான். வேலைக்கு அவசரமா வரச்சொல்லி இருக்காங்க. வர விடியும். துணைக்கு கருப்பாயியக் கூப்பிட்டுப் படு”

என்றவாறு தன் மோட்டார் சைக்கிளுக்கு உதை கொடுத்தான். அது இயங்க மறுத்தது. நாலைந்து உதைகளின் பின்னர் ஸ்டார்ட் வந்தது.

“அடக் கழுதை நீயும் மனுஷியைப் போல தான் நாலைந்து உதை கொடுத்தால் தான் வழிக்கு வருகின்றாய்”

என்று புறு புறுத்த வண்ணம் கிளம்பிச் சென்றான் மாரி.

மாரி மாலை ஆறு மணியளவில் தன் வேலையிடத்திற்கு வந்துவிட்டான். இவனுக்கு முன் வேலையில் இருந்த குப்புசாமி இவனைப் பார்த்ததும் புறப்படத் தயாரானான்.

“ஏலே மாரி புதுசா ஒரு கேஸ் வந்திருக்கு. இப்ப தான் வந்தது. விடியத் தான் போகும். கவனமப்பா.”

“ஓஅப்படியா..” என்றவாறு மெல்லக் கதவைத் திறந்தவாறு உள்ளே சென்று பார்த்துவிட்டு வந்தான்.

“இன்னும் இரண்டு வருசத்தில நான் நிரந்தரமாக வூட்டுக்கு போயிடுவேன். என்ர சர்வீசில. நான் இம்மாத்துண்டு தப்புக் கூட

செய்ததில்லை.. நீ சின்னப்பயல். சமத்தா நடந்துக்கோ" என்றான் குப்புசாமி.

"நீ மூடிற்றுப் போறீயா குப்பா. போயீ உன் பிழப்பைப் பார். எனக்கு அட்வைஸ் பண்றத நிறுத்திக்கோ புரிஞ்சுதா;"

என்று ஏளனமாக பதிலளித்தான் மாரி.

குப்புசாமி சென்றதும் மாரியில் பெரும் பரபரப்பு தொற்றிக்கொண்டது. எப்போதாவது ஒருமுறை அவனுள் இந்த பரபரப்பு ஏற்படுவதுண்டு. இன்றும் அப்படித்தான். அந்த அறைக்கு செல்வதும் பின் வெளியே வருவதுமாக இருந்தான். தன் சிறிய ரக கைப்பேசியை எடுத்து தன் பங்காளியான வீராச்சாமிக்கு தகவல் சொன்னான்.

"எலே வீரா அதிர்ஷ்டம் அடிச்சிருக்கியா அதிர்ஷ்டம். நமக்கு பெரும் திமிங்கிலமா மாட்டிருச்சு. ரேட் கொஞ்சம் அதிகமாத்தான் இருக்கும். பெரும் முதலைகளா பார்த்துக் கொண்டு வா. சோம்பிக் கிடக்காத. விடிஞ்சா போயிடும்."

எதிர்முனையில் மாரியின் கதைக்கு அர்த்தம் புரிந்தவனாக

"என்னாய்யா மாரி அப்படியா சொல்ற. இப்ப பாரு பெரும் முதலைகளா கொண்டுவாறன்"

என்றான் வீரா உற்சாகம் தாளாது.

"நூறிலிருந்து நூற்றைம்பது வரை பேசி முடி. அதுக்கு குறைச்சலா வேணாம். அந்த அளவுக்கு திறம் சரக்கு மாட்டி இருக்கு"

"ஓ அப்படியா புளியங்கொம்பாத்தான் மாட்டிருச்சுப் போல. நம்ம காட்டுல அடை மழை என்று சொல்லு பங்காளி" என்று எதிர்முனையில் தன் காவிப் பல் முழுவதும் தெரிய சிரித்தான் வீரா.

மாலை ஆறு மணிக்கு வேலைக்கு வந்தவன் ஒரு நிமிஷம் கூட இருக்காமல் குட்டி போட்ட பூனை போல அங்கும் இங்குமாக பதட்டத்துடன் நடந்து திரிந்தான் மாரி. அவனது பதற்றம் போகவில்லை. காதில் செருகி வைத்திருந்த துண்டு பீடி ஒன்றை எடுத்து பற்ற வைத்து அதன் புகையை ஆழமாக உள் இழுத்துக் கொண்டான். அதன் சுகத்தை கண்களை மூடி அனுப வித்துக் கொண்டான். நேரமோ பத்து மணியைத் தாண்டி இருந்தது. மீண்டும் வீராச்சாமிக்கு போன் செய்தான்.

"ஏய் வீரா சோம்பேறி நாயே எங்க இருக்கிறாய்? எல்லாம் கெட்டுப் போகப் போகுது. நம் திட்டமும் தான்"

"கோபப்படாத மாரி. நல்லதொரு பார்ட்டி மாட்டிருச்சு. இந்தா வந்திட்டிருக்கேன்."

"ஏய் கழுதை முன் வாசல் வழியாக வந்து தொலைச் சுடாத. வழமை போல பின் வாசல் வழியாக் கூட்டிவா.

துண்டு பீடியை அணைத்து மீண்டும் தன் காதில் செருகிக் கொண்டான் மாரி.

மாரி தன் சம்பளத்துக்கு மேலதிகமாக இவ்வாறான தில்லுமுல்லு வேலைகள் செய்து அதிகமாக உழைத்திடுவான். அவன் செய்வது நல்லதா கெட்டதா பாவமா புண்ணியமா என்பது அவனுக்கு முக்கியமல்ல. பணம். அப்பணத்தினை எவ்வழியிலும் உழைத்திட வேண்டும் என்பதே அவன் ஒரே இலட்சியம். இது மட்டுமல்ல தன்னைப்போல் ஏழை எளிய இளசு களால் அடைய முடியாத விடயங்களை ஏதோ ஒரு வகையில் பெற்றுக் கொடுத்த திருப்தி.

பின் வாசல் கதவைப் பார்த்தவாறு தன் காற் சட்டைப் பையில் இருந்து வெற்றிலை சரையை எடுத் தான் மாரி. வெட்டுப்பாக்குகளை வாயில் அள்ளிப் போட்ட வாறு வெற்றிலையை எடுத்து அதன் பின்புறத்தில் உள்ள நரம்புகளில் சுண்ணாம்பை தடவி மடித்து வாயில் போட்டுக் கொண்டான். மேலும் சுண்ணாம்பை தன் வெட்டுப் பல்லில் தடவிக் கொண்டு குதப்பிக் குதப்பியவாறு வெளியே இருந்த கல் ஒன்றில் அமர்ந்திருந்தவாறு அவ்வப்போது புளிச் புளிச்சு என்று துப்பிக் கொண்டிருந்தான்.

அப்போது வீரா மூச்சிரைக்க சைக்கிளில் வந்து சேர்ந்தான். அவன் பின்னே ஓர் இளவலும் வந்திருந் தான். முன்னர் ஓரிரு முறை வந்து போன சின்னச்சாமி தான் அவன். மாரி உடனே வாயில் கை வைத்தவாறு உஸ்.. என்று சொல்லியவாறு இருட்டான பகுதிக்கு கூட்டிச் சென்றான். அங்கு இரகசிய உரையாடல்கள் நடந்தன. பணம் பரிமாறப்பட்டது வீரா தன் தரகுப் பணத்துடன் விடை பெற்றுச் சென்றான்.

"நடிகை மாதிரி இருக்கும் இருபத்தைஞ்சுக் குள்ள தான் வயசு. மினக்கடாமல் அலுவல முடிச்சிட்டு கெதியா திரும்பிடனும்"

என்று பலவாறு சொல்லி அனுப்பினான் மாரி. சின்னச்சாமி தஞ்சாவூர்ப் பொம்மையைப் போல் தலையை அசைத்தவாறு மெல்ல கதவை திறந்து கொண்டு அந்த அறைக்குள் நுழைந்தான். மாரி கதவை சாத்தி அதன் முன்னே குந்தியமர்ந்து கொண்டான்.

நேரம் இரவு பதினொன்றைத் தாண்டி இருந்த தால் யாரும் வர வாய்ப்பில்லை என்று எண்ணிப் பெருமூச்சு விட்டான் மாரி.

அரை மணி நேரத்தின் பின்னர் மெல்லக் கதவை திறந்து கொண்டு சின்னச்சாமி வெளியில் வந்தான்.. வாயெல்லாம் பல்லாகச் சிரித்தபடி.

"ஏலே மாரி இப்படி ஒரு சாப்பாடு நான் வாழ் நாளில் சாப்பிட்டதே இல்லை. நடிகை என்ன நடிகை அந்த அளவுக்கு வடிவான குட்டி. ஆனா அதன் தலை யெல்லாம் ரத்தம். என்னய்யா ஆக்சிடென்ட் கேசா"

"ஆமாண்டா கழுதை அது உனக்கு இப்ப ரொம்ப முக்கியம். அலுவல் முடிஞ்சா கிளம்பறது தானே" என்றான் பதட்டத்துடன் மாரி"

"ஆமாண்டா மாரி நான் கிளம்ப தான் போறேன். அதுக்கு முன்னாடி உனக்கு ஒன்னு தந்துட்டு போறேன்"

என்று தன் சட்டைப் பையில் இருந்து பத்து ரூபாய் தாள் ஒன்றை எடுத்து மாரியின் கையில் வைத்தான்.

மாரிக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

"என்னடா இது புதுப்பழக்கம். என்றுமில்லாமல் இன்றைக்கு. இத நம்ப முடியாம உள்ளது."

"நான் சொல்லப் போவதை கேட்டு நீ கொஞ்சம் அதிர்ச்சி அடையாமல் இரு. ஏன்னா அந்த பிணத்துக்கு உயிர் இன்னும் ஊசலாடிக் கொண்டே இருக்கிது. அத சொன்னா நீ எனக்கு அடிப்பா. நீயே போய் பார்த்துக்க. நான் வரட்டா மாப்பிள"


என்றவாறு கிளம்பிச் சென்றான் சின்னச்சாமி. நெருப்பை மிதித்தவன் போல் துள்ளிக் குதித்து தலை தெறிக்க அந்தப் பிண அறையை நோக்கி ஓடினான் மாரி.

சித்தாந்தன்

# வெயிலை அமர்த்த ஒரு மரநிழலைத் தர மறந்துபோனேன் லலிதகோபன் கவிதைகள்




எல்லாக் காலங்களிலும் ஒரு பிரதி ஒரே தன்மையான வாசிப்புக்கு உட்படுத்தப்படுவதில்லை. ஒரு பிரதி தன்னளவில் நெகிழும் தன்மையைக் கொண்டிருக்கின்றது. அது திண்மப் பொருள் அல்ல. நாங்கள் ஒரு பிரதியைப் படிக்கின்றபோது. குறித்த பிரதியாளன் கருதிக்கொண்டதை நாமும் அடையவேண்டும் என்ற கட்டாயமில்லை. அதை அந்தப்பிரதி யாளனே வலியுறுத்தவும் முடியாது. ஒரு பிரதி காலங்கடந்தும் வாசிப்புக்கு உட்படுத்தப்படுகின்றது அல்லது காலம் கடந்தும் புதியவிதமான பார்வைகளைத் தோற்றுவிக்கின்றது என்றால் அந்தப் பிரதி கொண்டுள்ள நெகிழ்வுநிலையே காரணம் எனலாம். அதாவது அந்தப் பிரதி ஒற்றைத் தனமான கருத் தேற்றத்தை திணிக்காது பன்முகத்தளப் புரிதலுக்கான வாசிப்புக்கு இடமளிக்கின்றது. எமது செவ்வியல் இலக்கியங்கள் பலவும் இத்தன்மையைக் கொண்டிருக்கின்றன. பல சந்தர்ப்பங்களில் மறுவாசிப்புக்கு அவை உட்படுத்தப்படுகின்றபோது அவை எழுந்த காலச்சூழலையும் மீறி அவை சமகாலத்தன்மை பெறுகின்றன.



இலக்கியம்என்பது வெறும் வடிவச்சங்கதியல்ல என்பது முக்கியமானது. ஒரு வடிவம் ஒரு பிரதிக்கு இலக்கிய பெறு மானத்தை வழங்கிவிடாது. ஒரு பிரதியாளனைவிடவும் அதனை வாசிக்கின்ற வாசகர்களே அப் பிரதிக்கு பெறுமானத்தை வழங்கி விடுகின்றார். வெறும் புறநிலைக் கருத்தேற்றங்கள் அந்தப் பிரதியின் மீது கட்டமைக்கப் படுகின்ற மாயத்தோற்றங்களே. எதைக் கொண்டாடுவது எதை நிராகரிப்பது என்ற அதிகார மையங்கள் இலக்கியப் பரப்பில் உருவாகத் தொடங்கிவிட்டன. இவை வலிந்து சில இலக்கியப் பிரதிகளை கொண்டாடுவதற்கான யுத்திகளைத் தொடர்ந்து மேற் கொண்டு வருகின்றன. இவை குழுநிலை சார்ந்து வலிந்த கருத்தேற்றங்களை செய்து விடுவதோடு அவற்றை பொதுக் கருத்து நிலையாக மாற்றவும் முயல்கின்றன. ஆனால் இவை யதார்த்தமற்ற செயல் நிலைகள். ஒரு படைப்பு அதன் மீது கட்டமைக்கப்படுகின்ற கருத்தேற்றங்களால் மட்டும் நிலை நிறுத்தி விட முடியாது. அதற்கு இயங்கு நிலைத் தன்மை இருக்கவேண்டும். வெறும் சொற்களை ஒரு கோவை நிரலொழுங்கில் அடுக்கிவிட்டு அதன் மீது இலக்கிய சாயத்தைப் தடவ முடியாது. ஏனெனில் சாயம் கரைந்துபோகக்கூடியது. வார்த்தைகள் மட்டுமே எஞ்சிக் கிடக்கக்கூடியன. இலக்கியம் சொற்களால் எழுதப்படுவ தாக இருந்தாலும் வெறும் சொற்கள் மட்டும் இலக்கிய மல்ல. அப்படி யென்றால் அதற்கு இலக்கியப் பெறு மானம் எப்படி வந்தடைகின்றது என்ற கேள்வி எஞ்சுகின்றது. இலக்கி யம் மட்டுமல்ல கலைகளுக்கும் இது பொருந்தும். கலை என்பது அதன் புறத்தோற்ற மல்ல. கலையிலும் இலக்கியத்திலும் மரபார்ந்த எல்லைகள் மீறப்பட்டு வருகின்றன. நிர்ணயமயப்படுத்தப்பட்ட கலை, இலக்கியக் கோட்பாடு கள் மீது எண்ணற்ற கேள்விகள் முன்வைக்கப்படுகின்றன. நிகழ்த்தப்படுவதால் மட்டும் நிகழ்த்துகலைகள் எல்லாம் அவற்றுக்கான பெறு மானத்தை எய்திவிடுவதில்லை. அதைத்தாண்டிய புரிதல் பார்வை யாளனிடம் ஏற் படுத்தும் புரிதலிருந்து தான் அது கலைக்கான பெறுமானத்தை அடைகின்றது.

இலக்கியத்தில் ஏலவே இருந்த சட்டாம்பித்தன மான விமர்சனமுறைமைகள் மாற்றம் அடைந்து

விட்டன. தனிநபர் விருப்பு வெறுப்புக்களால் கட்டமைக் கப்படும் இத்தகைய மையங்கள் இலக்கியச்சூழலைப் பொறுத்தவரை ஆபத்துக்குரியவை. இலக்கியத்தின் பொதுவான இயங்கியலை மறுதலிப்பவை. கலையோ இலக்கியமோ தன் வாசிப்பை அதை வாசிப்பவனின் அனுபவங்களின் வழிதான் அணுகப்படுகின்றது அல்லது வாசிப்பவனிடம் தன் அனுபவத்தைப் பொருத்திப் பார்ப்பதற்கான ஏதோவொரு வகையில் வாசலைத் திறந்துவிடுகின்றது. தமிழ்ச்சூழலில் இலக்கியம் பற்றிய கருத்துச் சொல்லல்கள்தான் தொடர்ச்சியாக நடந்து வருகின்றன. சிந்தனைமுறை வளர்ச்சியடையவில்லை. பெரும்பாலான கருத்துச் சொல்லிகள் மேற்கின் வழிப் பட்டே இலக்கியத்தை அணுகுகின்றார்கள். சுயமான அணுகுமுறை இவர்களிடம் இல்லை. தாம் கற்றுக் கொண்ட கோட்பாடுகளின் வழி இலக்கியத்தை அணுகு கின்றார்கள். அல்லது கோட்பாடுகளை இலக்கியத் துடன் பொருத்திப் பார்க்கின்றார்கள். இது முற்றிலும் அபாயகரமானதும் அபத்தமானதும்கூட. எல்லா மொழி களிலும் அவற்றுக்கான தனித்துவமான அம்சங்கள் காணப்படு கின்றன. மொழி என்பது கட்டமிடப்பட்ட அல்லது நிர்ணயகரமான ஒன்றல்ல. மொழியை வெறும் தட்டையான விதத்தில் அணுகமுடியாது. அது எப்போதும் இயக்கமுடைய ஒன்று. பொதுவாக மொழி வழியான அடையாளப்படுத்தப்படுகின்ற சமூகங்கள் தமக்கான செவ்வியல் மரபைக்கொண்டதாகத் தானிருக்கும். ஆனாலும் காலத்தின் இயங்குநிலைக்கு ஏற்ப அவை மாற்றங்களை உள்வாங்கக்கூடிய நெகிழ்ச்சியத் தன்மையையும் கொண்டிருக்கும். தமிழில் ஏலவே இருந்த கவிதை கூறும் மரபு நவீன கவிதை கூறல் மரபாக மாற்றம் அடைந்திருக்கின்றது. நவீன கவிதை களுக்கும் பல்வேறு தளமாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. இவை வெறும் பொருண்மை சார்ந்து மட்டுமல்ல. வடிவம் சார்ந்தும் ஏற்பட்டிருக்கின்றன. மரபிலக்கிய வடிவங்களுக் குள்ளேயே வடிவமாற்றங்கள் நிகழ்ந்திருக் கின்றன. தமிழ் செய்யுள் மரபே காலத்துக்கு காலம் மீறல்களைச் செய்து கொண்டுதான் வந்திருக்கின்றது. ஒரே வகையான சொல்லல் முறையையோ வடிவ முறையையோ கொண்டிருக்கவில்லை. வெண்பா, விருத்தம் என காலத்துக்கு காலம் ஏற்றபட்ட வடிவ மாற்றங்கள் ஒன்றின் போதாமையில் இருந்து மற்றது தோற்றம் பெற்றது என்பதற்கான சான்றுகள்தான். இந்த வழியில்தான் நவீன கவிதைகளிலும் தளமாற்றங்கள் நிகழ்ந்திருக் கின்றன. நவீன கவிதை நிலைபெறத் தொடங்கியதி லிருந்து காலத்துக்குக்காலம் வடிவப் பரிசோதனை களுக்குள்ளும் வடிவமாற்றங்களுக் குள்ளும் உள்ளாகி வந்திருக்கின்றது. அதன் வளர்ச்சிப் போக்கை அவதானிக்கின்றபோது இதைப் புரிந்து கொள்ள முடியும்.

லலிதகோபனின் முதலாவது கவிதைத் தொகுதி "காலாறப்போனவள்" தாயதி வெளியீடாக வந்திருக் கின்றது. லலிதகோபனின் கவிதைகள் நவீன கவிதையில் ஏற்பட்டிருக்கின்ற தளமாற்றங்களுகளின் வழி இயங்குகின்றன. நிர்ணயகரமான கவிதை சொல்லும் முறையைப் புறக்கணித்து புதிய வழிகளில் செல்கின்றன. ஏற்கனவே இருந்த போக்குகளை உள்வாங்கிக் கொண்டும் புதிய வழிகளை உருவாக்கிக் கொள்ளும் யுத்தியை லலிதகோபன் பயன்படுத்து கின்றார். பல கவிதைகளில் வடிவ உடைப்பு நிகழ்ந்திருக் கின்றது. இந்த வடிவ உடைப்புக்கள் ஏலவே கவிதை களில் ஏற்பட்டிருக் கின்ற உடைப்புக்களின் வழி நிகழ்ந்த வைதான் எனினும் புதிது புனைவதான உத்தியை அவை கொண்டிருக்கின்றன. அவரின் கவிதைகள் ஒற்றைத்தன மான புரிதலுக்குரி யவை அல்ல. பிரதியின் பன்முகத் தன்மையான நிகழ்த்துதலை ஏற்படுத்தவல்லன.

கதை கூறுவதைப் போலவும் காட்சிச் சித்தரிப்புக் களாயும் உள்முகத்தனமான வாசிப்புக்குரியவையாகவும் அவை காணப்படுகின்றன. லலிதகோபனின் கவிதை களில் உட்படிந்துகிடக்கின்ற மந்திரத் தருணங்களும் மாயங்களும் சராசரியான புரிதல்களுக்கு உரியவை யல்ல. அவை இன்னொரு தளத்துக்கு உரியவை. கவிஞனாக அவர் தந்திருக்கின்றவை வெறுமனே கருத்துக்களையல்ல. காட்சிகளை திரித்துத்திரித்து சொற்களினால் அவர் எல்லாவற்றையும் வரைந்து செல் கின்றார். பல இடங்களில் சொற்கள் குழந்தைகளின் லாவகமான கிறுக்கல்கள் போல இயல்பாக அமைந்து விடுகின்றன. பல இடங்களில் ஒரு ஞானியின் புதிர் அவிழாச் சொற்களால் கவிதைகள் நிரம்புகின்றன. லலிதகோபனின் கவிதைகளின் பலமே அவை கட்டடமைக்கின்ற புறக்காட்சிச் சித்திரிப்புக்கள்தான். ஆனால் அவை புறத்தே தோன்றும் காட்சிகள் என்ற அர்த்தத்தில் பொருள் கொள்ளலை நிகழ்த்தவில்லை. அவற்றை உள்ளிழையாகத் தொடர்ந்து செல்லும் ஒருமைப்பட்ட அல்லது ஒருமையைக் குலைக்கின்ற சித்திரிப்புக்கள். அவை வெறும் காட்சிகளல்ல என்ற சித்திரத்தை வாசிப்பவர்களுக்கு ஏற்படுத்தும். அநேக கவிதைகள் அவர் தான் வாழுகின்ற நடைமுறை உலகை வெறும் சம்பவங்கள் நிகழ்வுகளின் கோர்வையாகக் காணாது அவற்றினுள்ளே நிகழ்கின்ற இரசாயன மாற்றங்களை நோக்கிச் செல்பவையாகக் காணப்படு கின்றன. சமூகம் கட்டமைத்து வைத்திருக்கின்ற பல வற்றையும் இன்னொரு விதமாக காட்சிப்படுத்துபவை. கவிதைகளைப் படிக்கின்றபோது இந்த மறுவளமான அணுகுமுறை கவிதையில் தேவையா என்ற கேள்வி எழாமல் இருக்க முடியாது. உள்ளதை உள்ளதாக சொல்லவதில் என்ன பிரச்சினை இருக்கிறது? உள்ளதை உள்ளதாக சொல்வது கவிதையின் வேலையல்ல. கவிதை இருப்பதில் இல்லாததை புனைவதாகவும் இல்லாததில் இருப்பதைப் புனைவதாகவும் அமைகின்ற போதுதான் புதுமையும் அர்த்தச் செறிவும் நிரம்பியதாக இருக்க முடியும். நவீன கவிதைகளில் மட்டுமல்ல எமது மரவு இலக்கியங்களிலும் இந்தப் புனைவு உத்திதான் அதிகமும் காணப்படுகின்றது. அதுதான் அவற்றை ஒற்றைப் புரிதலுக்குள்ளும் காலவரண்முறைகளுக்குள் சிக்கவைக்காது பரந்த தன்மையிலான புரிதலை, வாசிப்பை ஏற்படுத்தி விடுகின்றது. கவிதையைப் புரிதல் என்பது வெறும் நேர்கோட்டுமுறையிலமைந்த பொருள் கொள்ளலல்ல. கவிதையோடு இயைந்தும் விலகியும் பயணிப்பது. இந்தப் பயணிப்பை லலிதகோபனின் கவிதைகள் தந்து விடுகின்றன.லலிதகோபன் காட்சி களின் வழி முரண்நிலை களைத் தோற்றுவித்துக் கொண்டே கவிதைகளில் சாகசத்தை நிகழ்த்துகின்றார். சிறிய நிகழ்வுகளுக்குள் கூட ஒரு பெருங்காவியத்தைப்

புனைந்துவிடுகின்ற நுட்பமான மொழிதல் அவரின் உடையது. அவரின் "புத்தனும் காமனும்" என்ற கவிதை நுண்ணியதான வெளிப்பாட்டு முறையுடன் கூடியது. நீரில் விழுந்து கரைகின்ற சவர்க் காரத்தின் மூலமாகப் ஒரு தரிசனவெளியை அவர் புனைந்து விடுகின்றார். சவர்க்காரத்தின் கரைதலின் மூலம் இருத்தலையும் இன்மையையும் ஒருங்குசேர நிகழ்த்து கின்றார். மோகம் கனக்கும் சலனத்தையும் ஞானத்தின் உறைநிலையையும் கவிதை கொண்டு தருகின்றபோது, வாழ்க்கை என்பது இவை இரண்டுமா? இவற்றில் ஏதாவது ஒன்றா என்ற பிரிநிலைத்தன்மையை ஏற்படுத்தி விடுகின்றது.

"நீருள் இருக்கும் /சவர்க்காரத்தின் கிறக்கம்/
முதல் புணர்வின் போதான/உச்சத்தின் தேடல்./
கரைதலை அனுபவிக்கும் /அதன் தியானநிலை/
புத்தனின் படிமம்./சவர்க்காரத்திற்கு மட்டுமே/
சாத்தியமாகிறது/ புத்தனாயிருத்தலும்/
காமனாயிருத்தலும்/ சமகாலத்தில்"

காமத்தையும் தியானத்தையும் சமமான ஞானநிலையாக கவிஞர் கொண்டுவருகின்ற இந்த முரணிலைதான் இந்தக் கவிதையின் முக்கியமான அம்சம். இத்தகைய பார்வை அவரின் பல கவிதைகளிலும் காணப்படுகின்றன.

கவிதை ஒரு வகையில் கொந்தளிக்கின்ற மனத்தின் குரல் என்றே சொல்லலாம். அருவமாய் ஊர்ந்து செல்லும் காற்றைப் போல அதை பல இடங்களில் உணரமுடிகின்றது. லலிதகோபனின் கவிதைகளில் பெரும்பாலானவை இந்த வகைக்குரியனவே. அதிகமும் அவரது கவிதைகள் ஆழ்ந்த வாசிப்பைக் கோரிநிற்பவை. ஒரு வாசிப்பில் புரிந்துகொள்ள முடியாத கவிதைகளே இந்தத் தொகுதிக் கவிதைகளில் அதிகமும் காணப்படுகின்றன. பல கவிதைகளில் பரிசோதனைகளை நிகழ்த்தியிருக்கின்றார். நவீன கவிதைகள் தரக் கூடியதான பன்முகத்தளத்திலான வடிவச் சோதனைகளை நிகழ்த்தியிருக்கின்றார். பலருடைய கவிதையைப் போல ஒரு அச்சில் வார்க்கப் பட்ட வெவ்வேறு நிறங் களிலான உருவங்களைப் போல அவரது கவிதைகள் இல்லை. ஒரே வகையான பொருள் கோடலுக்குரிய கவிதைகளிலும் அவற்றின் இயங்கு நிலை அவரது கவிதைகளை புதிய தளமாற்றங்களுக்குட் உட்படுத்து கின்றது. தமிழில் நவீன கவிதைகள் மீதான வடிவப் பரிசோதனைகள் தொடர்ந்து வருகின்றவை தான். ஆயினும் ஒன்றை அழித்து இன்னொன்றாக இத்தகைய முயற்சிகள் இருந்ததில்லை. அது சாத்தியமும் இல்லை. ஏனெனில் கவிதை மற்றைய இலக்கியப் பிரதிகளோடு ஒப்பிடும் போதும் தனக்கான தனித்துவமான இயல்பு களை கொண்டிருக்கின்றது. மற்றைய இலக்கியப் பிரதிகள் கவிதைகளின் இயல்புகளைத் தம்முள் உள் வாங்கக்கூடியவை. கவிதைகளின் சாயலைப்பெறக் கூடியவை. ஆனால் கவிதை அவ்வாறில்லை. அதனால்த் தான் பிற இலக்கிய வடிவங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முயற்சிகளை விடவும் கவிதைகளில் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகள் அதிகமாக இருக்கின்றன. அவை ஒரு போக்கையும் உருவாக்கக் கூடியனவாக உள்ளன.

வடிவங்களைக் கடந்து செல்வது என்பது கவிதைகளின் பொதுவான இயங்குதன்மை. கவிஞர்கள் தமக்குள்ளேயே மீறல்களை நிகழ்த்துகின்றார்கள். தமது கவிதை வடிவங்களை தாமே கடந்து கொண்டிருக்கின்றார்கள். லலிதகோபனின் கவிதைகளில் அவர் தன் வடிவங்களைத் தானே கடந்து கொண்டிருக்கின்றார். "மூன்றுபிரதிகள், பல்தேர்வு வினாத்தாள், அச்சச்சோ" போன்ற கவிதைகள் வடிவமீறல்களுக்கு உதாரணமாகக் கொள்ளக்கூடியவை. இந்தக் கவிதைகள் கொண்டுள்ள பொருண்மையை விடவும் அவற்றைக் கூறுகின்ற முறைமை கவிதை மீதான ஈர்ப்பை ஏற்படுத்துகின்றன. தேர்ந்த கவிதை சொல்லிகள் மிகச் சாதாண விடயங்களையும் பெரும் அனுபவமாக மாற்றிவிடுகின்றார்கள். லலிதகோபனிடம் கவிதையைப் புதுவிதமான முறைகளில் வெளிப்படுத்துவதற்கான யுத்திகள் காணப்படுகின்றன. எனினும் இவற்றை மட்டுமே கவிதையின் இயங்குநிலையாக கருதிவிட முடியாது. லலிதகோபனின் கவிதைகளில் அதித சொற்சேர்க்கைத்தனம் இல்லை. அவர் மொழியை பிரக்ஞைபூர்வமாகப் பயன்படுத்துகின்றார். கடந்துசெல்லும் வாழ்க்கையில் தான் தரித்துச் சென்ற எல்லாவற்றையும் அல்லது எல்லா இடங்களையும் கவிதைகளில் கொண்டு வருகின்றார். மௌனமாகக் கரைந்து ஒளியேற்றுகின்ற விளக்கைப் போல அவரது கவிதைகள் வெளிச்சத்தைப் பாய்ச்சுகின்றன. "கால்களின் கவிதை" இவ்வகையில் குறிப்பிடத்தக்க கவிதை.

"மணலுக்குள் மூழ்குவதும்
அலைகளிடையே மீள்வதுவும்
அந்த ஒற்றைக் காற்சுவடே.
தூரத்தே கழற்றி வைக்கப்பட்ட
பாதணிகள்தான் பாவமான பிறவிகள்.
ஒன்றைத் தொலைத்தும்
இன்னொன்றுக்கான
பிரார்த்தனையுமாய் நகரும் கணங்கள்.
கால்களுக்கென்ன இன்னும் தூரமாய்
யாரோடோ விளையாடியபடியும் ஓடியபடியும்
உன்னை ஒரு விளையாட்டாயும்
என்னை ஓர் கடலாகவும்
புனைந்த கால்களின் கவிதையை
இவ்விதம்தான் எடுத்துரைப்பேன்"

கவிதை என்னத்தைப் பேசுகின்றது என்பது அவரவர்களின் அனுபவங்களின் வழி அணுகப்பட வேண்டியது. கால்களின் கவிதை கால்களின் கவிதையாக மட்டுமல்ல என்பதுதான் இங்கு நினைவுறுத்தவேண்டியது. கவிதையில் லலிதகோபன் கொண்டுவரும் சித்திரம் மனுஸ்ய புத்திரன் தன் கவிதைகளில் கொண்டுவருகின்ற சித்திரத்தைப் போன்று காட்சிகளின் தளமாக விரிகின்றது. ஆயினும் கவிதையின் செறிவு வெறும் காட்சிநிலைக்குரியதாக அன்றி கருத்துநிலைச் செறிவையும் கவிதைக்கு ஏற்படுத்திவிடுகின்றது. இந்தத் தன்மை "பறவை தேர்ந்த திசை, இரவுக்குள் நுழைதல், தொன்மை மிகு துயரங்கள்" போன்ற கவிதைகளிலும் காணப்படு கின்றன.

ஈழத்து நவீன கவிதைகள் புதிய வழியில் புதிய திசைகளில் பயணிக்கத் தொடங்கியிருக்கின்றன. லலிதகோபனின் காலாறப்போனவள் கவிதைத் தொகுதி இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கன்றது. வடிவநிலையில் மட்டும் கவனம் கொள்ளாது கவிதையின் பொருண்மை சார்ந்தும் நுண்ணிதான வெளிப்பாடுகளை இத்தொகுதி கொண்டுள்ளது. கவனம் கொள்ளத் தக்க பிரதியாக இத்தொகுதி இருக்கின்றது.

## பலஸ்தீனிய கவிதைகள் இரண்டு

### கெக்கிறாவ ஸுலைஹா

இலங்கை, தலாவத்துகொட, தோலாலந்த கார்டனில் இயங்கி வந்த SRI LANKA COMMITTEE FOR SOLIDANTY WITH PALESTINE நிறுவனம் வாயிலாக, அதன் பொதுச் செயலாளர் திரு டீ.ஜெயசிங்க 2002களில் தொகுத்த 'PALESTINIAN POETRY' “பாலஸ்தீனிய கவிதைகள்“ நூலிலிருந்து இந்தக் கவிதைகள் இரண்டையும் மொழிபெயர்க்கிறேன் “ஜீவநதி“க்காக.

இந்த நூல் அபூ சல்மாவுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது. யாரிந்த அபூ சல்மா? அவர் ஒரு பலஸ்தீனக்கவி. பிரான்ஸ், ரஷ்யா, சிலி, கியூபா என்று எந்த நாட்டுப் போராட்டத்தையும் உதாரணமாக எடுத்துக்கொண்டு நாம் பார்த்தாலுமே, விடுதலையினதும், புரட்சியினதும் குரல் எங்குதான் எப்போதுதான் ஒலித்தாலும், இராணுவ பலத்தின் மற்றும் ஆயுதபலத்தின் அளவே கவிஞர்கள், எழுத்தாளர்கள், நாடகவியலாளர்கள் என்று பலரது குரலும் ஒரு போராட்டத்துக்கு வலு சேர்க்கவே செய்திருக்கும். பலஸ்தீனமும் அதற்கு விதிவிலக்கு அல்ல. இது விடயத்தில் அபூ சல்மா வெகு உயரத்தில் இருந்த எழுத்தாளுமை. அற்புதமான கவிஞர். போராட்டக் களத்தில் நின்றவர்களின் வலு சேர்க்கும் ஊக்குவிப்புக் குரல். அதாவது, பலஸ்தீனப் போராட்டத்தில், தன் உயர் கவிதா இலக்கியத்தின் மூலம், போராட்டவீரர்களுக்கு உறுதுணையாக நின்ற தேசாபிமானி. 1980களில் தன் எழுபத்தைந்தாம் வயதில் இறந்தார். அவரது மரணத்தின் போது அவர் பலஸ்தீன எழுத்தாளர்கள், பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவராக இருந்தார். 1979இல் Lotus Award வென்றவர். “இலக்கியம் என்பது மனிதனும் அவனது கண்ணியமும் அவன்தன் தாய்த்திருநாட்டின் புகழும்தான். வெற்று மானுடக் கோரல்களுக்காக இவை எவையுமே கைவிடப்பட முடியாது.” என்பார் அபூ சல்மா.

“அன்பு மிகு தாய்த்திருநாட்டு மண்ணிலிருந்து ஊற்றுக்காணாத கவிதைகள் நீடிக்க, நிலைக்க வாய்ப்பில்லை. ஏனெனில், அவற்றுக்கு வேர் இல்லை. ஒரு தாய்நாட்டின், அங்கு வாழும் மக்களின் விருப்பங்களை, கவனங்களை, காயங்களை, ஆவல்களை புறக்கணித்த எழுத்துக்கு என்ன பெறுமதி? நாட்டுக்காகப் பணியாற்றுவோரின், குடிமக்களின் புகழ் அவர்தம் போராட்டம் என்பன பற்றிப்பாடாத எழுத்து என்ன எழுத்து? அன்பு மிக்க பலஸ்தீனச் சிறுமியர் தம் அழகு குறித்து கவனம் செலுத்தாத, வீடிழந்தவரின் துயரம், ஏழைகளின் துயரம் எதையுமே சொல்லாத கவிஞனின் எழுத்து என்ன வகை எழுத்து? எழுத்தாளன் சமூகத்தின் மனசாட்சி. வார்த்தைகள்வழி உண்மை பேசியவன், மண்ணின் நிமித்தம் இரத்தம் சிந்தியவன் அளவே பெறுமதி உள்ளவன். தன் சொந்த மக்களினால் கவிஞன் ஒருவனுக்கு அன்பு தான் நெஞ்சில் மாலையாய் அணிவிக்கப் படுகிறது.” என்கிறார் அபூ சல்மா. தலைவர்களின் புகழை என்றுமே பாடாத இவர், பலஸ்தீனப் போராட்டத்தில் பங்குபற்றுகின்ற போராட்ட வீரர்களுக்காக மட்டுமே பாடியதில், மக்கள் கவியென, இந்த நூற்றாண்டின் மாபெரும் தேசாபிமானியென உன்னத அளவில் போற்றப்படுகிறார்.

### Palestine
### பலஸ்தீனம்



கவிதையின் மீது பரத்துகிறேன்,
தீயை அதன் சுவாலையை.

சரித்திரத்தின் அடிமைகளால்
முன்வைக்கப்படும் முறைப்பாடுகள்
இணக்கப்பாடாய், இசைவாய் மாறிவர
என்றென்றும் எதிரொலிக்கப் போகின்ற
கவிதையின் மீது பரத்துகிறேன்,
தீயை அதன் சுவாலையை.

ஓ,பலஸ்தீனமே! என்றும் கைவிடாதே,
துலங்கும் தீச்சுவாலையை.
அடிமைகளின் சங்கிலிகள்
கோபப்பட்ட, ஆவேசமிகு
நரகத்தின் சுவாலையால் உருகும்.

நிஜத்தில்,
புரட்சியாளர் தம் இரத்தம்

வாக்குறுதி கூறிற்று,
பலஸ்தீனம் வெற்றி பெறும் என்று.

சிவப்பு புரட்சி என்றென்றும்
நிலைக்கச் செய்யும் பலஸ்தீனை.
உடல்களால் மேலும் ஒவ்வொரு ஈரல்களால்.

உனக்கு நெருப்பா தேவைப்படுகிறது?
என்று எப்போது கேட்கப்பட்டாலும்,
அவள் பதிலளிக்கிறாள்,
இன்னும் இன்னும் நெருப்பு இருக்கிறதா?

ஆமாம், பலஸ்தீனத்தின் சுவாலை
கண்ணியம் மிகு மானுடரால்
ஊட்டி வளர்க்கப்படுகிறது.

ஓ, தீயே சுவாலையே,
ஒருபோதும் முறைப்பாடு செய்யாதிரு.
மேலும், இம்முழு மரியாதை நீ ஏற்றுக்கொள்.

எதிர்ப்புகளை நிர்மூலமாக்கும் புரட்சிசெய்து,
லட்சியத்தோடு இந்த ஆலயங்களை
நீ பாதுகாப்பாய்.

காப்பாற்றி விடுதலை செய்து விடு
உன் இந்த சந்நிதிகளை, புனித தளங்களை.
அரசர்களிடம் இருந்து.

முற்றிலும் விடுவித்து விடு, அவற்றை
அரசர்களின் அடிமைகளிடம் இருந்து.

## After Seperation
## பிரிவின் பின்னே..

என்னை எதுவும் கேளாதே.
உனக்கு பதில்சொல்லும் சக்தி எனக்கில்லை.

என் அன்னை பூமிக்காய், என் அன்பானவர்க்காய்
நான் எந்தளவு அழுது புலம்புகிறேன் என்பதைச்சொல்ல
எனக்குச் சக்தியில்லை.
ஆதலினால், என்னை எதுவும் கேளாதே!

தொலைவில் நின்றபடி, பலஸ்தீனமே,
உன் ஒளியை ஒவ்வொரு முறையும்
என்னால் உணரமுடிகிறது.
இதயம் நொறுங்கி, ஆன்மா உருகுகின்றது.

தரையைத் தொட்டுத்தொட்டுச்
செல்லும் கடலலைகளைப்போல,
நாம் உன்னை விட்டு விட்டு வந்தோம்.



முகில் கூட்டங்களெனச் சிதறி
சின்னாபின்னமாகிப் போனோம்.

உன்னை நேசித்தமையால்,
உனக்காய்த் தாகித்துக் கிடந்தமையால்,
அழுகைக்கென்றும், உயிர்வதைக்கென்றும்
பிறப்பெடுத்தவர்களென்றானோம் நாம்!

நாம் யாருக்குச் சொந்தமென்று நீ கேட்டால்,
“உனக்கு மட்டுமே” என்பதைவிட வேறு பதில் என்வசமில்லை.
உன்னைப் பிரிதலே, உன் மண்ணோடு நம்மை
இன்னும் நெருக்கமாக்குகின்றது.

நம் பூமியின் ஒவ்வொரு பகுதியிலும்
உனக்கான நம் விருப்பங்களையே
நாம் விதைத்து வைத்திருக்கின்றோம்.
விற்களென, அம்புகளென
அவை முளைக்கும்!!!

நம் கர்வத்தின்மீது கறைபூசி நம்மை சிதறடித்தாலும்,
உன்னைவிட்டு நாம் பிரிந்தேபோனாலும்
நீ நம் நெஞ்சங்களில் வாழ்கிறாய்
ஆண்டாண்டுகளாய், தசாப்தங்களாய்!!

வயதில் சிலர் இளமையாய்,
சிலர் நரைமூப்பாய்ப் போனாலும்,
உன் மைதானங்களில்
நாம் மீண்டும் சந்திப்போம்.

முழந்தாளிட்டு நாம் முத்தமிடுகிறோம்,
உன் மலைகளை!
உன் மண்ணை!!
உன் கூழாங்கற்களை!!!

**Abu Salma**
**அபூ சல்மா**

நாவல் தொடர்

வ.ந.கிரிதரன்

# குடிவரவாளன்






## அத்தியாயம் மூன்று
## சூறாவளி!...

ஆழ்ந்த தூக்கத்திலுருந்த இளங்கோ மீண்டும் கண் விழித்தபோது இன்னும் பொழுது புலர்ந்திருக்க வில்லை. எல்லோரும் இன்னும் தத்தமது படுக்கைகளில் தூக்கத்திலாழ்ந்து கிடந்தார்கள். அவனுக்குச் சிறிது வியப்பாகவிருந்தது: "இதுவென்ன வழக்கத்திற்கு மாறாக.. நித்திரையே ஒழுங்காக வர மாட்டேனென்று முரண்டு பிடிக்கிறது..." அன்று நண்பகல் அவனுக்கு அத்தடுப்பு முகாம் சிறைவாசத்திலிருந்து விடுதலை. அந்த விடுதலை அவன் ஆழ்மனதிலேற்படுத்திய பாதிப்புகளின் விளைவா அவனது தூக்கமின்மைக்குக் காரணம்? இருக்கலாம். சுதந்திரத்தின் ஆனந்தமே அற்புதம்தான். கட்டுக்களை மீறுவதிலிருக்கும் இன்பமே தனி. மீண்டுமொருமுறை அவனது பார்வை அனைத்துப் பக்கங்களையும் ஒருகணம் நோக்கித் திரும்பியது. விடிவுக்கு முன் தோன்றுமொரு அமைதியில் அப் பொழுது ஆழ்ந்திருப்பதாகப் பட்டது.

சிறைப் பாதுகாவலர்களும் தூங்கி வழிந்து கொண்டிருந்தார்கள். இன்னும் சிறிது நேரம்தான் பொழுது விடிந்து விடும். நகரின் பரபரப்பில் இன்னு மொரு நாள்மலர் முகிழ்த்து விடும். அதன்பின் அவனது வாழ்க்கையும் இன்னுமொரு தளத்துக்குத் தள்ளப்பட்டு விடும். அத்தளத்தில் அவனை எதிர்பார்த்து இன்னும் எத்தனையெத்தனை சம்பவங்கள், சூழல்கள் காத்துக் கிடக்கின்றனவோ? இருப்பை எப்பொழுதும் உற்சாகத் துடனும், உறுதியுடனும் ஏற்கும் உள உறுதியிருக்கும் வரையில் அவன் எதற்குமே அஞ்சத் தேவையில்லை. மிதிபட மிதிபட மீண்டும் மீண்டும் மிடுக்குடனெழும் புல்லினிதழாக அவன் எப்பொழுதும் எழுந்து கொண்டேயிருப்பான். விடிவை வரவேற்பதில் எப்பொழுதுமே தயங்காத புள்ளினம் போல விடிவுப் பண் பாடிக்கொண்டேயிருப்பான். ஒரு சில மாதங்களில்தான் அவனது இருப்பு எவ்விதம் தலை கீழாக மாறி விட்டது? அரசத் திணைக்களமொன்றில் உயர் பதவி வகித்துக் கொண்டிருந்தவனைச் சூழல் இன்று அந்நிய மண்ணின் சிறைக் கைதியாகத் தள்ளி விட்டிருந்தது. அவனது சிந்தனையில் 1983 கலவர நினைவுகள் சிறிது நேரம் நிழலாடின.

அவனும், அவனது நண்பனும் அன்று தப்பியதை இன்று நினைக்கும் பொழுதும் ஆச்சரியமாகத்தானிருக் கிறது. அவனும் நண்பனும் அன்று நீர்கொழும்பு நகருக்கு வேலை நிமித்தம் செல்ல வேண்டியிருந்தது. அவனிருந் தது கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில். அவனது நண்பனிருந்தது கல்கிசைப் பகுதியில். அதிகாலை யெழுந்து ஆர்மர் வீதிக்குச் சென்று பஸ் எடுத்துச் சென்றபொழுதுகூட அவனுக்கு ஏற்கனவே கலவரம் ஆரம்பித்திருந்த விடயம் தெரிந்திருக்கவில்லை. ஆனால் செல்லும் வழியில் குறிப்பாக மருதானைப் பகுதியில் கடைகள் சில எரிக்கப்பட்டிருந்ததை அவதானித்தான். அப்பொழுதும் அவனுக்குச் சூழலின் யதார்த்தம் உறைக்க வில்லை. அருகிலிருந்த சிங்கள இனத்துப் பெண் ணொருத்தி எரிந்திருந்த கடைகளைக் காட்டி ஏதோ சொல்லியபோதும் கூட, அவனுக்குத் தெரிந்திருந்த சிங்கள அறிவின் காரணமாக, அவனுக்கு அதனர்த்தம் புரிந்திருக்கவில்லை. அவனைப் பார்த்தாலும் பார்வைக் குச் சிங்கள இளைஞனொருவனைப் போல்தானிருந்தான். மீசையில்லாமல் தாடி மட்டும் வைத்திருப்பது சிங்கள இளைஞர்கள் மத்தியில் சாதாரணதொரு விடயம். அத்தகையதொரு தோற்றத்திலிருந்த அவனை அப் பெண்ணும் சிங்கள் ஆடவனென்று நினைத்து ஏதோ கூறியிருக்க வேண்டும். அதன்பின் அவன் கல்கிசை சென்று நண்பனின் இருப்பிடம் நோக்கிச் சென்ற பொழுது செல்லும் வழியில் நின்ற சில சிங்களவர்களின் கூட்டமொன்று அவனை நோக்கி ஒருவிதமாகப் பார்த்த பொழுதும் கூட அவனுக்கு எதுவுமே உறைக்கவில்லை. பின் நண்பனும், அவனுமாக மீண்டும் பஸ்ஸேறி புறக்கோட்டை பஸ் நிலையம் சென்று நீர்கொழும்பு பஸ்ஸினை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்த பொழுதுதான் நண்பனின் கவனத்தை அருகிலிருந்த சிங்களவர்களுக்கிடையிலான உரையாடல் ஈர்த்தது. அவனுக்குச் சிங்களம் நன்கு தெரியும். அப்பொழுதுதான்

சூழலின் இறுக்கமே முதன் முறையாக விளங்கியது.

நண்பன் கூறினான்: "பிரச்சினை பெரிதுபோல் தெரிகிறது".

"என்ன? கொஞ்சம் விளக்கமாய்ச் சொல்லேன்" என்றான் இளங்கோ. அதற்கு நண்பன் இவ்விதம் பதிலிறுத்தான்:

"இவர்களின் கதையின்படி கலவரம் ஏற்கனவே தொடங்கி விட்டது. நிமிடத்துக்கு நிமிடம் பெரிதாகிக் கொண்டேயிருக்கிறது சூறாவளியைப் போல. நாங்கள் இன்றைக்கு நீர்கொழும்பு போக முடியாது. உடனடியாக "ஆபிசுக்கு"ப் போவம். அதுதான் நல்லது. இப்பொழுது தான் எல்லாமே விளங்குகிறது. நீ மருதானையில் பார்த்த எரிந்த கடைகள், எங்களது வீட்டுக்கண்மையிலிருந்த சிங்களவர்களின் பார்வை,.. இவை எல்லாவற்றுக்கும் காரணம் இப்பத்தான் விளங்குது... எவ்வளவு கெதியாக "ஆபிசுக்கு" போக முடியுமோ அவ்வளவு நல்லது. இப்ப இங்கிருக்கிறவர்கள் கதைக்கிறதைப் பார்த்தால் இங்கை கலவரம் எந்த நேரத்திலும் வெடிக்கலாம் போலத் தானிருக்கு".

இளங்கோவுக்கும் நண்பன் கூறியது சரியாகவே பட்டது. உடனடியாகவே பஸ்ஸேறி அவர்கள் பணி புரிந்த காரியாலயம் சென்றார்கள். அங்கு சென்றதும் எல்லோரும் அவர்களிருவரையும் புதினமாகப் பார்த்தார்கள். அங்கு பணிபுரிந்து கொண்டிருந்த முஸ்லீம் பணியாள் இவர்களிடம் வந்து நாட்டில் இனக்கலவரம் ஆங்காங்கே ஆரம்பமாகி விட்டதாகவும், அவர்களையும் எச்சரிக்கையாக இருக்கும்படியும் கூறினான். அவன் கொழும்பிலேயே கிராண்ட்பாஸ் பகுதியில் பிறந்து வளர்ந்த முஸ்லீம். சிங்களமும், தமிழும் நன்கு சரளமாகப் பேசும் ஆற்றல் வாய்த்தவன். அங்கு நடக்கும் நடப்புகளை அவ்வப்போது அவர்களுடன் பகிர்ந்து கொள்பவன். அவர்களிருவரும் அவ்வரசத் திணைக்களத்தில் பொறியியலாளர்களாக உயர்பதவி யில் இருந்தபோதும் அவனுடன் மிகவும் இயல்பாகப் பழகுவார்கள். அவனும் அவர்களுடன் அன்புடன் பழகுவான். அதன் காரணமாகத்தான் அப்பொழுது வந்து எச்சரித்திருந்தான். அவர்களும் அவனுக்கு நன்றி கூறிவிட்டு என்ன செய்யலாமென்று சிறிதுநேரம் சிந்தனையிலாழ்ந்தார்கள்.

"இந்தச் சமயத்தில் மீண்டும் எங்களுடைய இருப்பிடத்திற்குச் செல்வது நல்லதாகப் படவில்லை. எங்கு போகலாம்...?" என்றான் நண்பன்.

இளங்கோ அதற்கு இவ்விதம் கூறினான்: "சென்றமுறைக் கலவரத்திலெல்லாம் இராமகிருஷ்ண மிசன் நன்கு உதவியதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்திருந்ததைப் பார்த்திருக்கிறேன். அங்கு செல்வது தான் நல்லதுபோல் படுகிறது. நீ என்ன சொல்லுகிறாய்?"

"நீ சொல்வதும்சரி. ஆனால் அங்கை எப்படிப் போவது..?" என்றான்: நண்பன்.

இளங்கோ: " 'பார்க்கிங் லொட்டைப்' பார். எத்தனை "கம்பனி" வாகனங்கள். வேண்டுமானால் இயக்குநரிடம் சென்று கேட்டுப் பார்க்கலாமா.."

நண்பன்: "இந்தச் சமயத்தில் இயக்குநர் என்ன செய்வானோ... ஏற்கனவே கடந்த மூன்று வருடங்களாக உத்தியோகத்தை நிரந்தரமாக்குவதற்காக அவனுடன் எவ்வளவு மோத வேண்டியிருந்தது. அதனாலேற்பட்ட பிரச்சினைகளையெல்லாம் இப்பொழுது தூக்கிப் பார்த்து உதவாமல் விட்டால்..."

இளங்கோ: "எதற்கும் முயற்சி செய்து பார்ப்பதில் தவறில்லையே... சரி வந்தால் சரி. இல்லாவிட்டால் பிறகு யோசிப்போம்..."

இவ்விதம் முடிவெடுத்தவர்களாக இருவரும் இயக்குநரின் அறைக்குச் சென்றார்கள். இயக்குநர் சைமன் முகத்தில் அப்பொழுது கூடப் புன்னகையினைக் காணவில்லை.

இயக்குநர் சைமன் (ஆங்கிலத்தில்): "காலை வந்தனங்கள். வாருங்கள். என்ன விடயம்.."

இளங்கோ: "காலை வந்தனங்கள். உங்களுக்குத் தற்போது எழுந்துள்ள சூழல் தெரிந்திருக்குமென்று நினைக்கின்றோம்..."

இயக்குநர் சைமன்: "ஆம். மிகவும் துரதிருஷ்ட்ட மானது. உங்களுக்கு என்னால் ஏதாவது உதவிகள் செய்ய முடியுமாவென்று பார்க்கின்றேன்."

இளங்கோவும், நண்பனும் "மிகவும் நன்றி".

இளங்கோ தொடர்ந்தான்: "உங்களது வார்த்தை களுக்கு மிகவும் நன்றி. இந்தச் சமயத்தில் வெள்ளவத்தை யிலுள்ள இராமகிருஷ்ண மடத்துக்குச் செல்வது நல்லதுபோல் எனக்குப் படுகிறது. நீங்கள் மட்டும் கொஞ்சம் இந்த விடயத்தில் உதவினால்.."

இயக்குநர் சைமன்: "சொல்லுங்கள். இந்த விடயத்தில் நானெப்படி உதவிட முடியுமென்று எதிர்பார்க்கின்றீர்கள்?"

இளங்கோ: "சேர். நீங்கள் மனது வைத்தால்.. அங்கிருக்கும் வாகனமொன்றினை எங்களுக்குக் கொடுத்துதவலாம்.."

இயக்குநர் சைமன் சிறிது நேரம் சிந்தித்தான்; பின் இவ்விதம் கூறினான்: "மன்னிக்க வேண்டும். இந்த விடயத்தில் என்னால் எதுவும் செய்வதற்கில்லை. நகரில் கலவரம் வெடித்திருக்கிற சூழலில் எந்த வாகனச் சாரதியும் இதற்குச் சம்மதிக்க மாட்டான். இந்தச் சமயத்தில் நீங்கள் இங்கிருப்பதுதான் நல்லது"

இருவரும் இயக்குநருக்கு நன்றி கூறிவிட்டுத் தம்மிருப்பிடம் திரும்பினார்கள். அதே சமயம் தமக்குள் பின்வருமாறும் உரையாடிக் கொண்டார்கள்.

இளங்கோ: "இயக்குநர் நினைத்திருந்தால் மிகவும் இலகுவாக உதவியிருக்க முடியும். சிங்கள வாகனச் சாரதியோட்டும் அரச திணைக்கள வாகனத் திற்கு ஆபத்தெதுவும் ஏற்படுமென்று நான் நினைக்க வில்லை.."

நண்பன்: "அவனும் பழைய கறளை நினைவில் வைத்துத்தான் இவ்விதம் நடக்கின்றான் போலும்."

இளங்கோ: "அவன் இவ்விதம்தான் செயற்படு வான் என்று எதிர்பார்த்தேன். அதன்படியே நடக்கின் றான். இந்தக் கணத்தில் நானொரு முடிவு எடுத்திருக் கிறேன்."

நண்பன்: "என்ன..."

இளங்கோ: "ஒருவேளை இந்தக் கலவரத்தில் தப்பிப் பிழைத்தால் இந்தக் காரியாலயத்தின் வாசற்படியைக் கூட மிதிக்க மாட்டேன். இங்கு நாம் பட்ட அவமானமாக, இறுதி அனுபவமாக இச்சம்பவ மிருக்கட்டும்."

நண்பன்: "உன்னுடைய பலவீனமே இதுதான். எதற்கும் வளைந்து கொடுக்காமல் உடனடியாக முடிவுகளை எடுத்துச் செயற்படுத்துவது.. சில சமயங்களில் வளைந்தும் கொடுக்கத்தான் வேண்டும். காரியம் ஆக வேண்டுமென்றால் காலைப் பிடிக்கத்தான் வேண்டும்.."

இச்சமயத்தில் அந்த முஸ்லீம் பணியாள் வந்தான். அவனது முகத்தில் சிறிது பரபரப்பு தென்பட்டது.

இளங்கோ: "என்ன விசயம். ஏன் பதட்ட மாயிருக்கிறாய்?"

அதற்கந்த பணியாள் கூறினான்: "எவ்வளவு விரைவாக நீங்கள் இங்கிருந்து செல்ல முடியுமோ அவ்வளவு நல்லது.."

நண்பன் சிறிது பயந்து போனான்: "என்ன சொல்லுறாய்.. ஏன்?"

அதற்கந்த பணியாள் இவ்விதம் கூறிச் சென்றான்: "இங்கு வேலை செய்கிற தமிழர்களை அடிப்பதற்குத் திட்டம் போடுகிறார்கள்.அதற்கு முதல் நீங்கள் போவது நல்லது."

நண்பன்: "இவனென்ன இவ்விதம் குண்டைத் தூக்கிப் போட்டு ஓடுகிறான்.."

இளங்கோ: "அவன் உண்மையைத்தானே கூறினான். நாங்கள் எவ்வளவு விரைவாக இங்கிருந்து செல்ல முடியுமோ அவ்வளவு நல்லது"

இச்சமயத்தில் காரியாலயத்திற்கு வெளியில் சிறிது களேபரச் சூழல் ஏற்படவே அனைவரும் வெளியில் சென்றார்கள். இளங்கோவும் அவர்களுடன் கும்பலுடன் கோவிந்தாவாக வெளியில் சென்றான். மருதானை வீதியிலிருந்த அரச, தனியார் திணைக் களங்களில் பணிபுரிந்தவர்களெல்லாரும் வீதிக்கு வந்து விடுப்புப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எதனை அவ்விதம் விடுப்புப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்?

கப்பித்தாவத்தைப் பிள்ளையார் ஆலயத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த பாதையில் லொறி யொன்று ஆயுதம் தரித்த குண்டர்களுடன் சென்று கொண்டிருந்தது. "லோங்சும்" "சேர்ட்டும்" அணிந் திருந்த குண்டர்கள். கைகளில் பொல்லுகளைப் பலர் வைத்திருந்தார்கள். அவர்கள் அப்பாதையால் சென்ற சிறிது நேரத்தில் கப்பித்தாவைத்தைப் பிள்ளையார் ஆலயம் பக்கமிருந்து புகை சிறிதாகக் கிளம்பியது. பிரதமர் பிரேமதாசாவின் மதிப்புக்குரிய, பக்திக்குரிய கப்பித்தாவத்தப் பிள்ளையாருக்கே இந்தக் கதியா? இச்சமயம் கப்பித்தாவத்த ஆலயமிருந்த பகுதியிலிருந்து தடித்த தமிழனொருவன் காதில் சிறிது வெட்டுக் காயங்களுடன் விஜேவர்த்தனா மாவத்தை வீதியை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தான். அச்சமயம் சனத் திரளுடன் விரைந்து கொண்டிருந்த பஸ் வண்டிகளை மறிப்பதற்கு முயன்றான். ஒன்றுமே நிற்கவில்லை. அச்சமயத்தில் அவனைத் துரத்தியபடி சிறு கும்ப லொன்று கைகளில் பொல்லுகளுடன் ஓடி வந்து கொண்டிருந்தது.

அவ்விதம் துரத்தி வந்தவர்களிலொருவன் வீதி யோரமாக விடுப்புப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் பக்கம் வந்தான். ஒவ்வொருவராக மேலும் கீழும் பார்த்தபடி வந்தான். இளங்கோவின் பக்கம் வந்தவுடன் ஒருகணம் நின்றான்: "தெமிளதா சிங்களதா" என்றான்.

அவ்விதம்தான் கேட்டதாக அவனுக்குப் பட்டது. "சிங்கள" என்று மட்டும் பட்டும் படாமல் கூறிவிட்டுப் பேசாமல் நின்றான் இளங்கோ.

இன்னுமொரு வார்த்தை அவன் வாயிலிருந்து வந்து விட்டால்போதும் அவன் அசல் தமிழனென்பதை அந்தக் காடையன் கண்டு பிடித்து விடுவான். நிலைமை எல்லை மீறுவதை அவன் உணர்ந்தான். இதற்கிடையில் காயத்துடன் ஓடி வந்து கொண்டிருந்த தமிழனைக் காணவில்லை. பஸ்ஸொன்றில் ஏறி விட்டிருக்க வேண்டு மென்று பட்டது. இளங்கோ மெதுவாக காரியாலயத் தினுள் நுழைந்தான்.

நண்பன்: "என்ன? எப்படி வெளியிலை இருக்கு?"

இளங்கோ: "நிலைமை எல்லை மீறும் போலைத்தான் தெரிகிறது. நான் தப்பியது அருந்தப்பு."

இச்சமயத்தில் அத்திணைக்களத்து நிதிநிர்வாக உயர் அதிகாரியான கந்தரட்ணமும், தமிழகத்திலிருந்து ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் ஸ்தாபனச் சிவில் பொறியி யல் ஆலோசகராக வந்து பணிபுரிந்து கொண்டிருந்த பாலகிருஷ்ணனும் அவசர அவசரமாக வாசலை நோக்கி விரைந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடன் "பேர்கர்" இனத்துப் பெண்ணான கந்தரட்ணத்தின் காரியதரிசிப் பெண் இமெல்டாவும் விரைந்து கொண்டிருந்தாள். அவர்கள் எங்கே அவ்விதம் விரைந்து கொண்டிருந் தார்கள்?

இளங்கோ நண்பனுக்கு: "நாங்களும் இவர் களுடன் வெளியில் போவோம். இவர்களும் வெளியில் போய் விட்டால் நாங்கள் இங்கு தனியாக அகப்பட்டு விடுவோம்."

இருவரும் கந்தரட்ணத்தைப் பின் தொடர்ந் தார்கள். வெளியில் சென்ற அவர்கள் தயாராக நின்று கொண்டிருந்த அரச வாகனத்தில் ஏறிக் கொண்டார்கள். அவர்களின் அனுமதி எதனையும் எதிர்பார்க்காமலே இளங்கோவும் நண்பனும் விரைவாக அந்த வாகனத்தில் ஏறிக் கொண்டார்கள். அவர்களை ஏற்றிக் கொண்ட அந்த வாகனத்தைச் சாரதி மருதானைப் பக்கமாகச் செலுத்தி னான். இதற்கிடையில் யாரோ தமிழர்கள் வாகனத்தில் தப்பியோடுவதை வீதியில் அப்பொழுதும் நடமாடிக் கொண்டிருந்த குண்டர்கள் சிலருக்குக் கூறியிருக்க வேண்டும். அவர்களில் சிலர் வாகனத்தை நோக்கிக் கைகளில் பொல்லுகளுடன் விரைவாக ஓடி வந்தார்கள். அவர்கள் கைகளில் மட்டும் சிக்கியிருந்தால் அன்று அவர்களின் கதை முடிந்து விட்டிருக்கலாம். இதற்கிடை யில் மருதானைச் சந்தி காமினி திரையரங்கு வரையில் தான் வாகனத்தைச் சாரதியால் ஓட்ட முடிந்தது. அதற்கப் பால் போக முடியாதபடி கலவரச் சூழல் நிலவியது. வாகனத்தை விரைவாகத் திருப்பிய சாரதி மீண்டும் விஜயவர்த்தனா மாவத்தை வழியாக லேக் ஹவுஸ் பக்கம் செலுத்தினான்.

கந்தரட்ணமும், பாலகிருஷ்ணனும் சிறிது கவலையுடன் காணப்பட்டார்கள். இமெல்டாவோ அழுது விடுவாள் போல் காணப்பட்டாள்.

தமிழர்களுடன் சேர்த்து அவளையும் சேர்த்து வாகனத்துடன் தாக்கி விட்டாலென்ற கவலையில் அவளுக்கு அழுகைமேல் அழுகையாக வரவே இலேசாக

அழவும் தொடங்கினாள். அவ்விதமாகக் கொழும்பு வீதி களினூடாகச் சென்று கொண்டி ருக்கையில்தான் கலவரச் சூறா வளியினை அதன் வேகத்தினை இளங்கோ முதன் முறையாக உணர்ந்தான். எவ் வளவு வேக மாக வீசியடிக்கத் தொடங்கி விடுகிறது?



வழியெங்கும் தமிழர் களுக்குச் சொந்தமான வாகனங் கள் வீதிகளில் எரிந்து கொண்டி ருந்தன. யாராவது உள்ளே இருந்தார்களாவென்பது தெரிய வில்லை? வீதிகள் பலவற்றில் கடைகள் பல எரிந்து கொண்டி ருந்தன. இளங்கோ கந்தரட்ணத் திடம் ஆங்கிலத்தில் கேட்டான்: "நீங்கள் எங்கு செல்வதாக உத்தேசம்?"

அதற்கவர் கூறினார்: "நாங்களிருவரும் ஒட்டல் ஒபராய் செல்லுகிறோம். இமெல்டா தெகிவளையி லுள்ள தன் வீடு செல்கிறாள். நீங்கள் எங்கு செல்வதாகத் திட்டம்?"

இளங்கோ: "நல்லதாகப் போய் விட்டது. உங்களை ஒட்டல் ஒபராயில் இறக்கி விட்டு எங்களை இராமகிருஷ்ண மடத்தில் இறக்கி விடலாம். இமெல்டா செல்லும் வழிதானே.."

இமெல்டா இன்னும் அழுது கொண்டிருந்தாள்.

ஒரு வழியாக உயர் அதிகாரிகளிருவரையும் ஒட்டல் ஒபராயில் இறக்கி விட்டு வாகனச் சாரதி வாகனத்தைக் காலி வீதி வழியாகச் செலுத்தினான். சிறிது வயதான அந்தச் சிங்களச் சாரதி இவர்களிருவரை யும் பார்த்துக் கேட்டான்: "நீங்கள் எங்கு செல்ல வேண்டும்"

நண்பன்: "எங்களை இராமகிருஷ்ண மடத்தில் இறக்கி விட்டால் நல்லது.."

அதற்கந்தச் சாரதி கூறினான்: "என்னால் இராம கிருஷ்ண மடம் மட்டும் வர முடியாது. உங்களை இராம கிருஷ்ண வீதியும், காலி வீதியும் சந்திக்கும் சந்திப்பில் இறக்கி விடுகிறேன். இறங்கிச் செல்லுங்கள்"

இளங்கோ: "அது போதுமெங்களுக்கு. மிக்க நன்றி"

வழியெங்கும் காடையர் கூட்டம் ஆர்ப்பரித்த படி, கடைகள் எரிந்தபடி, வாகனங்கள் தலை குப்புற வீழ்ந்து எரிந்தபடி, ஆண்களும், பெண்களுமாகத் தமிழர்கள் அவசர அவசரமாக விரைந்தபடி, ஓடியபடி,... சூழலின் அகோரம் நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்தபடி யிருந்தது.

இதுபற்றிய எந்தவிதக் கவலைகளுமற்று விண்ணில் சிறகடித்துக் கொண்டிருந்த பறவைகள் சிலவற்றை ஒருவிதப் பொறாமையுடன் பார்த்தான் இளங்கோ. இத்தகைய சமயங்களில் எவ்வளவு சுதந்திரமாக அவை விண்ணில் சிறகடிக்கின்றன.

வாகனச் சாரதி காலி வீதியும், இராமகிருஷ்ண வீதியும் சந்திக்குமிடத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு இறங்கும்படி கூறினான். உயர் அதிகாரிகள் இருந்த போது அவன் காட்டிய பணிவு, மரியாதையெல்லாம் இப்பொழுது அடியோடு அகன்று விட்டன. இளங்கோ நண்பனை நோக்கினான்.

"என்ன இறங்கி நடப்போமா?"

நண்பன் பதிலுக்குத் தலையசைக்கவே இருவரும் அவசரமாக இறங் கினார்கள். அப்பொழுது தான் தெகிவளைக் கால் வாயை அண்டியிருந்த சேரியிலிருந்து காடையர் கும்பலொன்று கைகளில் கத்திகள், பொல்லுகளென்று ஆர வாரித்தபடி, சிங்களத் தில் ஏதோ கத்திய படி இவர் களிருந்த திக்கை நோக்கி வந்து கொண்டிருந் தார்கள். சிந்திப்பதற்கு நேரமில்லை. மீண்டும் இருவரும் சொல்லி வைத்த மாதிரி மீண்டும் வாகனத்திற்குள் பாய்ந் தேறினார்கள். ஓரளவு ஆசுவாசப் பட்ட இமெல்டா மீண்டும் அழத் தொடங்கி விட்டாள். இளங்கோ சாரதியிடம் தெகிவளையில் இறக்கி விடும்படி கூறினான். வேண்டா வெறுப்பாகச் சாரதி வாகனத்தை மீண்டும் செலுத்தத் தொடங்கினான். நல்லவேளை கும்பல் வாகனத்தை நிறுத்தித் தொல்லை தரவில்லை. தெகிவளை அண்மித்த தும், கொழும்பு மிருக காட்சிச்சாலைக்குச் செல்லும் வீதியுடனான சந்திப்பில் மீண்டும் வாகனத்தை நிறுத்தி விட்டான் சாரதி. சந்தியில் இரு சிங்களக் காவற்துறையினர் ஒரு சில குண்டர்களைப் போன்ற தோற்றத்தில் காணப்பட்ட சிங்களவர்களுடன் கதைத்துக் கொண்டி ருந்ததை அப்பொழுது இளங்கோ அவதானித் தான். அத்துடன் சாரதியிடம் கேட்டான்:

"எதற்காக வாகனத்தை நிறுத்தி விட்டாய். இமெல்டாவை விட்டு விட்டு வரும் வழியில் எங்களிரு வரையும் இராமகிருஷ்ண மண்டபத்தில் கொண்டு சென்று விட முடியுமா?"

அதற்கு அந்த வாகனச் சாரதி சிறிது உரத்த குரலில் பதிலிறுத்தான்: "என்னுடைய உயிருக்கு யார் உத்தரவாதம்?"

இளங்கோ (நண்பனை நோக்கி): "இவன் இப்படியே உரக்கக் கதைத்து அந்தக் குண்டர்களுக்கு எங்களைக் காட்டிக் கொடுத்தாலும் கொடுத்து விடு வான். அதற்குள் இறங்குவதே புத்திசாலித்தனம். சே. நாங்களும் கந்தரட்ணத்துடன் ஒட்டல் ஒபராயிலேயே இறங்கி விட்டிருக்கலாம்."

வாகனச் சாரதிக்கும், இமெல்டாவுக்கும் நன்றி கூறிவிட்டு எதிர்ப்புறம் கடற்புறமாகவிருந்த வீதியை நோக்கி நடக்கத் தொடங்கினான் இளங்கோ. அத்துடன் நண்பனுக்கு இவ்விதம் கூறினான்: "என்னுடன் ஒன்றுமே கதைக்காதே. அப்படியே என்னைப் பின் தொடர்ந்து வா எந்தவிதப் பதட்டமுமில்லாத தோற்றத்துடன். நான் இப்படியே தெகிவளை நூலக வீதியால் கடற்கரைக்குச் சென்று கடற்கரை வழியாக அப்படியே இராமகிருஷ்ண மண்டபத்துக்குச் சென்று விடலாம். கடற்கரை வழியால் செல்லும் போது நான் கடலை, அலையையெல்லாம் இரசித்து வந்தால் ஆச்சரியப்பட்டு விடாதே. புகையிரதக் கடவை வழியாகக் குண்டர்கள் யாரும் வந்தால் சந்தேகப் படமாட்டார்கள். ஆக உச்சக் கட்டமாகக் கடலில் குளித்தாலும் குளிப்பேன்." இவ்விதம் கூறிவிட்டுக் கடற்கரையை நோக்கிச் சென்ற இளங்கோவைச் சிறிது தொலைவில் பின் தொடர்ந்தான் நண்பன்.

தொடரும்...

கி.நடராசா

# பழந்தமிழ் இலக்கியங்களில் அறிவியல் கருத்துக்கள்

## மருத்துவம் தொடர்பான கருத்துக்கள்

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது நமது முன்னோர்கூறிய முதுமொழி. அதற்கேற்ற வகையில் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும், நோய் வராமல் எவ்வாறு காக்க வேண்டும், வந்த நோயை நீக்குவதற்கான வழிமுறைகள் எவை என்பவை பற்றி நம்பழந்தமிழ் இலக்கியங்கள் சிறப்பாக குறிப் பிட்டுள்ளன. அதனை நூல்கள் வழியாக நோக்குவோம்.

பதிற்றுப் பத்து :

இன்று நாம் மேற்கொள்ளும் அறுவை வைத்தியம் தொடர்பான பல செய்திகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இன்று அறுவைச் சிகிச்சையின் ஓர் அம்சம் தையல் போடுதலாகும். இதனைப் பத்துப்பாட்டு என்ற நூல் குறிப்பிடுகின்றது.

"மீன் தேர் கொட்டின் பனிக்கயம் மூழ்கி
கிரல் பெயர்ந்தன்ன நெடுவெள்ளூசி
நெடு வசி பரந்த வடுவாழ் மார்பின்"

(ஐந்தாம் பத்து 2-3 வரிகள்)

மீன் கொத்திப் பறவை நீரில் விழுந்து விரைந்து எழுவதைப் போல ஊசியால் குத்தி நூல் கொண்டு தைத்தனர் என்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

புறநானூறு :

போரில் ஏற்படும் புண்களின் மேல் பஞ்சு இடும் முறை நம் பண்டைத் தமிழர்கள் இன்றைய உலகிற்கு கற்றுக் கொடுத்த ஒரு முறையாகும்.

"கதுவாய் போகிய துதிவாய் எஃகமொடு
பஞ்சியும் களையாப் புண்ணர்

(புறம் - 353 15-16 வரி)

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் இதனை உறுதிப்படுத்துகின்றது. போரில் விழுப்புண்பட்ட வீரன் ஒருவனுக்கு அவன் வீட்டிலிருந்து மகளிர் அவன் புண்ணை மருந்திட்டு ஆற்றி மருத்துவம் செய்யும் இடம் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதை அரிசில் கிழார் என்னும் புலவர் முதன்மைப் படுத்துகின்றார். போரில் கிழிந்த தசையை தைத்து பஞ்சு கொண்டு ஒட்டிய செய்தி இப்பாடலில் தெரிகின்றது. எனவே அறுவை சிகிச்சை முறையை நம் பண்டைத் தமிழர் உணர்ந்திருந்தனர் என்பதற்கு இது சான்றாகும்.

"இறையுறு விழுமம் தாங்கி யமரகத்
இரும்பு சுவை கொண்டவிழுப்புணோய் தீர்த்து
மருந்துகொண் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன்"

(புறம் 180, பாடல்வரி 2-5)

உடலெல்லாம் வடுக்கள் நிறைந்தவன் தற்போது வடுக்கள் இருந்த அடையாளம் தெரியாமல் காணப்படும் அளவிற்கு மருத்துவம் வளர்ந்திருந்ததை இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன. போரில் விழுப்புண்பட்ட வீரன் ஒருவனுக்கு அவன் வீட்டிலிருந்து மகளிர் அவள் புண்ணை மருந்திட்டு ஆற்றி வந்த செய்தி எத்தன்மையானது என்பதை பின்வரும் பாடல் எடுத்துக் காட்டுகின்றது.

"தீம் கனி இரவமொடு வேம்புமனை செரீஇ
வாங்கு மருப்பு யாழொடு பல்இயம் கறங்க
கை பயப் பெயர்ந்துமை இழுது இழுகி
ஐயவி சிதறி ஆம்பல் ஊதி
இசை மணி எறிந்து காஞ்சி பாடி
நெடு நகர் வரைப்பில் கடி நறை புகைஇ
காக்கம் வம்மோ...
வேத்துறு விழுமம்

(புறம் 281 1-8 பாடல் வரிகள்)

பெரும் புண்பட்டு வீழ்ந்த வீரனுக்கு மருத்துவம் செய்வோர் மனனைய தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். இனிய இசை பாடுதல், நறுமணப் பொருள் களை புகைத்து, மணம் பரவச் செய்தல் என்பவற்றை மேற்கொள்ள வேண்டும். இரவமொடுவேம்பு மனை செருகுதல் என்பது காயப்பட்டவனை பேய்கள் வந்து தொடாது காத்தற் பொருட்டு இரவ மரத்தின் தழையை யும் வேப்ப மரத்தின் இலையையும் வீட்டில் செருகு தலைக் குறிக்கும். இயற்கை மருத்துவத்தின் செயற்பாடு இங்கு கூறப்பட்டது.

"பெருமலை வீடரகத் தருமிசை கொண்ட
சிறியிலை நெல்லித்தீங்கனி குறியா
தாத னின்னகத் தடக்கி
சாத னீங்க வெமக் கீத்தனையே"

(புறநானூறு 91 - 8-11 வரிகள்)

புறநானூற்றில் இப்பாடல் ஔவையார் நெடுமான் அஞ்சியை வாழ்த்தும் போது, தனக்குத் தந்த நெல்லிக்காயை சாவாமைக்குரிய மருந்து என குறிப்பிடுகின்றார். மரணத்தை தள்ளி வைக்கும் வல்லமை கொண்ட மருந்தாக நெல்லிக் கனிகூறப்பட்டுள்ளது. இதுவும் ஓர் இயற்கை மருத்துவம் என்பது குறிப்பிடத் தக்கது. மேலும் சங்க காலத்தில் வயா நோயினால் துன்புற்ற கர்ப்பிணிப் பெண்கள் மண் போன்ற

பொருட்களை உண்ணும் பழக்கம் கொண்டிருந்தனர். இதனை

வயவுறு மகளிர் வேட்டு நின் அல்லாது
பகைவர் உண்ணா அரும் மண்ணினையே
(புறநானூறு 20 14-15 வரிகள்)

இப்பாடல் சேரமான் யானைகட்சேய் மாந்தரஞ் சேர இரும்பொறை என்ற மன்னனை குறுங்கோழியூர் கிழார் பாடிய போது கூறப்பட்டது.

நீண்ட காலம் ஒருவன் வாழ விரும்பினால் அவனிடம் புலனடக்கமும் விந்தடக்கமும் மிக மிக அவசியமானது. உடலுறவை கட்டுப்படுத்துதல் மூலம் நீண்ட காலம் வாழலாம். அதனால் தான்நம் பண்டைத் தமிழர் பெண்களுக்கு கற்பையும் ஆண்களுக்கு ஏகபத்தினி விரதத்தையும் வலியுறுத்தினர். இதனை,

"வடமீன் புரையும் கற்பின் வடமொழி
அரிவை தோனை வல்லதை
நினதென இலை நீ"
(புறம்122 9-12 பாடல் வரி)

என்ற பாடல் வரிகள் வலியுறுத்துகின்றன.

புறநானூற்றில் இயற்கை மருத்துவம் தொடர் பான பல செய்திகள் கூறப்பட்டுள்ளன. வேப்ப மரமும் கமுகும் மிக முக்கியத்துவம் பெற்றுள்ளன. வேம்பு ஒரு கிருமி நாசினி என்பது நவீன மருத்துவர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இன்றும் அம்மை நோய் ஏற்பட்டால் பாதிக்கப்பட்டவரை வேப்பமிலைலேயே உறங்க வைக்கின்றனர்.

வேம்பு சினை ஒடிப்பவும்
(புறம்296 பாடல்வரி 1)

தீங்கனிஇரவமொடு வேம்பு மனைசெரீஇ (முன்னரும்கூறப்பட்டுள்ளது)

மன்ற வேம்பிக் மாச்சினை ஒண்தளிர் (76ம் பாடல் - 4ம் வரி)

மன்ற வேம்பின் ஒண்குழை மலைத்து (79-2ம் வரி)

மன்ற வேம்பின் ஒண்பூவுறைப்ப (371-7ம்வரி) போன்ற புறநானூற்று அடிகளில் இவை வலியுறுத்தப் பட்டுள்ளன.

வேம்பு, கடுகு போலவே ஐயவி (வெண் சிறுகடுகு) போன்றன காயப்பட்ட வீரர்களைக் குணப்படுத்தும் மருந்தாக புறநானூறு கூறுகின்றது.

"நெய்யுடைக் கையர் ஐயவி புகைக்கவும்"
(புறம் 296 பாடல் வரி 2)

மேலும் மிளகு ஒரு சிறந்த மருத்துவப் பொருள் என்பதை பழமொழி என்ற பகுதியில் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

புறநானூற்றில் கருவுற்ற பெண்கள் தொடர்பாக சில செய்திகளை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

"மாண் இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்" (புறம் 34,2ம்வரி)

கருவுற்ற பெண்கள் கருவைர் கலைக்க முற்படுதல் தண்டனைக்குரிய குற்றம் என பண்டை நாட்களில் எண்ணப்பட்டது.

உடலைப் பேண மருத்துவர்கள் கூறும் அறி வுரைகளில் நீர் அருந்த வேண்டும் என வற்புறுத்தப் பட்டுள்ளது என்பது நாமறிந்த விடயமாகும். "எல்லா உயிர்க்கும் ஏமமாகியது நீர்" (கடவுள் வாழ்த்து 12-13 வரிகள்) என்பதை புறநானூறு வலியுறுத்தியுள்ளது. நீரின் முதன்மையை

"நீரின்றமையா யாக்கைக்கு எல்லாம
உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டிமுதற்றே உணவின் பிண்டம்
உணவெனப்படுவது நிலத்தொடு நீரே
நீருநிலனும் புணரியோரீண்
குடம்பு முயிரும் படைத்திசினோரே"
(புறம்18 18-24வரிகள்)

இப்பாடல் வரிகள் வலியுறுத்தி உடலைப் பேணநீரின் அவசியத்தை எடுத்துக் கூறியுள்ளது.

**திருக்குறள்**

இதயங்காத்து வாழ்வாங்கு வாழ வள்ளுவர் கூறும் அரிய உண்மை மனத்தின் செயற்பாடாகும். மனம் மூளையின் ஓர் பண்புக் கூறாக உணரப்பட்டாலும் மூளை, இதயம் மற்றும் உடலின் அனைத்து அக புற உறுப்புக்களை இயங்க வைப்பதும் மனம் தான். ஆவதும் மனத்தினால், அழிவதும் மனத்தினால் இதற்கு மாற்றுக் கருத்து என்பதே இல்லை. மனத்தைஅடக்கி ஆளப் பழக வேண்டும். அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆர் இருள் (நரகம்) உய்க்கும்.

"ஒருமையுள் ஆமை போல் ஐந்து அடக்கலாற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து"

அறிவு உணர்ந்தவாறு மனமும், அந்நெறியில் நிற்கும் மனத்தின் கட்டளையை உடம்பும் கேட்டால் உயிர் இயக்கம், அமைதியான இதயத் துடிப்பு மூலம் நீடித்து இயங்கிக் கொண்டேயிருக்கும். வாழ்நாளும் நீடிக்கும். இன்றைய மருத்துவர் கூறும் இத்தன்மையான கருத்தினை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே தமிழர் உணர்ந்திருந்தனர்.

திருக்குறளில் மருத்துவம் தொடர்பாக ஒரு அதிகாரமே கூறப்பட்டுள்ளது. மருந்து என்ற அதிகாரத் தில் வள்ளுவர் முதலில் நோய் ஏற்படுவதற்கான மருத்துவக் குறிப்பை தருகின்றார். நாம் உண்ணும் உணவின் அளவு அளவிற்கு மிகுந்தாலும் நோய்வரும் அளவிற் குறைந்தாலும் நோய் வரும் உடம்பிற்கு இயல்பாகிய நோய் வாதம் பித்தம், சிலேத்துமம் என்ற மூன்று வகையாகும். அது மேற்குறிப்பிட்ட இரு வகையினால் வரும் என்கிறார்.

"மிகினும் குறையினும் நோய் செய்யும் தூலோர்
வளி முதலா எண்ணிய மூன்று"
(குறள் - 941)

மேற்குறிப்பிட்ட கருத்தை மேலும் வலியுறுத்த சில வழிமுறைகளையும் எடுத்துக் காட்டுகின்றார். உண்ட உணவு சமிபாடடைவதற்கு கால இடைவெளி தந்து உணவு அருந்தினால் மருந்து என வேண்டியதொன்று இல்லை. உண்டது சமிபாட்டை தந்ததா என்பதை உணர்ந்து நன்கு பசியெடுத்த பின்னரே உடலுக்கு ஒத்து வரக் கூடிய உணவை அருந்த வேண்டும். இக் கருத்துக்கள்,

"மருந்தென வேண்டவாம்யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்" (குறள் 942)
"அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்கத் துவரப் பசித்து (944)

என்ற குருட் பாக்களில் கூறப்பட்டுள்ளன.

தற்செயலாக நோயொன்று வந்து விட்டால் என்ன செய்ய வேண்டும். நவீன யுகத்தில் வாழும் இன்றைய மருத்துவர் சொல்லும் நியாயங்களை வள்ளுவர் மருத்துவர் போலவே கூறுகின்றார். வந்த நோய் என்ன என்பது ஆராயப்படல் வேண்டும். என்ன காரணத்தினால் வந்தது என்பதை ஆராய்ந்து அதைத் நீக்குவதற்கான வழிமுறைகளை ஆராய்தல் வேண்டும். நோயாளியின் உடல் வலிமை, வயது முதலியவைகளை யும்நோயின் தன்மையையும் நோயைத் தீர்ப்பதற்கான உரிய காலத்தையும் ஆராய்ந்து செய்ய வேண்டும். இக்கருத்துக்களை

"நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்" *(948)*
"உற்றான் அளவும் பிணி அளவும் காலமும்
கற்றான்கருதிச் செயல்" *(949)*

இக் குறட்பாக்கள் இன்றைய மருத்துவர்களுக்கு ஓர் அறிவுரையாகக் குறிப்பிடப்படுகின்றன.

இறுதியாக உட் கொள்ளும் மருந்து மட்டும் ஒருவன் நோயை தீர்ப்பதில்லை. அவனோடு மருத்துவர், மருந்து, அருகிலிருந்து கவனிப்பவர் ஆகிய நான்குமே மருந்தாகி ஒருவன் நோயைத் தீர்க்கும் என்பதை,

"உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச் செல்வான் என்று
அப்பால் நாற் கூற்றே மருந்து" *(குறள் 950)*

என வலியுறுத்துகின்றது.

இக் குறளில் நாற்கூற்று என்பது

1. மருத்துவன் வழி நிற்றல்
2. மருத்துவன் சொன்னபடி நடத்தல்
3. மருந்துத்துன்பம்
4. விளைவு பயன்

இன்றைய மருத்துவ உலகம் பின்பற்றக் கூடிய அருமையான வழிமுறைகளை வள்ளுவர் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னமே சொல்லியிருக்கின்றார் என்பது சிறப்பான விடயமாகும்.

### திருமந்திரம்

இன்றைய மருத்துவ உலகம் மனிதனைக் காப்பாற்ற மரணத்தின் வாயில் வரை செல்கின்றது. குளோனிங்முறையென்று உயிரின் மாதிரியாக புதிய உயிர்களை உருவாக்கும் அறிவுவளர்ந்து விட்டது. மருத்துவப் படிப்புக்களோ செயல் முறைப் பயிற்சிகளோ இல்லாத பண்டைக் காலத்தில் சித்தர்களும் சிறந்த வைத்தியர்களும் வாழ்ந்துள்ளனர் என்பதை திருமந்திரம் என்ற நூல் எடுத்துக் காட்டுகின்றது.

"மாதா உதரம் மலமிகில் மந்தனாம்
மாதா உதரம் சலமிகில் மூங்கையாம்
மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை
மாதா உதரத்தில் வந்த குழவிக்கே"
*(திருமந்திரம் - பாடல் 481)*

கருத்தரிக்கின்ற காலத்தில் தாயாரின் வயிற்றில் மலம் அதிகம் இருக்குமானால் பிறக்கின்ற குழந்தை மந்த புத்தி உடையதாக இருக்கும். மாதா வயிற்றில் சலம் மிகுந்திருந்தால் (நீர்) பிறக்கும் குழந்தை ஊமையாக இருக்கும். இரண்டும் மிகுந்திருந்தால் பிறக்கும் குழந்தை குருடாகப் பிறக்கும். (உரை- ஞா.மாணிக்க வாசகன்)

இன்று அறிவியல் வளர்ந்தும் பிறவியில் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்வதற்கான காரணத்தை திருமூலர் பத்து நூற்றாண்டுகளுக்கு முன்னரே கண்டு பிடித்துள்ளார். மேலும் பிறப்பில் இரட்டைக் குழந்தைகள் எவ்வாறு உருவாகிப் பிறக்கின்றன என்பதற்கும் திருமூலர் விளக்கம் தருகின்றார். அதுமட்டுமின்றி ஆண் குழந்தையா பெண்குழந்தை பிறக்கும் என்பதையும் திருமூலர் வெளிப்படுத்துகின்றார்.

"குழவியும் ஆணாம் வலத்தது ஆகில்
குழவியும் பெண்ணாம் இடத்தது ஆகில்
குழவியும் இரண்டாம் அபானன் எதிர்க்கில்
குழவி அலியாகும் கொண்ட கால் ஒக்கிலே"
*(திருமந்திரம் பாடல் 452 உரை மேற்படி)*

உடலுறவின் போது ஆணுக்கும் பெண்ணுக்கும் மூச்சுக் காற்று வலது பக்க மூக்கு வழியாக வெளிப்பட்டால் பிறக்கின்ற குழந்தை ஆணாகும். மூச்சுக் காற்று இருவருக்கும் இடப்பக்கமாக வெளிப்பட்டால் பெண்குழந்தை பிறக்கும். (அபானை-மலக்காற்று) அபான வாயு எதிர்த்து வந்தால் சுக்கிலம்சிதறி இரட்டைக் குழந்தைகள் பிறக்கும். (உரை-மேற்படி)

கருவாகி, உருவாகி, வளர்ந்து தாயின்கருப்பத்தில குந்தை பத்துமாதமே வளரும் என்பதை திருமந்திரம்,

"உருவம் வளர்ந்திடும் ஒண் திங்கள் பத்திற்
பருவமதாகவே பாரினில் வந்து"
*(திருமந்திரம் - 485)*

எனக் கூறுகின்றது.

### கீழ்க் கணக்கு நூல்கள் :-

சங்க மருவிய காலத்தில் எழுந்த கீழ்க் கணக்கு நூல்களில் சில மருத்துப் பெயர்களைக் கொண்டு அறநூல்கள் எழுதப்பட்டு வெளிவந்தன. வந்த நோயை நீக்குவதும் நோய் வராமல் தடுப்பதும் மருந்து. உளநோயை நீக்கும் வகையில் மருந்துப் பெயர்களால் நல் ஒழுக்கங்களைப் போதிக்க முற்பட்டனர். இவ்வகையில் திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி என்பன மருந்துப் பெயரைதாங்கி வந்தன. சுக்கு, திப்பிலி, மிளகு இம் மூன்றும் சேர்ந்ததுதான் திரிகடுகம். இவை மருத்துவக் குணங்கள் கொண்டிருந்தன. இம் மூன்றும் ஒருவரது உடல்நோயை மாற்றி ஒருவருக்கு சுகம் அளிப்பது போல ஒவ்வொரு பாட்டிலும் அமைந்த மும்மூன்று கருத்துக்கள் மாந்தரின் உளநோயை தீர்க்க முற்பட்டன. சிறுபஞ்ச மூலம் ஐந்து மூலிகைகளின் வேர்களைச் கொண்டது. கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்து வேர்களும் மருந்துக்குப் பயன்படும். ஒவ்வொரு செய்யுளிலும் அடங்கியுள்ள ஐந்து, ஐந்து கருத்துக்களும் மக்களின் மன வளத்திற்றுப் பயன்படுவன. ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு ஆகியவற்றின் பொடிக்கு ஏலாதி என்று பெயர் தற்காலத்தில் உள நல மருத்துவக்கரரது கருத்துக் களுக்கு இந்நூல்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் மிகப் பயனுள்ளன.

### பழமொழிகள் :

தமிழர் சமுதாயம் உலகின் எந்த இடத்தில் வாழ்ந்தாலும் அவர்களிடையே வழங்கி வந்த நாட்டுப் புற வைத்தியம் பற்றிய கருத்துக்கள் மேற்குறிப்பிட்ட கீழ் கணக்கு நூல்களின் மருத்துவக் குறிப்பிற்கு வலுவூட்டி

எமது பழமொழிகளை நினைவிற்கு அழைக்கின்றது.

"ஆலம் வேலும் பல்லுக் குறுதி"
நோய்க்கு இடம் கொடேல்"
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"
பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் விருந்து
உண்ணலாம்."
"கண்ணுக்குத் தெளிவு பொன்னாங்காணி"

மேலும் மூலிகைகள் நோய் தீர்க்கும் வல்லமையை "அருந்துயர் அவலம் தீர்க்கும் மருந்து" என்று நற்றிணையிலும் கூறப்பட்டுள்ளது.

குறுந்தொகை :

அகப் பாடல்கள் தலைவனின் பிரிவு தலைவியின் மனதளவில் பல குழப்பங்களை ஏற்படுத்துவதுண்டு. அதைக் குணப்படுத்தும் வழிமுறைகளையும் அறிந்திருந்தனர். ஏற்கனவே கீழ்க்கணக்கு நூல்களில் குறிப்பிட்டது போல உடலை மட்டுமன்றி மனதில் ஏற்படும் தாக்கத்தையும் நோயாக கருதினர்.

நற்றங் கொற்றனார் பாடிய குறுந்தொகை செய்யுள் இதற்கு சான்று பகர்கின்றது.

"திருந்துகோ லெல்வளை வேண்டியா னழவு
மரும்பிணி யுறநாக்கு வேட்டது கொடாது
மருந்தாய்ந்து கொடுத்த அறவோன் போல்

(குறுந்தொகை 136-1-3 வரிகள்)

திருத்தமாகச் செய்யப்பட்டதும் கைவினைத் திறன் கொண்டதும் ஒளி பொருந்தியதுமான தோல் வளையை யான் விரும்பினேன். அது கிடைக்கப் பெறாமையால் நான் அழுதேன். என் தந்தை தீர்த்தற்கரிய நோயை அடைந்தவர். விரும்பியதை கொடாமல் ஆராய்ந்து நோயக்குத் தக்கவாறு மருந்து தரும் அறமுடைய மருத்துவனை ஒப்பவர். மருத்துவனின் கடமையை பாடல் எடுத்துரைக்கின்றது. கருவுற்ற பெண்கள் வாந்தி எடுக்கும் சந்தர்ப்பத்தில் புளியங்காய் அதனைக் கட்டுப்படுத்தும் என்ற மருத்துவக் குறிப்பு பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"ஒதுங்கல் செல்லாப் பசுப்புளி வேட்கை
கடுஞ்சூல் மகளிற்"

(குறுந்தொகை 287 4-5 பாடல் வரிகள்)

இன்று நம் தாய்மார் மாங்காய் உண்பதைஇது நினைவு படுத்துகின்றது.

கலித்தொகை :

கற்றறிந்தோர் ஏத்தும் கலித்தொகை என்னும் நூல் அடிப்படையில் அது அகம்பொருள் பற்றியதாகும். அங்கும் சில மருத்துவக் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

"பொருந்தி யான் தான் வேட்ட பொருள் வயின் நினைந்து
திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய
மருந்து போல்"

(கலி பாலை 17ம் பாடல் - 18-20வரி)

நல்வினையால் திருந்திய யாக்கையினுள் மருத்துவன் ஊட்டிய மருந்து என்பதன் மூலம் நோயுற்றவரின் உடல் நிலையை அறிந்து அதற்குத் தகுந்தாற் போல் மருத்துவர் மருந்து கொடுக்கின்றனர் என்ற செய்தி பண்டைத் தமிழரால் அறியப்பட்டது. மேலும் "இன்னுயிர் செய்யும் மருந்து" (கலி பாலை 31ம் பாடல் 15ம் வரி) என்ற பாடல்வரி மருந்து உயிர்காக்கும் இயல்புடையதுஎன குறிப்பிடப்பட்டுள்ளது.

ஔவையார் பாடல் - மூதுரை:

ஆபத்து நேர்ந்த வேளையில் உடன்பிறந்தவர் அன்றி பிறரும் உதவி செய்ய முன் வருவர் என்ற கருத்தை விளக்கும் ஔவையார்பாடலில் மருத்துவக் குறிப்பு இடம் பெற்றுள்ளது.

"உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி உடன் பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல் வாரும் உண்டு"

(20ம் பாடல்)

இப்பாடலில் உடன் பிறந்தே கொல்லும் வியாதி என்பதன் பொருள் - சில வியாதிகள் பரம்பரையாக பிறக்கும் போதேவந்தடைந்து ஒருவனது மரணத்திற்கும் காரணமாக அமைகின்றன. இன்றைய மருத்துவம் கூட நீரிழிவு, இதயத்துடன் தொடர்பான நோய்களுக்கு பரம்பரையும் ஒரு காரணம் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சிலப்பதிகாரம்

பழுதுபட்ட ஓர் உறுப்பை எடுத்து விட்டு வேறு ஓர் உறுப்பை பொருத்துதல் என்பது இன்றைய மருத்துவ உலகின் சாதனை. இது பற்றிய ஒரு குறிப்பு சிலப்பதிகாரத்தின் கட்டுரைக் கதையில் இடம் பெற்றுள்ளது. மதுராபதித் தெய்வம் பாண்டியர் முடிக்கு ஏற்பட்ட கேட்டினை எண்ணி வருந்தி பத்தினியாகி கண்ணகியின் முன் நிற்க அஞ்சி பின் புறமாகநின்று பாண்டியர் குலத்தின் சிறப்பை உரைக்கும்இடத்தில் இக் குறிப்பு இடம் பெற்றுள்ளது.

"வச்சிரத் தடக்கை அமரர் கோமான்
உச்சிப் பொன் முடி ஒளிவளை உடைத்த கை
குறைநறத்த செங்கோல்"

(சிலம்பு கட்டுரைக் காதை- 50-53)

இப்பகுதிக்கு உரையெழுதிய ந.மு.வேங்கடசாமதி நாட்டார் அவர்களின் உரை விளக்கத்தில்,

"நாடு விளங் கொண் புகழ் நடுதல் வேண்டித்
தன் ஆடு மழைந் தடக்கை யறுத்து முறை செய்த
பொற்கை நறுத்தார்ப் பினை தேர்ப்பாண்டியன்"

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கை குறைத்த வழி பொன்னாற் கை செய்து வைத்தமையின் பொற்கை பாடியன் எனப் பெயர் பெற்றான்.

தனது கையை வெட்டிய பாண்டியன் செயற்கையாக அமைந்த கையை பூட்டுமளவிற்கு மருத்துவம் அக்காலத்தில் வளர்ந்திருந்ததை இக் குறிப்பு எடுத்துரைக்கின்றது.

ஆசாரக் கோவை :

ஒழுக்கத்தைக் கோவைப்புடுத்திக் கூறும் இந் நூலில் மருத்தும் தொடர்பாக செய்யத்தக்கன, செய்யத் தகாதன என பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன.குறிப்பாக உடல் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாத உறக்கம் தொடர்பாக அரிய பல கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இரவில் எட்டு மணி நேரம் உறக்கத்தை வலியுறுத்தும் இந் நூல் பகல் வேளை உறக்கத்தை கண்டிக்கின்றது.

"............ பகல் வளரார்

நோயின்மை வேண்டுபவர்" (பாடல் 57 வரி 3-4)

உடல் நலத்தைப் பேணுபவர் வடக்குத் திசையிலும், வட கிழக்குத் திசையிலும் தலை வைத்து உறங்கக் கூடாது என வலியுறுத்துகின்றது.

"கிடக்குங் கால் கை கூப்பித் தொழுது
வடக்கொடு கோணம் தலை செய்யார்மீக்கோள்
உடற்கொடுத்துச் சேர்தல் வழி (பாடல் 30)

புவியின் காந்தசுழற்சி இத்திசைகளில் உள்ளதால் அது மூளை நரம்புகளைப் பாதிக்கும் என்பதை இன்றைய அறிவியல் உலகமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

மேலும் இரவில் மரங்களில் கீழ் உறங்கக் கூடாது என்பதை "இராமரமும் சேரார்" (13ம் பாடல் இரண்டாம் வரி) என்ற பாடல் வரி வலியுறுத்தியுள்ளது. தாவரங்கள் பகலில் உயிர்க் காற்றையும் இரவில் நச்சுக் காற்றையும் வெளிவிடுவதை விஞ்ஞானம் வெளிக் கொணர்ந்துள்ளது.

**நற்றிணை**

நற்றிணை அகப்பொருள் இலக்கியமாயினும் மருத்துவம் பற்றியும்மருத்துவக் குணங்கள் பற்றியும் எடுத்துரைக்கின்றது.

"அரும் பிணி உறுநர்க்கு வேட்டது கொடா அது
மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன் போல" (பாடல் 136-2-3 வரிகள்)

நோயுற்றவர் விரும்பும் எதனையும் கொடுக்காது நோயின் இயல்பறிந்து அதற்கேற்ப மருந்து கொடுக்கும் மருத்தவரை அறவோன் என உரைக்கின்றது.

குழந்தை ஆரோக்கியமாக வளர்வதற்கு தாய்ப்பாலின்இன்றியமையாமை பற்றி நற்றினையில் சில பாடல்கள் உள்ளன. உதாரணமாக,

"புதல்வன் ஈன்ற பூங்கண் மடந்தை
முலைவாய் உறுக்கும் கை"

(பாடல் 355 1-2 வரிகள்)

என்ற பாடல் வரிகளைக் குறிப்பிடலாம்.

**தொல்காப்பியம் :**

உலகத்து மொழிகளில் இலக்கண வரம்பை உறுதிப் படுத்தும் நூல்களில் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம். எழுத்து, சொல் பொருள் என மூன்று அதிகாரப் பிரிவுகளைக் கொண்ட இந் நூலில் பொருளதிகாரத்தில் பல மருத்துவக் குறிப்புகள் காணப்படுகின்றன. குறிப்பாக ஆண் பெண் சேர்க்கை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மாதவிலக்கு நாட்களில் உடலுறவு கொள்ளுதல் உடல் நலத்திற்கு தீங்கானது என்பதை,

"பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்தகன்று உறையார் என்மனார் புலவர்"

(தொல்- கற்பியல் 185)

இந்நூற்பா விளக்குகின்றது. பூப்புத் தோன்றி நிகழும் மூன்று நாளும் சொற் கேட்கும் வழி ஒழுகி நின்று பிற்பட்ட பன்னிரண்டு நாளும் தலையை நீத்து தலைவன் உறையப் பெற்றான்.

"முந்நாள் அல்லது துணையின்று கழியாது
அந்நாள் அகத்தும் அதுவரை வின்றே"

(தொல் - களவியல் 120)

குடும்பத்தில் புத்திரர் இல்லாதவர்கள் "புத்" என்று சொல்லப்படும் நரகத்திற்குச் செல்ல வேண்டும் கணவன் மனைவி உறவு காம இன்பத்திற்கு மட்டும் அன்றி வம்ச விருத்தியும் முதன்மையானது.

"பூத்த காலைப் புனையிழை மனைவியை
நீராடியபின் ஈராறு நாளும்
கரு வயிற்றுறூஉம் கால மாதலின்
பிரியப் பெறான் பரத்தையிற் பிரிவோன்"

அகத்தினையியலில் இத்தகையதொரு பாடல் இடம் பெற்றுள்ளது.

"பரத்தையிற் பிரிந்த கிழவோன் மனைவி
பூப்பின் புறப்பா டீராறு நாளும்
நீத்தகன் றுறைதல் அறந்தா றன்றே"

(இறையனார் அகப் பொருள் சூத் 43)

என்ற நூற்பாவையும் மனத்திற் கொள்க.

கருவுறுதல் தொடர்பாக வாசகர் அறிய வேண்டும் என்பதற்காக கருத்தரிக்கும் காலம் பற்றி ஆசாரக் கோவையும் சில தகவல்களைத் தருகின்றது.

"தீண்டா நாள் முந்நாளும் நோக்கார் நீராடியபின்
ஈராறு நாளும் இகவற்க என்பதே
பேரறி வாளர் துணிவு"

(ஆசாரக் கோவை- செய்யுள் 42)

சங்க காலத்தில் நோய் என்பது மனம் சார்ந்த காம நோயாகவும் காணப்பட்டது உடல் சார்ந்த நோயாக வும் காணப்பட்டது. உடல் சார்ந்த நோயைக் குணப் படுத்த முயன்ற மருத்துவர் நன்கு மதிக்கப்பட்டிருந் தமையும் பழந்தமிழ் இலக்கியங்களில் காணமுடிகின்றது.

**இன்னுயிர் செய்யும் மருந்து**

"அருந்துயர் ராரஞர் தீர்க்கும் மருந்து;

"உயிர் வாங்கு மற்று இந்நோய் தீரும் மருந்து" என மருத்துவன் கொடுத்த மருந்து சிறப்பாக்கப்பட்டது.

"மருந்தாய்ந்துகொடுத்தஅறவோன்! இன்னுயிர் போத்தக மருத்துவர்; என்றெல்லாம்" மருத்துவரும் போற்றப்பட்டிருந்தனர்.

(இதைத் தொடர்ந்து உயிரினங்கள் தோற்றம் பற்றியும்மண்ணின் இயல்புகள் தொடர்பான அறிவியலை நம் பழந்தமிழர் கொண்டிருந்தநிலை தொடரும்)



வடகோவை வரதராஜனின் "ஆளப்போகும் வேர்கள்" மெய்ப்புனைவுகள் வெளியீடு யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் 27.01.2024 சிவபாதம் சிவகுமார் தலைமையில் நடைபெற்றது. வெளியீட்டுரையை எமுகமட் சப்றி நிகழ்த்தினார். விமர்சன உரைகளை கலாநிதி தி.செல்வமனோகரன், சரவணமுத்து சிவநேசன் நிகழ்த்தினார்கள். ஏற்புரையை நூலாசிரியர் வழங்கினார்.

காடுலாவு காதை பாகம் 2
நாவல் தொடர்

தமிழ்க்கவி

# காடுலாவுகாதை 2

## அத்தியாயம் - 2



அழுதாளா? அவள் அழுதாளா? ஆம். அப்போதெல்லாம் அவள் அழுதாள். அதற்கான கண்ணீரும் கோழைத்தனமும் அவளிடம் இருந்தது. மேலோட்டமாக பார்க்கும் பார்வையில் அவள் துணிச்சலானவள் தான். ஆனால் கையாலாகாத்தனம் எப்பேர்ப்பட்ட மனிதரையும் கலங்க வைத்து விடுகிறது.

போனவாரம்தான் ஒரு மகனைத் தொலைத்துவிட்டு காடலைந்து தேடியும் முடியாமல் அவர்கள் ஊரில் இருந்த கண்ணன் கோவிலில் அங்கப் பிரதரட்சணம் செய்து வேண்டிக்கொண்டாள். கண்ணன் அவளை கைவிடவில்லை. மகனும் மற்றவர்களும் தாமாகவே வீடு திரும்பியிருந்தனர்.

இருக்கிறதை பிடித்தால் நடக்கிறது காணாமல் போகும் அப்படித்தான் காலம் இருந்தது. கொஞ்சம் பண வசதியுடையவர்கள் பிள்ளைகளை வேறு நாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். வல்வெட்டியிலிருந்து அவளிடம் அடைக்கலமாக வந்திருந்த தங்கையின் மகன்கள் இருவரும் இந்தியாவுக்குப் போய்விட்டனர். அவளுடைய மகன்கள் வயல் விதைப்பில் கவனம் செலுத்தினார்கள். வசந்தன் மட்டும் தன் படிப்பை விட்டுவிடாமல் படித்தான். பாடசாலைகள் எதுவும் ஆரம்பிக்க முடியவில்லை என அவை மூடப்பட்டுக் கிடந்தன. காரணம் இந்தியப்படையினர் தாம் போன பின்னர் தமிழ் மக்களுடைய பாதுகாப்புக்காகவென படையணிகளை உருவாக்கிக் கொண்டிருந்தனர். இந்தப் படையல் அணிக்கான வீரர்களை அவர்களை அண்டியிருந்த இயக்கங்களே பலவகையிலும் துரத்திப்பிடித்து அவர்களிடம் கையளித்தனர்.

இதுவரை தமது பகுதி இளைஞர்களை பாதுகாப்பாக பிடிக்காமலே உறவாடிய இயக்கம் புளொட். இந்திய இராணுவம் வெளியேற வேண்டிய கடைசி நாளன்று கிராமத்து வாலிபர்கள் அனைவரையும் கூட்டம் வைக்கப்போவதாக கூறி வாகனங்களில் ஏற்றிக் கொண்டு போய்விட்டார்கள். அதில் நான்கு கிராமங்களை சேர்ந்த பாடசாலை மாணவர்களும் அடக்கம். எனில் அவளது மகன் படித்துக்கொண்டிருந்த ஒரே மகன் வசந்தனும் அடக்கம்.

மாலைப்பொழுதாகி இருள் சூழ்ந்த பின்னும் பிள்ளைகள் வரவில்லை. ஒவ்வொருவராக தெருவுக்கு வந்த பெற்றவர்கள் கலங்கி நின்றார்கள்.அவர்களால் தப்பித்து விடப்பட்ட அவர்களின் உறவுக்காரப் பெடியன்கள் இருவர் பிள்ளைகளை அவர்கள் கொண்டு போய் விட்டதாக சொன்னார்கள். தெருவில் பெரும் ஓலம் எழுந்தது.

லெச்சிமி கண்களிலிருந்து வடியும் நீரை புறங்கையால் துடைத்தவாறே வீட்டுக்குள் நுழைந்து திண்ணையில் புரண்டாள். அழுகை விம்பலாகி விம்பல் விசும்பலாகி ஓயும்வரை காத்திருந்த கந்தப்பு வாய் திறந்தார். "வெறுவாய்க்கில கெடுவார் படிக்கிற பெடியளக்கொண்டே காட்டி இந்தியப்படையிட்ட ஆயுதம் வாங்கப்போறம் எண்டு சொல்லித்தான் கொண்டு போனவங்களாம். அப்பிடியே கொண்டு போயிற்றாங்கள்."

"நீயேன் கரையிறாய் விடியட்டும் போய் தேடிப்பாக்கலாம்" என்றான் மூத்தவன் காந்தன்.

லெச்சிமி மட்டுமல்ல அந்த ஊரே அன்று உறங்கவில்லை. அதிகாலையிலேயே கூட்டம்கூட்டமாக பிள்ளைகளை தேடி புறப்பட்டார்கள். லெச்சிமி தன் மிதிவண்டிக்கு காற்றை சரிபார்த்தாள் எதற்கும் இருக்கட்டுமே என்று காத்தடிக்கும் பம்மை கரியரில் கட்டினாள். கூடவே ஒரு டப்பா சொலுக்ஷன் கம்பவுண்டை என எடுத்தாள் காந்தன் ஒரு தண்ணீர்ப்போத்தலை எடுத்து அதில் போட்டான். அவள் கடவுளை ஒருதடவை நினைத்து கும்பிட்டபின் கந்தப்புவிடம் திரும்பி,

"அப்பூ அவங்கட இடம் செட்டிகுளம் முசல்குத்தி காடாம் நான் அங்கதான் போறன் பிள்ளையள கவனமா பாருங்க" என்றபடி மிதிவண்டியில் ஏறினாள். அவள் நகரத்தை அண்மித்தபோது பஸ்ஸில் பயணிக்க சென்றவர்களை கண்டாள். அவர்கள் இவளை முந்தி

சென்று விடுவர். ஆனால் அவளுடைய அயல்வீட்டுக் காரி "பிள்ளை நேத்து ராவே முசல்குத்திக்க பெரிசு (எல் ரீரீ) பூந்திட்டுதாம்.சணல் சண்டையாம். அய்யோ எங்கட அப்பாவிப் பொடியள் இடையில மாட்டிக் கொண்டுது கள்" என்றழுதாள். லெச்சிமி அவளை பரிதாபமாகப் பார்த்தாள்.

மிதிவண்டி ஓடிக் கொண்டிருந்தது. இப்ப என்ன செய்யிறது அவளுடைய மகன் தப்பி வந்த பொடியனிடம் சொல்லியும் விட்டிருந்தான் "நாங்கள் எப்பிடியும் தப்பி வந்திருவம். அம்மாவை தேடி வர வேண்டாம் எண்டு சொல்லு அவங்கள் அவவ கண்டா சுடுவம் எண்டு சொன்னவங்கள்"

லெச்சிமியின்ர வாய் அப்பிடி. என்றாலும் அதை அடக்க அவளால முடிவதில்லை நெஞ்சை நிமித்திக் கொண்டு யாரையும் கேள்வி கேட்கும் செருக்கு. இந்த வாய்தான் தனக்கெதிரி என அவள் அறிந்திருந்தாலும் அவளால் அதை அடக்க முடியாது நெளுக்குளம் சந்தியில் சற்று தாமதித்தாள். கடந்துவரும் வயல் வெளியை அண்டியதாக நேற்றுமுன்தினம் பெரும் சமர் நடந்திருந்தது. ஈப்பீயாரஎல்எவ் குழுவினருடனான சண்டையை விடுதலைப்புலிகள் நடத்தியிருந்தார்கள். அதில் பலவந்தமாக பிடித்து செல்லப்பட்ட மாணவர்கள் பலர் கொல்லப்பட்டிருந்தார்கள். அவள் பாவற்குளம் பாதையை தேரிந்தெடுக்க நினைத்தாலும் ஊரவர்கள் எப்படியும் பூவரசன்குளம் வீதியையே தேர்ந் தெடுப்பார்கள் என கருதி மிதிவண்டியை நேராக நிமித்தி னாள் அவளுடைய பிள்ளை தப்பியோடியிருப்பான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை அவளுக்கிருந்தது.

………. ………..

இந்திய ராணுவத்தின் முன். வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மாணவர்கள் இயக்கம் சொல்லிக் கொடுத்தபடி அமைதியாக நின்றனர். சற்று நேரத்தில் அங்குவந்த ஒரு அதிகாரி விளங்காத மொழியில் ஒரு கட்டளையை சொல்லவும் அவர்கள் ஒவ்வொருவராக நகர்ந்து முன்னே சென்றனர். ஒவ்வொருவருக்கும் ஒரு ஏகே ரக துப்பாக்கியோ அல்லது ரீ 56 ரக துப்பாக்கியோ கிடைத்தது.அதைப் பெற்றுக்கொண்டு அவர்கள் வந்த வாகனத்தில் ஏறினார்கள். இருளாகிவிட்டது. "அண்ணை எங்களை விடுங்கண்ணை அம்மா தேடுவா" என்றான் ஒருதன் அவனும் அவனுடைய தம்பியும் பிடிபட்டிருந்தனர். அவன் மறுபடி அம்மா என்று ஆரம்பிக்க, "பளார்" என அவன் கன்னத்தில் விழுந்தது ஒரு அறை. அதுவரை அன்பைப் பொழிந்த அண்ணாக்கள் இப்போது அச்சமூட்டுபவர்களாகி நின்றனர்

"டேய் எவனாவது மூச்சு விட்டியளோ துலைச்சுப் போடுவன் எனறு அதட்டினான் நேரமாகிய பின் அவர்களுக்கு பாதுகாப்பாக ஒரு இந்தியப்படையின் வாகனம் முன்னே நகர்ந்தது. நேராக ஒரு பிரபல வர்த்தக களஞ்சியத்தின் முன் வாகனம் நின்றது அது எந்த இடம் என்பது அவர்களில் யாருக்கும் தெரியவில்லை. "டேய் இறங்கெல்லாம் உள்ளுக்க கிடக்கிற சாப்பாட்டு சாமானெல்லாம் வாகனத்தில ஏத்துங்க என்று உறுமினான் பிள்ளைகள் அச்சத்துடன் இறங்கினாலும் அது ஒரு பாண்பேக்கரி என்று தெரிந்ததும் இயன்றளவு வாயிலும் திணித்துக்கொண்டு மீதியை ஏற்றினார்கள் ஒரு களஞ்சியத்தை உடைத்த நால்வர் அதற்குள் இருந்த மா,பருப்பு,சீனி அரிசி முதலான பொருட்களை தனியான ஒரு வாகனத்தில் ஏற்றப்பணித்தார்கள் அதன்பின் இந்திய ராணுவ வண்டியை தொடர்ந்து வாகன அணி தெற்கு நோக்கித் திரும்பியது.

"ஏன் மச்சான் இதுக்கால" என்றான் ஒருவன்

"மதவாச்சிமட்டும் அவங்கட பாதுகாப்பு இருக்கும் அதுக்குத்தான்.நேற்று மன்னாரால ஓட வெளிக்கிட்ட ஈப்பிய நெளுக்குளத்தில மடக்கினவங் களெல்லே" என்றான் விபரமாக பையன்கள் தமக்குள் கூட கிசுகிசுக்க பயந்து ஒடுங்கியிருந்தார்கள்.

மதவாச்சிசெல்லும் வழியில் மாங்குளம் நேரியகுளம் செல்லும் பிரதான வீதி செட்டிகுளம் கடந்து ஆண்டியாபுளியங்குளம் வழியாக பறையனாலங் குளத்தில் மன்னார் வவுனியா நெடுஞ்சாலையை தொடும். அடர்வனம் இடையே சிறு சிறு கிராமங்கள் கொண்ட பாதை செட்டிகுளம் ஒரு பிரதேச செயலர் பிரிவாகும் வவுனியா மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகத்தில் வெங்கலசெட்டிகுளம் என்ற பெயரில் இது அமைந்திலுந்தாலும் பாடசாலை வைத்தியசாலை அரச கட்டடங்கள் ஊடறுத்து செல்லும் ஒரு புகையிரதப்பாதை என குட்டி நகரமாக இருந்தது.

மிதிவண்டி பம்பமடுவை அடைந்தபோது களைப்பில் அவள் சற்றே இறங்கினாள் அப்போது வீதில் பெரும் பரபரப்பு தென்பட்டது இந்தா வருகிது வருகிது.. என்று சிலர் கத்தினர். அவர்களிருக்கும் இடத்தை ஒரு மினிபஸ் கடந்தது வேகமில்லாமல் சென்ற அதனுள் துப்பாக்கிகளை கையில் பிடித்தபடி பெண்கள்" நிறைந்திருந்தனர். வாகனம் அவர்களைக்கடந்த போது "புலிப்பெட்டையளடா" என்றொருவர் கூச்சலிட்டார்.

(தொடரும்...)



இயல்வாணனின் "யாரும் பாடலாம் என்னை" கவிதைத்தொகுதி வெளியீடு யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் 25.01.2024 தாயகம் ஆசிரியர் க.தணிகாசலம் தலைமையில் நடைபெற்றது. வெளியீட்டுரையை எழுத்தாளர் சோ.தேவராஜா நிகழ்த்தினார். மதிப்பீட்டுரைகளை கவிஞர் ந.குகபரன் அவர்களும் கவிஞர் வ.வடிவழகையனும் நிகழ்த்தினார்கள். ஏற்புரையை நூலாசிரியர் வழங்கினார்.

# சொல்ல நினைத்தவை

## 2

**த.கலாமணி**

# பரணீதரனும் பட்டினத்தாரும் யோகேஸ்வரி சிவப்பிரகாசமும்



இன்று வயது முதிர்ந்தோர் நிலைபற்றிக் குறிப்பிடப் பலராலும் பயன்படுத்தப்படும் ஒரு பதம் "டிமென்ஷியா" ஆகும். வயது மூப்பு நிலையில் ஒருவருக்கு ஏற்படும் மறதி நோயாக இதனைச் சிலர் குறிப்பிடு கின்றனர். ஆனால், டிமென்ஷியா என்பது மறதிநோய் அன்று. உண்மையில், டிமென்ஷியா என்பது ஒருவரின் அறிவாற்றற் தொழிற்பாடுகளின் இழப்பைக் குறிப்பது. அதாவது, இந்த இழப்பானது ஒருவரின் நாளாந்த வாழ்க்கையிலும் நடவடிக்கைகளிலும் குறிப்பாக சிந்தித்தல், நினைவுகூரல், காரணங்காணல் ஆகிய செயற்பாடுகளில் ஏற்படும் இழப்பைக் குறிக்கப் பயன்படுத்தப்படுவதாகும். எனவே, டிமென்ஷியா என்பது ஒருவரின் அறிவாற்றற் தொழிற்பாடுகளின் வீழ்ச்சியோடு இணைந்த ஒரு தொகுதி அறிகுறிகளை விபரிக்கின்றது எனக்கொள்ளலாம்.

டிமென்ஷியா எனும் இந்த உளவியல் எண்ணக் கருவைக் கருப்பொருளாகக் கொண்டு எழுதப்பட்ட இரு சிறுகதைகள் அவற்றைப் படித்த காலத்திலேயே என் நினைவில் பதிந்தவை. இச் சிறுகதைகளுள் ஒன்று, "உதயன்" சித்திரைச் சிறப்பிதழில் (2017) வெளிவந்த, க.பரணீதரனின் "நினைந்தது மற்று நினையாமையு மற்று" என்பது; மற்றையது, "ஞானம்" சஞ்சிகையில் (ஆகஸ்ட் 2019) இடம்பெற்ற, யோகேஸ்வரி சிவப்பிர காசத்தின் "மறந்து… மரத்து" என்பது பரணீதரனின் இச் சிறுகதை "அல்வாய்ச் சண்டியன்" என்ற அவரது சிறு கதைத் தொகுப்பிலும் (ஆகஸ்ட் 2017) உள்ளடக்கப் பட்டிருந்தது.

இவ்விரு சிறுகதைத்தலைப்புகளுமே ஒரே பொருளைக் கொண்டவையாகவே உள்ளன. மறந்து போதல் (அல்லது மறதி) என்பது நினைவிலுள்ளவற்றை மீட்டெடுக்க முடியாமையைக் குறிக்கும். ஆகவே, "மறந்து", "நினைந்ததுமற்று" ஆகிய இரு சொற்களின தும் கருத்து ஒன்றே. இதே போல, உணர்வுகள் அற்ற நிலை உணர்வுகள் மரத்துப்போகும் நிலையாகும். அதாவது, நினைத்தது மறந்து போன நிலையைக்கூட உணரமுடியாத, நினை யாமையற்ற நிலையாகும். எனவே "மரத்து" என்ற சொல்லும் "நிலையாமையு மற்று" என்ற சொல்லும் ஒரே அர்த்த முள்ளவையே.



இவ் விரு சிறுகதைகளையும் படித்தபோது, இவற்றின் தலைப்புகளிலுள்ள பெயர்ஒற்றுமை என்னை வியப்பிலாழ்த்தியது. எவ்வாறு இது நிகழ்ந்தது என்பது இன்றும் எனக்குக் கேள்விக் குறியாகவே உள்ளது.

யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் நாடறிந்த ஒரு மூத்த எழுத்தாளர்; ஓய்வு நிலையிலுள்ள வங்கி முகாமையாளர். இவர், அதிகமான சிறுகதை களை எழுதியிருப்பவர். முதுமையை சுகமாக அனுபவித் துக் கொண்டிருக்கும் நிலையிலும் தொடர்ந்து எழுதிக் கொண்டிருப்பவர்; இனிதாகப் பழகும் பண்புடையவர். இவரது சிறுகதைகள் எப்போதும் உணர்வுச் சுழிப்பு களைச் சித்திரிப்பவையாக அமைந்தவை.

பரணீதரன் ஓர் இளம் எழுத்தாளர்; "மீண்டும் உயிர்ப்போம்", "அல்வாய்ச் சண்டியன்" ஆகிய இரு சிறு கதைத் தொகுதிகளை வெளியிட்டிருப்பவர். இவர் உளவியற் பாடத்தில் சிறப்புப் பட்டம் பெற்றவர். "ஜீவநதி", "கடல்", "நாங்கள்", "காத்தவராயர் மான்மியம்", "நடி", ஆகிய சஞ்சிகைகளின் பிரதம ஆசிரியர், முந்நூறுக்கும் அதிகமான நூல்களின் பதிப்பாசிரியராக விளங்கும் ஓர் இலக்கியச் செயற்பாட்டாளர். ஆன்மிக நாட்டமும் சமூகக்கொடுமைகளைச் சாட விழையும் உந்துதலும் இவரது சிறப்பான பண்புகள்.

இவ்விருவருமே இலக்கியத் தொடர்புள்ளவர் கள். இவர்களது குறிப்பிடப்பட்ட இரு சிறுகதைகளிலும் உள்ள டிமென்ஷியா குறித்த உளவியற் பார்வைகள் தொடர்ச்சியானவை. பரணீதரனின் சிறுகதை யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்களுடைய சிறு கதையை விட காலத்தால் முந்தியதாகும், "டிமென்ஷியா" ஏற்படுவதற்கான அறிகுறிகளை விபரிப்ப தாக யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் சிறுகதையும் டிமென்ஷியாவின் எதிர்கால விளைவை விளக்குவதாக பரணீதரனின் சிறுகதையும் அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது.

யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் கதையம்சம், சேதுபதி எனும் சிறுகதை எழுத்தாளர் ஒரு கிழமைக்கு முன்னர் எழுத நினைத்திருந்த கதையின் கருவை மறந்து போனமை பற்றியது. ஒரு கிழமைக்கு முன்பு, அவர் பஸ்ஸில் பயணம் செய்த போது, ஒரு தரிப்பிடத்தில் ஒருவர் இறங்கிய வேளை, அருகிலிருந்த வீட்டில் பந்தலில் படர விடப்பட்டிருந்த மல்லிகைக் கொடியில்

நிறைந்திருந்த வெள்ளை நிற மலர்களைக் கண்டதும் அக்கதைக்கரு அவருள் பிறந்தது. ஒரு கிழமையின் பின்னர் அக் கதையை எழுத அமர்ந்த போது,பேனாவை எங்கு வைத்தோம் என்பது அவருக்கு மறந்து போய் விடுகிறது. எவ்வளவோ முயன்றும் அது அவருக்கு நினைவுக்கு வரவேயில்லை. தனக்கு ஏற்பட்ட மறதி குறித்து அவர் நினைத்துப் பார்க்கிறார். அண்மைக் காலங்களில் இந்த மறதி அவரை ஆட்சி செய்து கொண்டிருப்பதை அவர் உணரத்தலைப் படுகிறார்.

இதே போலவே, சேதுபதி பஞ்சபுராணம் ஓதும் போது திருவிசைப்பா மறந்து போய்விடுகிறது. முரசு மோட்டையில் ஒன்றாக வேலை செய்த சுப்பையா என்பவருடன் உரையாடும்போது அவர் யாரென நினைவுக்கு வரமறுத்துவிடுகிறது. எழுதும் போதும் முன்பு நினைத்து வைத்திருந்த சொற்கள் நினைவிற்கு வருவதில்லை. மேடைப் பேச்சுகளின் போதும் நினைத்ததைப் பேச முடியாமல் மறந்து போய்விடுகிறது. மறதி மெல்ல மெல்ல அதிகரித்து வருவதை சேதுபதி உணர்கிறார். மேடைப் பேச்சைக் கைவிட்டது போல எழுதுவதையும் கைவிட வேண்டி வருமா என அஞ்சு கிறார் அந்நேரத்தில் அவரது தந்தையின் தம்பியான சின்னையா என்பவரைப் பற்றி நினைத்துப் பார்க்கிறார். இறுதிக் காலத்தில் அவர் மறதியால் அவதிப்பட்ட வாழ்க்கைச் சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன. "சின்னையா அவர்கள் அவரது இறுதிக் காலத்தில் வெள்ளைச் சிரிப்பும் வெறித்த பார்வையுமாய் இருந்த கோலம் சேதுபதியின் மனதுள் தெரிகிறது" என்ற வரிகளோடு இச் சிறுகதை நிறைவுறுகிறது.

பரணீதரனின் சிறுகதை எதிர்காலவியல் நோக்கிலானது. ஒரு நாட்டின் இராணுவ இரகசியங் களோடு இணைந்த ஆய்வொன்றில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பேராசிரியர் ஒருவருக்கு ஏற்படக்கூடிய டிமென்ஷியா நிலை காரணமான விளைவைக் கருப் பொருளாகக் கொண்டது.

ஒரு நாட்டின்ஆய்வுமையங்களின் தலைமைச் செயலகத்தில் அந்நாட்டின் தலைவிதியையே நிர்ணயிக்கக் கூடிய ஆய்வொன்றில் பேராசிரியர் எமில் ஈடுபட்டுள்ளார். இந்த ஆய்வின் முடிவு வெற்றிகரமாக அமைந்தால் வல்லரசுகள் பலவும் இந்நாட்டுக்கு அடிமை யாகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் பேராசிரியர் எமில் இந்நாட்டின் தலை மகனாகக் கொண்டாடப்படுபவர். பேராசிரியர் எமில் அவர்களின் முக்கியத்துவம் அவருக்கு வழங்கப்படும் வசதிகள் மூலமும் அவருக் காக நியமிக்கப்பட்ட ரகசிய இராணுவப் பாதுகாவலர்கள் மூலமும் தெரியவரும்.

எழுபத்தைந்து வயதைக் கடந்த பேராசிரியர் எமில் அவர்களைக் கவனிக்க வென இருபத்தொரு வயதின் ஆரம்பத்தி லிருக்கும் டோலி நியமிக்கப்பட்டிருக் கிறாள். டோலி அவருக்கு பீ.ஏ.மாத்திர மன்றி, அவரின் செவிலித்தாயும் கூட பேரா சிரியர் எமில் இந்நாட்டின் அரும்பெரும் சொத்து என்பதையும் அவரைப் பராமரிப்பதில் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும் என்பதையும் உணர்ந்திருந்த டோலிக்கு அவரின் அண்மைக்கால நடத்தைகள் சந்தேகத்தைத் தந்தன. அவரின் நாளாந்த வாழ்க்கையில் காணப்பட்ட நடத்தை மாற்றமும் மலங்க மலங்க முழித்துக் கொண்டிருந்த அவரின் நிலையும் இதனைத் தலைமைச் செயலகத் துக்கு உடனடியாக அறிவிக்க வேண்டியதான அவளின் பொறுப்பை உணர்த்துகின்றன.



நரம்பியல் நிபுணர்களையும் மூளை ஆய்வு நிபுணர்களையும்கொண்ட குழுவொன்று வரவழைக்கப் பட்டு விசேட அவசர சேவைப்பிரிவில் அவருக்கு மூளைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பரிசோதனைகளை முடித்து வந்த மருத்துவக் குழுவினர் பேராசிரியருக்கு ஏற்பட்டிருப்பது டிமென்ஷியா தான் என்பதை உறுதிசெய்கின்றனர். பேராசிரியர் மூளைச் சிதைவுடன் இந்நாட்டின் எதிர்காலமும் சிதைந்து போய்விட்டதே என்று ஏம்பலிக்கும் டோலி அவரைக் காணச் சென்றபோது, "பேராசிரியர் ஏதோ ஒரு திசையில் வெறித்து நோக்கியபடி முறுவலித்துக் கொண்டி ருந்தார்" என்ற வரிகளோடு இச்சிறுகதையும் முற்றுப் பெறுகிறது.

இவ்விரு சிறுகதைகளின் தலைப்புகளும் கருப் பொருளும் ஒன்றாக இருப்பது மாத்திரமல்லாது, அவற்றின் முடிவுகளைச் சித்திரிக்கும் வரிகளும் ஒன்றாக இருப்பது ஆச்சரியமானது. "இச்சிறுகதைக்கான தலைப்பை எவ்வாறு தெரிந்து கொண்டாய்" என்று, இக்கதையை அப்போது வாசித்த பின் பரணீதரனிடம் கேட்டபோது பட்டினத்தார் பாடல் ஒன்றிலிருந்து அதனைப் பெற்றுக் கொண்டதாக அவர் கூறினார். அவரின் ஆன்மிக நாட்டம் பட்டினத்தார் பாடல்களையும் படிக்கத் தூண்டும் என்பதை நான் அறிவேன்.

அதன் பின்பு பட்டினத்தார் தனிப்பாடல் திரட்டு நூலில் அப்பாடலைத் தேடினேன். நான்காவது கச்சித் திருவகவலில் அப்பாடல் காணப்பட்டது.

**சிந்தனையற்றுப் பிரியமுந் தானற்றுச் செய்கையற்று**
**நினைந்ததுமற்று நினையாமையுற்று நிரச்சிந்தனாய்த்**
**தனந்தனியேயிருந் தானந்த நித்திரைதங்குகின்ற**
**அனந்தலி லென்றிருப்பேன் அத்தனே கயிலாயத்தனே.**

இப் பாடலைப் படித்ததுமே, திருவாசக அடி களை தமது நாடகங்களுக்கான தலைப்புகளாகப் பயன்படுத்தும் குழந்தை சண்முகலிங்கம் அவர்களை நினைக்கத் தூண்டியது. "டிமென்ஷியா" நிலையை அதன் குணங்குறிகளோடு உணர்த்துப் இப்பட்டினத்தார் பாடல் வரிகள் பட்டினத்தாரின் கூர்மை யான அவ தானத்தைப் புலப்படுத்தின. "தமிழன் இவை பற்றி முன்பே கண்டு பிடித்திருக்கிறான்" என்று கூறும் "அதிகப் பிரசங்கித் தனத்தை" நான் விரும்பாதவன். ஆனால், "டிமென்ஷியா" நிலையை அன்றே அனுபவ வெளிப்பாடாகப் பட்டினத்தார் சொல்லியிருக்கின்றார் என்பதே அவ தானத்துக்குரியதாகும். இதனை ஒத்ததாக, யோகேஸ்வரி சிவப்பிரகாசமும் பரணீ தரனும் எழுதிய "டிமென்ஷியா" குறித்த இரு சிறுகதைகளும் காலத்தின் பதிவுக் குரியவை.

கோகிலா மகேந்திரன்

# 2 முடிவைத் தொடுவாய் முயன்று

சரியான தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கான பிழையான நேரம் ஒன்று வாழ்வில் எந்தக்கணமும் அமைவதில்லை. எல்லா நாட்களும் "ஆசறு நல்ல நல்ல, அவை நல்ல நல்ல- நாட்களே!" மனம் மிக அமைதியுடன் இருக்கும் எந்த நேரத்திலும் முடிவுகளை எடுக்க லாம். அதற்கு அட்டமி, நவமி, அமாவாசை, கரிநாள், ராகுகாலம் - எதுவும் பார்க்கத் தேவையில்லை.

பலப்பல கேள்விகளைத் தமக்குள் உருவாக்கும் கலையை வளர்த்துக்கொண்டவர்கள், "தீர் மானம் எடுத்தல்" என்ற கலையிலும் சிறப்புத் தேர்ச்சி பெறுகிறார்கள் என்பது என்னவோ நிஜந்தான்!

தீர்மானம் எடுத்தல் என்ற தலைப்பு, அறிகை உளவியல், சமூக உளவியல், பொருளாதாரம், மெய்யியலும் முகாமைத்துவமும், சமூகவியல், கைத்தொழில் நிறு வன உளவியல் போன்ற பல்வேறு துறைகளில் கற்பிக்கப்படும் முக்கிய அலகாக இருந்த போதிலும், "மனச்சாந்தியுடன் இருக்கும்போது முடிவுகள் எடுக்கப்படவேண்டும்" என்பது அவசியமாக இருப்பதால் அறிகை உளவியலில் தீர்மானம் எடுக்கும் படிமுறைகள் எவ்வாறு அமைகின்றன என்றறிதல் பொருத்தமானது.

இரண்டு, மூன்று தடவை ஆழ்ந்த சுவாசத்தை மேற்கொண்டு, தீர்மானம் எடுக்க வேண்டிய விடயம் என்ன, அல்லது பிரச்சினை என்ன என்பதை முதலில் குறிப்பாகவும் தெளிவாகவும் எழுதிக் கொள்ள லாம்.

ஒரு பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் தடைப்பட்டு நிற்கும்போது,அதைத் தீர்ப்பதற்கு இருக்கின்ற சகல பாதைகளையும் சிந்தித்து, எதையும் விட்டுவிடாமல் எழுதிக்கொள்ளல் முதலாவது படிநிலையாகும். உதாரணமாக ஒரு மாணவர் தான் படிப்பதற்குத் தெரிவு செய்யவேண்டிய பாடங்களில், பரதநாட்டியம், சித்திரம், நாடகமும் அரங்கியலும் ,மனைப்பொருளியல் ,விவசாயம், சுகா தாரம், இலக்கியம், கர்நாடக சங்கீதம், வர்த்தகமும் கணக்கியலும் என்று ஒரு நீண்ட பட்டியல் இருந்தால், "பரதம், சித்திரம், நாடகம், இலக்கியம், சங்கீதம்" ஆகிய பாடங்களை நுண்கலைப் பாடங்கள் என்ற பிரிவிற்குள் வைக்கலாம். முதலில் குழு நிலைத் தெரிவைச் செய்து, பின்னர் தனிப் பாடத்தைத் தெரிய இது வாய்ப்பாக இருக்கும். தமக்கு முன் உள்ள வழிகள் அனைத்தையும் நினைக்கக் கூடிய அளவுக்கு விழித்துக் கொள்வோர் பிழைத்துக் கொள்வர்.

அடுத்த படிநிலையில் அவரவர் தமது சொந்த விழுமியங்களை மனத்திரையில் வரைந்துகொள்ள வேண்டும். ஒருவருடைய முடிவுகள் அவரின் விழுமியங்களோடு பரிவு கொள்ளல் அவசியம். இல்லையென்றால் நினைவில் வரும் நிம்மதி நேரில் வராது.

நல்லவை, விரும்பத்தக்கவை, பொருத்தமானவை என்று மனித இனம் கூட்டாக ஏற்றுக் கொள்கிற கொள்கைகள், நடத்தைகள் ஆகியவற்றின் தொகுதியே விழுமியங்கள் எனப்படுகின்றன .மனித குலத்தின் நீண்ட காலத் தொடர் இருப்புக்கு அவை அவசியமாகின்றன. சரியாய் இருத்தலும் செய்த லும், நம்பத் தகுந்தவராதல், புதிதாகச் செய்தல், வாண்மையுடனிருத்தல், அழகுணர்வு, ஒத்துழைத்தல், இரக்கமும் கருணையும், வலுவூட்டல், சுதந்திரம், வளைந்துகொடுத்தல், உண்மை, ஒழுங்கு, நீதி, தர்மம், நேர்மை ,சேவை, அன்பு, அஹிம்சை - என்று விழுமியங்களின் பட்டியல் அறுபதுக்கு மேற்பட்டதாய் நீளும்.

எமது விழுமியங்களில் முக்கியமானவை எவை என்று எமக்குத் தெரியாவிட்டால், எமக்குப் பிடித்தமான மனிதர்களை அவதானிக்கலாம். அவர்களின் விழுமியங்கள் சில எமக்கும் இருக்கும். அதனால்தான் அவர் களை எமக்குப் பிடிக்கிறது. "பணம் சேர்ப்பது" என்பது ஒருபோதும் ஒரு விழுமியம் ஆகாது. அதற்காக முடிவுகளை எடுப்பவர்கள் ஒருபோதும் வாழ்வில் வெற்றி பெறுவதில்லை.

"வைத்த பொருளும் அவனை நகுமே உலகத்து
அருளும் அவனை நகும்"

சில வேளைகளில் நாங்கள் எடுக்கப் போகும் முடிவு எங்கள் இரண்டு விழுமியங்களுக்கிடையில் முரண்பாட் டைத் தோற்றுவிக்கலாம். அலுவலக வேலை ஒன்றை இன்றிரவு நான் முடித்துக்கொடுக்க வேண்டிய நிலை. நம்பத் தகுந்தவராதல், பொறுப்பு ஆகிய இரண்டு விழுமியங்களை அது கொண்டுள்ளது. அதே நேரம் அன்று மாலை என் நண்பர் ஒருவர் அவசர உதவி கோரி என்னிடம் வருகிறார். அவருடன் நான் வைத்தியசாலைக்குப் போக வேண்டியுள்ளது. நட்பு என்ற விழுமியமும் எனக்கு முக்கியமானதுதான். ஆயினும் இவற்றில் ஒன்றைத்தான் அடுத்தநாள் விடிவதற்கிடையில் என்னால் செய்ய முடியும். இரண்டையும் செய்ய முயன்றால் பதற்றத்தில் காரியங்கள்

பிழைத்துவிடலாம். அத்துடன் நித்திரை வெகுவாகப் பாதிக்கப் படலாம். இவற்றால் சாந்தி என்ற விழுமியமும் பறிபோகலாம். ஆகவே இரண்டில் ஒன்றைத்தான் செய்யமுடியும். அது எது என்பது, எந்த விழுமியம் முக்கியமானது என்பதைப் பொறுத்தது.

"எளிமையான பாவனை செய்யாத வாழ்க்கை முறையே எல்லாருக்கும் மிகச் சிறந்தது என நான் நம்புகிறேன் .அதுவே உடலுக்கும் மனதுக்கும் உகந்தது" என்றார் அல்பேர்ட் ஐன்ஸ்டீன் .

தனது விழுமியங்களை நன்கு தெரிந்தவர் முடிவுகளை மிக இலேசாக எடுப்பர். "உண்மை"என்ற தன் விழுமியத்தை இறுதிவரை காப்பாற்றிய அரிச்சந்திரன் என்ற இலக்கியப் பாத்திரம், தன் முடிவுகளை மிக இலேசாக எடுத்து வாழ்வின் அடுத்த கட்டத்துக்கு நகர்வதை எம்மால் ஜீரணிக்க முடியாமல் போவதால், நாம் "மயானகாண்டம்" இசை நாடகத்தை ஆயிரம் தடவை பார்த்தாலும் கண் கலங்குவோம்.

"நிலம் பெயரினும் நின் சொல் பெயரல்" – புறநானூறு.

கருணை, இரக்கம் ஆகிய விழுமியங்களை உச்ச நிலைக்குக் கொண்டு சென்ற பாத்திரங்களை நாங்கள் பாரி, சிபி போன்ற நாயகர்களாக வாசித்து நிறைவு பெற்றிருக்கிறோம். சேரமான் பெருஞ் சோற்றுதியஞ்சேரலாதன் என்ற அரசன் "நடுநிலை" என்ற விழுமியத்தைப் பேணிய பாங்கைத் தமிழ் நாட்டுச் சரித்திரம் பேசும்.

அதே நேரம், விழுமியங்கள் பாதையைக் காட்டிட, நாங்கள் அடையவேண்டிய இலக்குப் புள்ளிகள் இருப்பதையும் கருத்திலெடுக்க வேண்டும். மூன்றாவது படிநிலையில் வருவது இலக்குகளை ஞாபகப் படுத்தல்.

வாழ்விலே "கொண்ட குறியும் தவறிப் போனவர்கள் எத்தனையோ "தான். இலக்குக்குப் பொருந்தாத வழிகளை முதலிலேயே நீக்கிவிடலாம்.

'How far that little candle throws it ' s beams !So shines a good deed in a naughty world" (அந்தச் சிறிய மெழுகுதிரி எவ்வளவு தூரத்துக்குத் தன் ஒளிக் கதிர்களைப் பாய்ச்சுகிறது? அதேபோலத்தான் விஷமத்தனமான இந்த உலகத்தில் ஒரு நல்ல செயல் துலங்குகிறது") என்பார் வில்லியம் ஷேக்ஸ்பியர்! இலக்குப் பற்றிய அவரின் மிகத் தெளிவான சிந்தனை அது.

அடுத்ததாக, ஒவ்வொரு வழிகளிலும் உள்ள சாதக, பாதக அம்சங்களை எழுதிப் புள்ளியிட வேண்டும். அம்சங்கள் ஒவ்வொன்றும் சமவலுவுடைய தாக இருக்க வேண்டியதில்லை. எந்த விடயம் எவ்வளவு முக்கியமானது என்பது அவரவருக்கே தெரியும் .அதற்குத் தக்கபடி புள்ளி இடலாம். குறித்த வழியை நாம் எவ்வளவு தூரம் ரசிக்கிறோம் ,அந்த முடிவினால் எமக்கு வர இருக்கும் லாபங்கள் எவை? இழப்புகள் எவை? நெருக்கீடு எவ்வளவு பெரியது ?சம்பந்தப்படும் உணர்வுகள் எவையாக இருக்கும்? போன்ற பலவேறு அம்சங்களும் கருத்திலெடுக்கப்பட வேண்டும். உணர்வுகளில் "நம்பிக்கை"என்பது பெறுமானம் மிக்கது. எங்கே அது உள்ளதோ, அந்தத் திசையில் அதிக கவனம் குவிக்கப் படலாம்.

ஒவ்வொரு வழிமுறைக்கும் புள்ளிகள் இடப் பட்டுக் கூட்டிக் கழித்து எழுத்தில் வைத்திருக்கும்போது ,மனம் ஓரளவு சிறந்த முடிவை நோக்கித் திரும்பி யிருக்கும். குறிப்பிட்ட முடிவை எடுத்த உடனேயும், அந்த முடிவை எடுத்து வாழ்வை நகர்த்தி வரும் வாழ்வின் இறுதிக்காலத்திலும், இந்த முடிவினால் அமையும் வாழ்வை அகக்காட்சியில் அனுபவித்துப் பார்க்க வேண்டும். எப்படி இருக்கிறது? அமைதியாக இருக் கிறதா?

இப்போது மனம் இன்னும் தெளிவடைந்திருக் கும். சில வேளைகளில் அறிவு ஒரு முடிவை நோக்கித் திரும்பும்போது, உணர்வு மற்றோர் வழியை நாடும். உணர்வு ஒத்துழைக்க மறுக்கும் முடிவுடன் இறுதிவரை ஒட்டியிருத்தல் கடினந்தான்! எமது ஆளுமையின் எந்தக்கூறு எந்த முடிவை விரும்புகிறது என்று முழுமை யாகப் பார்க்க முடிந்தால் சிறப்பு. அதே சமயம் ஒன்றுக்கு மேற்பட்ட முடிவுகளை விரும்புகிற வெவ்வேறு ஆளுமைக் கூறுகள் எல்லாம் எம்முடையவையே என்று ஏற்றுக்கொண்டு அதுபற்றிக் குழப்பமடையாதிருத்தல் அவசியம்.

"சேர்ட்" தைத்து விற்கும் நிறுவனம் ஒன்று ,தனது முகவரை வேடர் வாழும் காட்டுப் பகுதிக்கு அனுப்பி, அங்கே "சேர்ட்" விற்பனைக்கான வாய்ப்புப் பற்றி ஆய்வு செய்து வருமாறு கேட்டுக்கொண்டது .அவர் போன வேகத்தில் திரும்பி வந்தார். "அங்கே ஆண்கள் யாரும் "சேர்ட்"அணிவதில்லை. அதனால் அங்கே ஒரு "சேர்ட்டும்" விற்கமுடியாது" என்ற முடிவுடன் !. முதலாளியோ லேசில் "முடியாது" என்ற சொல்லை ஏற்றுக்கொள்பவரில்லை. ஆகவே அவர் இன்னொரு வரை அப்பிரதேசத்திற்கு அனுப்பினார். முதலில் அங்கு வேறொருவர் சென்று வந்தது இவருக் குத் தெரியாது. ஆயினும் இரண்டாம் நபரும் வேகமா கவே வந்தார். அவரது முடிவு, "அங்கே எமது "சேர்ட்" நன்றாக விற்பனையாகும். ஏனெனில் இன்னும் யாரும் போடத் தொடங்கவில்லை. "சேர்ட்" போடும் ஒருவரின் அழகையும் கம்பீரத்தையும் சரியாக அறிமுகம் செய்தால், சிறிது காலத்தில் எல்லோரும் போடுவார்கள். எமது விற்பனைக்கான மிக நல்ல நேரமும் இடமும் இதுவே "என்றிருந்தது. ஆம் ! ஆளுமைக் கூறு முடிவு களில் பல மாற்றங்களைச் செய்யும்.

இதற்கு அடுத்த படிநிலையில், இதேபோன்ற முடிவை எடுக்க இருக்கும் ஒரு புதியவருக்கு நாங்கள் ஆலோசனை சொல்வதான அகக்காட்சிக்குள் சென்று வரலாம். எதையும் மொழி வடிவில் கொண்டு வரும்போது , புதிய தரிசனங்கள் தோன்றும்.

நிறைவு நிலையில், குறிப்பிட்ட துறையில் நிபுணத்துவம் பெற்ற ஒருவர் அல்லது இருவரின் ஆலோசனையையும் பெறுவது நல்லதுதான்.


இப்போது முடிவை மதிப்பிட்டு ,திரும்பிப் பார்த்து ,உறுதி செய்து செயற்படுத்த வேண்டியதுதான்.! ஆ! தீர்மானம் எடுப்பது என்பது அவ்வளவு இலேசான காரியமில்லைத்தான் போலிருக்கிறது. ஏனென்றால், "தீர்மானம் எடுத்தலும் தீர்ப்பிடலும்" என்ற தலைப்பில் முன்னோடி ஆய்வு செய்த "டானியல் கனேமன்" (Daniel Kahneman)என்ற உளவியலாளருக்கு 2002ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

(தொடர்ந்து பேசுவோம்)

தாட்சாயணி

# திருப்பங்கள் இணைத்த பெண்கள்

**சோலைக்குயில் அவைக்காற்றுக்கள வெளியீடாக வெளிவந்த ஒன்பது பெண் எழுத்தாளர்களின் குறுநாவலான திருப்பங்கள் பற்றிய ஒரு பார்வை**




சரிநிகர் சமானமாக எல்லாத் துறைகளிலும் பெண்களின் பங்களிப்பு தற்காலத்தில் அதிகமாக இருப்பினும் படைப்பிலக்கியத் துறையில் அவர்கள் தொடர்ந்து இணைந்திருப்பது என்பது இடைவெளிகளையே கொண்டிருக்கிறது என்பதை என்னால் அவதானிக்க முடிகிறது. படைப்புணர்ச்சி அதிகமாக முகிழ்க்கும் காலங்களில் ஆர்வத்துடன் எழுத ஆரம்பிக்கும் பெண்கள் சிறிது காலத்தின் பின் பல்வேறுபட்ட காரணங்களால் மெதுவாக ஒதுங்க ஆரம்பிக்கிறார்கள்.

நான் எழுத வந்த காலத்திலும் எனக்குப் பின் எழுதிய பெண் எழுத்தாளர்கள் மட்டத்திலும் அவதானித்த என் பார்வையில் எனக்கு முந்தைய தலைமுறையில் பெருவாரியான பெண் எழுத்தாளர்கள் எழுதிக் கொண்டிருந்தது பெரும் ஆச்சரியத்தையே தருகின்றது. குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட ஒரு சிலரின் எழுத்துக்களே அதிகமாக வந்து பின் அவர்கள் எழுதுவது குறைய இன்னொரு தொகுதியினர் எழுத வருவதுண்டு. ஆனால் குறித்த காலத்தில் ஒன்பது பெண்கள் சேர்ந்து ஒரு குறுநாவலை எழுதிய அதிசயம் 1980 களில் நடந்திருக்கிறது. தொலைபேசி, மின்னஞ்சல் ஆகிய தொடர்பாடல் சாதனங்கள் இன்று மலிந்துள்ள காலத்தில் கூட இவ்வாறான ஒரு முயற்சி இருந்ததாக நான் அறியவில்லை. எனினும் ஆண் எழுத்தாளர்களும், பெண் எழுத்தாளர்களும் இணைந்து எழுதிய நாவல்கள் சில, அண்மைக் காலங்களில் வெளியாகியுள்ளதை அறிய முடிகிறது.

அவ்வாறாயின் அவ்வெழுத்தாளர்கள் ஒருவரோடொருவர் கடித மூலம் தொடர்பு கொள்வதற்கு மாதக்கணக்கு ஆகியிருக்கும் என நினைத்தேன். ஏனெனில் இவ்வாறான கடிதப்பரிமாற்றம் வெளி மாவட்டங்களிலிருந்து நம்மைச்சேர மாதக் கணக்கில் எடுப்பதுண்டு. எனினும் இக்கதை எழுதிய போருக்கு முந்தைய காலகட்டங்களில் ஒரு நாள் அனுப்பிய கடிதம் மறுநாளே தமக்குக் கிடைப்பதாக இக்குறுநாவல் எழுத்தாளர்களில் ஒருவரான கோகிலா மகேந்திரன் தெரிவித்தது எனக்கு வியப்பை ஏற்படுத்தியது.

திருப்பங்கள் எனும் இக்குறுநாவல் இலங்கையின் பல பாகங்களிலும் இருந்த ஒன்பது பெண் எழுத்தாளர்களால் ஒவ்வொரு அத்தியாயங்களாக எழுதப்பட்டு ஒன்பது அத்தியாயங்களுடன் நிறைவு பெற்றிருக்கிறது. தத்தம் மொழிநடையுடன் ஒவ்வொருவரும் எழுதியிருப்பினும் உணர்வுகள் மாறாது தொடர்ச்சியாகக் கடத்தப்பட்டதில், நிறைவாகக் கிடைத்த வாசமலரின் வாசனையில் வாசகர்கள் திளைக்க முடிகிறது. அன்றைய காலகட்டத்திலிருந்த சமூகப் பிரச்சினை மிக உணர்வுபூர்வமாக ஒவ்வொருவர் பேனாவாலும் கையாளப்பட்டிருக்கிறது. ஆச்சரியம் என்னவென்றால் இதில் வருகின்ற யாழ்ப்பாண மொழிநடையும், வழக்காறுகளும், மற்றும் மலையக மொழிவழக்கும் நிலக்காட்சிகளும் அவ்வப் பிரதேசம் சாராத இஸ்லாமிய, கிழக்கிலங்கை எழுத்தாளர்களாலும் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டமையே ஆகும்.

இந்நாவலின் பேசுபொருளை எடுத்துக் கொண்டால் சராசரி யாழ்ப்பாணத்து இளைஞனான முரளி மலையகக் கிராமம் ஒன்றில் தொழில் நிமித்தம் ஆசிரியராகக் கடமையேற்க நேரிடுகிறது. இரண்டு தங்கைகளுடைய அவனது குடும்பம் அவனை நம்பியே இருப்பதான ஞாபகமூட்டலுடனான அறிவுரைகளுடன் தந்தை வழியனுப்பி வைக்கிறார், எனினும் மலையகப் பெண்ணான ரமணியை விரும்பி அவளை மணப்பதன் மூலம் பெற்றவர்களின் கனவில் மண்ணள்ளிப் போடுகிறான் முரளி. ஒரு மலையகப் பெண்ணை மணப்பதால் சமூகத்திடம் அவன் கேட்கும் இழிபேச்சுகள். அதேசமயம் மலையகத்து மக்கள் அவனைப் பார்க்கும் விதம் எனக் கதை நகர்ந்து இறுதியில் தங்கையின் திருமணம் இவனால் குழம்பி விடுகிற போது ஏற்படும் தாயின் சாவு அவனை அதிர்ச்சி யடைய வைக்கிறது. அவர்களைப் புரிந்து கொள்ளாத தந்தை யையும் தங்கையையும் விட்டு விட்டுத் தன்னை அழைத்துச் செல்லுமாறு அவனது சின்னத் தங்கை கோருகிறாள். இவ்வாறாக சமூக மாற்றத்தைத் தனி ஒருவனாக நிகழ்த்த விரும்பிய முரளி தோற்றுப்போய் அங்கிருந்து புறப்படுவதாக நாவல் நிறைவுறுகிறது.

யாழ்ப்பாண வாழ்வியலில் ஆண்பிள்ளைகளுக்கு இருந்த பொறுப்பும் ஒவ்வொரு குடும்பத்திலும் பெண்பிள்ளைகளுக்கான சீதன மாற்றீடுகளாக அவர்களின் ஆண் சகோதரர்களைப் பெற்றவர்கள் கருதியிருந்தனர் என்பதும் அனாயாசமாகக் கதையினூடு இழையோடுகிறது. அன்றைய காலகட்டத்தில் எரியும் பிரச்சினையாக இவ்வாறான பிரச்சினைகள் ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்காமல் போனதில்லை. சிலர் துணிந்து சுற்றத்தை எதிர்த்துப் புதிய வாழ்க்கையோடும், வேறு சிலர் காதலை மறந்து சகோதரியர்க்கு நல்ல அண்ணனாகவும் மிகப்பலர் காதலை வெளிக்காட்டாத பெற்றோரின் நல்ல பிள்ளைகளாகவும் இருந்திருக்கக் கூடும். அந்த யதார்த்தத்தின் ஒரு துளி நிகழ்வை இந்த ஒன்பது எழுத்தாளர்களும் தத்தம் பார்வையில் கண்டு வாசகர்களுக்கு விருந்தாக்கியிருக்கின்றனர். இயல்பாயிருந்த ஒரு அழகிய காலத்தை மூன்று தசாப்தப் போர் பிரித்து விட்ட பிறகு, புலம்பெயர்வு, யுத்தம் ஆகிய காரணிகள் தந்த விளைவுகள் பலவாக மாற, இலக்கியக் களத்திலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. இருப்பினும் கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்தலென்பது வளர்ச்சிகளின் படிநிலைகளை அறிந்து கொள்ளுதல் தானே. அவ்வகையில் எமக்கு முந்தைய பெண்களின் சிந்தனையில் முகிழ்த்த எண்ணங்கள் இன்னொரு சந்ததிக்கான தூண்டலை அளிக்கக் கூடியன என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பத்திரிகைகள், சஞ்சிகைகள் மட்டுமே பொழுது போக்கு சாதனங்களாயிருந்த, மனதிற்கு இனியதாயிருந்த காலம் ஒன்றுண்டு. அதனை இன்றைய சந்ததியினர் உணர்ந்திருக்க முடியாது. ஒவ்வொரு வாரப் பத்திரிகைக்கும் காத்திருந்து வாசித்த காலம் அது. அந்தக் காலத்தின் இனிமையை இந்த ஒன்பது எழுத்தாளர்களும் ஒருங்கே உணர்ந்திருப்பார்கள். இன்று சிதறிப் பரந்திருக்கும் அவர்கள் இந்தத் தொகுப்பின் மூலம் அந்தக் காலத்தை அருகழைத்து நெஞ்சு நெகிழ்ந்திருக்கக் கூடும். அந்த உணர்வு இந்தச் சிறு நாவல் மூலம் புதிய வாசகர்களையும் தொற்றிக் கொள்ளட்டும்.




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.